# உயர்கல்வித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2023 – 2024

## மானியக் கோரிக்கை எண். 20


## முனைவர் க. பொன்முடி
**உயர்கல்வித் துறை அமைச்சர்**



©
தமிழ்நாடு அரசு
2023

**உயர் கல்வித் துறை**

**கொள்கை விளக்கக் குறிப்பு**

**2023–24**

**பொருளடக்கம்**


| வ. எண் | தலைப்புகள் | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1–6 |
| 2. | தொழில்நுட்பக் கல்வி | 8–53 |
| 3. | கல்லூரிக் கல்வி | 54–94 |
| 4. | பல்கலைக்கழகங்கள் | 95–192 |
| 5. | தமிழ்நாடு ஆவணக் காப்பகம் | 193–196 |
| 6. | தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் | 197–203 |
| 7. | தேசிய உயர் கல்வித் திட்டத்திற்கான (RUSA) மாநில இயக்குநரகம் | 204–217 |
| 8. | அறிவியல் நகரம் | 218–225 |
| 9. | தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் | 226–233 |
| 10 | தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் | 234–245 |
| 11. | தமிழ்நாடு மாநில உருது கழகம் | 246 |
| 12. | தமிழ்நாடு மாநிலத் தொழில்நுட்பக் கல்வி மன்றம் | 247–248 |
| 13. | தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம் | 249–252 |

# கொள்கை விளக்கக் குறிப்பு

# மானியக் கோரிக்கை எண்.20

# உயர்கல்வித் துறை

# 2023 – 2024

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(திருக்குறள் 423)

## 1. முன்னுரை

உயர்கல்வியின் வாயிலாக மக்களின் வாழ்க்கையில் மாற்றம் கொண்டுவர விழையும் அரசின் தொலைநோக்குப் பார்வையினால் பல முக்கிய முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சமூகத்தில் உள்ள சவாலான ஏற்றத்தாழ்வுகளைக் கருத்தில் கொண்டு கடைக்கோடி மக்களுக்கும் உயர்கல்வி சென்றடைவதற்கான அணுகுமுறையை அரசு நடைமுறைப்படுத்துகிறது. சிறந்த முடிவுகளை அடைவதற்காக அரசு எடுக்கும் முயற்சிகள் வலிமையுடையதாக உள்ளன. உயர்கல்வித் துறையின்

திறன் மேம்பாட்டு முயற்சிகள் மக்களிடம் குறிப்பிடத்தக்க வரவேற்பைப் பெறும். மக்களின் நிலை உணர்ந்து மேற்கொள்ளப்படும் அறிவியல் மற்றும் அறிவுப்பூர்வமான அரசின் அணுகுமுறை இத்திட்டங்களைத் தனித்துவமானதாகவும், பயனுள்ளதாகவும் ஆக்குகிறது. தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய தொடர் திட்டமிடுதல், தொலைநோக்குத் திட்டங்களைச் செயல்படுத்தத் தேவையான நிதி வளங்களை ஒதுக்கீடு செய்வதை உறுதிசெய்கிறது. தமிழ்நாட்டின் இளையோர் தம் வாழ்வில் குறிப்பிட்ட காலத்திற்குள் பயன்மிகு விளைவுகளை அடைவதற்காக, உரிய காலத்தில் செய்யப்படும் பயனுள்ள முயற்சிகள், இந்தச் செயல் திட்டங்களை உறுதி செய்கின்றன.

உயர்கல்வியில் வெற்றி என்பது அனைத்து மாணாக்கர்களுக்கும் சமமான, எளிதில் கிடைக்கக்கூடிய மற்றும் சிறந்த கல்வியினை வழங்கும் மூன்று கோட்பாடுகள் அல்லது வழிகாட்டுக்

கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டதாகும். மாணாக்கர்கள் உயர்கல்வி வழியாக உயர்ந்த நிலையினை அடைய தமிழ்நாடு அரசு இந்த மூன்று கொள்கைகளையும் தன்னுடைய முயற்சியினால் வெற்றிகரமாகச் செயல்படுத்தியுள்ளது. அனைத்துப் பகுதியிலுள்ள மாணாக்கர்களும் திறன்மிகு உயர்கல்வியினைப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக, மாணாக்கர்களின் திறனை மேம்படுத்தும் வகையில், பாடத்திட்டத்தினை மறுசீரமைக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. துறைசார்ந்த மற்றும் தொழிற்சாலையின் தேவைக்கேற்ப திறன் பயிற்சிகள் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. மாணாக்கர்கள், தங்கள் முழுத் திறனை வெளிப்படுத்தும் விதமாக, முழுமையான கல்வி அவர்களுக்கு வழங்கப்படுகிறது. பயிற்சிகள் மற்றும் பாடத்திட்டங்கள், நமது மாநில மாணாக்கர்களை உலகளாவிய நிலையில் போட்டியிடும் வகையில் தகுதியுடையவர்களாக்குகிறது.

“உங்களைத் தேடி உயர்கல்வி” என்ற குறிக்கோளுடன் மாணாக்கர்களின் கல்வித் தேவையை அவரவர்க்கு ஏற்றவாறு நிறைவு செய்தல் இம்மாநில அரசின் தனித்துவமான அணுகுமுறையாகும். சமூகப் பொருளாதார நிலையில் பின்தங்கிய மாணாக்கர்கள் மற்றும் விளிம்பு நிலை சமூகத்திற்குரிய இடர்களுக்குள்ளான மாணாக்கர்கள், நகர்ப்புற மற்றும் ஊரக ஏழை மாணாக்கர்களுக்கு உயர்கல்வியின் பயன்கள் சென்றடைவதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்வதன் மூலம் அவர்களை அதிகாரம் பெற்ற வாழ்வுத் தளத்திற்குக் கொண்டுவரும் குறிக்கோளை முன்வைத்து அரசு முனைந்து செயல்படுகிறது.

மாநிலத்தின் முன்னேற்றம் மற்றும் மக்களின் நல்வாழ்வை நோக்கிய ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அரசு அதற்கான நிதிநல்கை மூலம் ஆராய்ச்சிக்கு முன்னுரிமை அளித்து வருகிறது. கற்றல் மற்றும் சுய

முன்னேற்றத்திற்கான சூழலை உருவாக்க அரசு தொடர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதற்கான தகுதி மற்றும் திறன்களை மேம்படுத்தப் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. எவர் ஒருவரும் விடுபடவில்லை என்பதை உறுதி செய்யும் வகையில், சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரும் குறிப்பாக, பெண்கள் மற்றும் சமூகத்தின் நலிந்த பிரிவினர், கல்வி மற்றும் திறன் மேம்பாட்டு வரம்பிற்குள் கொண்டுவரப்படுகின்றனர். அறிவுசார்ந்த, திறன்மிகு பணியாளர்களைக் கொண்டிருப்பதுடன், அறிவார்ந்த வளர்ச்சிக்கான மக்களின் விருப்பத்தினை நிறைவேற்றும் வகையிலான உயர்கல்வியை அரசு வடிவமைத்து, அனைவருக்கும் சிறப்பாக வழங்கி வருகிறது.

தமிழ்நாடு அரசின் இலக்கு நோக்கிய அணுகுமுறையால் உயர்கல்வியில் மாணவர் சேர்க்கை வீதத்தில் (Gross Enrolment Ratio) இந்திய சராசரி அளவினைத் தமிழ்நாடு விஞ்சி நிற்கிறது.

தேசியக் கல்வி நிறுவனத் தரவரிசையில் (National Institutional Ranking Framework–NIRF), தமிழ்நாடு தொடர்ந்து தமது தகைசால் இடத்தைத் தக்க வைத்து வருகிறது. ஒட்டுமொத்தத் தரவரிசைப் பிரிவில் முதல் 100 இடங்களுக்குள் 18 உயர் கல்வி நிறுவனங்களும், முதல் 200 தரவரிசைகளுக்குள் 36 நிறுவனங்களும் இடம்பெற்றுள்ளன. முதல் 100 இடங்களுக்குள் 22 பல்கலைக்கழகங்களும், முதல் 200 தரவரிசைகளுக்குள் 33 பல்கலைக்கழகங்களும் இடம்பெற்றுள்ளன. அதேபோன்று, 32 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், முதல் 100 தரவரிசைப் பட்டியலிலும், 73 கல்லூரிகள், முதல் 200 தரவரிசைகளுக்குள்ளும் இடம்பெற்றுள்ளன. இவை மட்டுமன்றி, 10 ஆராய்ச்சி நிறுவனங்கள், முதல் 100 தர வரிசைகளுக்குள்ளும், 35 பொறியியல் கல்லூரிகள் முதல் 100 தரவரிசைகளுக்குள்ளும் இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. கலை மற்றும் அறிவியல் கல்லூரிப் பிரிவில், சென்னை மாநிலக் கல்லூரி மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது.

# நிதி ஒதுக்கீடு 2023–24

மானியக் கோரிக்கை எண்.20, உயர் கல்வித்துறை என்ற தலைப்பின் கீழ் மொத்த செலவினத் தொகை **ரூ.6,966.76 கோடி** ஆகும்.

| **வ. எண்** | **துறைத் தலைமையின் பெயர்** | **வரவு செலவு ஒதுக்கீடு ரூபாய் (கோடியில்)** |
|---|---|---|
| 1. | உயர் கல்வித்துறை, தலைமைச் செயலகம் | 8.39 |
| 2. | கல்லூரிக் கல்வி இயக்ககம் | 3,883.18 |
| 3. | தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் | 2,173.74 |
| 4. | பல்கலைக்கழகங்கள் | 769.84 |
| 5. | தமிழ்நாடு ஆவணக் காப்பகம் | 21.50 |
| 6. | தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் | 0.76 |
| 7. | தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் | 5.03 |
| 8. | அறிவியல் நகரம் | 1.73 |
| 9. | தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் | 102.22 |
| 10. | தமிழ்நாடு மாநிலத் தொழில்நுட்பக் கல்வி மன்றம் | 0.37 |
| | **மொத்தம்** | **6,966.76** |

# 2. தொழில்நுட்பக் கல்வி

## 2.1. முன்னுரை

நம் நாட்டின் மனிதவள மேம்பாட்டிற்காக தொழில்நுட்பத் திறன்மிகு மனிதவளத்தை உருவாக்குவதிலும், தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதிலும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும், தொழில்நுட்பக் கல்வி மிகவும் முக்கியமான பங்காற்றி வருகிறது. சமூகம் மற்றும் தொழிற்சாலைகளின் தேவைகளுக்கு ஏற்ப, மனிதவளத்தை உருவாக்குவதன் மூலம், வளரும் நாடுகளில் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு தொழில்நுட்பக் கல்வி ஒரு கருவியாக உள்ளது.

பொறியியல் மற்றும் தொழில்நுட்பம், மேலாண்மை, கட்டடவியல், நகரத் திட்டமிடல், மருந்தியல், கலை மற்றும் கைவினைத் தொழில்நுட்பம், உணவக மேலாண்மை மற்றும் சமையல் தொழில்நுட்பம் போன்ற

துறைகளுக்கான பட்டம் மற்றும் பட்டயப் படிப்புகளைத் தொழில்நுட்பக் கல்வி வழங்கி வருகிறது.

பொறியியல் படிப்பானது, அறிவியல் கோட்பாடுகளையும் பொறியியல் கொள்கைகளையும் ஒருங்கிணைக்கிறது. இது பொருளாதார வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல், மருத்துவப் பராமரிப்பு, தேசியப் பாதுகாப்பு அமைப்புகளுக்கும் இன்னும் பிற பயனுள்ள துறைகளுக்கும் தனது பங்களிப்பினை வழங்கி வருகிறது. பொறியியல் வல்லுநர்களுக்கும் தொழில்நுட்பவியலாளர்களுக்கும் இடையே ஒரு பாலமாக இருந்து தொழிற்சாலையின் தளவாடப் பணிகள் சார்ந்த செயல்களுக்கு உறுதுணையாக விளங்கும் தொழில்நுட்பத் திறன் கொண்ட மனித வளத்தை உருவாக்குவது பட்டயக் கல்வியின் நோக்கமாகும். பட்டயக் கல்வியானது, தொழில் மயமாக்கலின் சுயசார்பு சார்ந்த சவால்களை எதிர்கொள்ள மாணாக்கர்களைப் பயிற்றுவிக்கிறது.

இம்மாநிலத்தின் தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் 1957 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 14 ஆம் நாள் உருவாக்கப்பட்டது. இவ்வியக்ககம் தொழில்நுட்பக் கல்வி வளர்ச்சிக்கான செயல்பாடுகளைக் கண்காணித்து ஒருங்கிணைப்பதோடு மட்டுமல்லாமல், புதிய பாடப் பிரிவுகளை உருவாக்குவதிலும், பாடத்திட்டங்களை மேம்படுத்துவதிலும், ஆராய்ச்சி மேம்பாட்டிற்கான பணிகளை ஊக்குவிப்பதிலும் முக்கியப் பொறுப்பு வகிக்கிறது. மேலும், இவ்வியக்ககம், தட்டச்சு, சுருக்கெழுத்து, கணக்கியல் மற்றும் அலுவலகக் கணினி பயன்பாடு குறித்த சான்றிதழ் படிப்பு ஆகியவற்றிற்கான அரசு தொழில்நுட்பத் தேர்வுகளையும் நடத்திவருகிறது.

இம்மாநிலம், அதிகப்படியான பட்டப்படிப்பு மற்றும் பட்டயநிலை தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களையும் பெற்றுள்ளது. அதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:–

**தமிழ்நாட்டில் உள்ள தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை (2022-23)**

| வகைப்பாடு | பட்டப்படிப்பு கல்லூரிகள் | பட்டயப் படிப்பு கல்லூரிகள் | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | பொறியியல் கல்லூரிகள் / கட்டடக்கலைக் கல்லூரிகள் | பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் | உணவக மேலாண்மை மற்றும் சமையல் தொழில்நுட்பப் பயிலகங்கள் | |
| அரசு கல்லூரிகள் | 11 | 54 | - | 65 |
| அரசு உதவி பெறும் கல்லூரிகள் | 3 | 34 | - | 37 |
| சுயநிதிக் கல்லூரிகள் | 476 | 403 | 1 | 880 |
| இணைவு கல்லூரிகள் | - | 4 | - | 4 |
| அண்ணா பல்கலைக்கழகக் கல்லூரிகள் | 20 | - | - | 20 |
| **மொத்தம்** | **510** | **496** | | **1006** |

## 2.2. தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் மற்றும் பாடப்பிரிவுகள்

### 2.2.1. அரசு தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள்

தமிழகத்தில், தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் கட்டுபாட்டில் 11 அரசினர் பொறியியல் கல்லூரிகளும், 54 அரசினர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. தற்சமயம் 54 அரசினர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் 44,202 பட்டயப்படிப்பு மாணாக்கர்களும், 11 அரசினர் பொறியியல் கல்லூரிகளில், 15,721 இளநிலை பட்டப்படிப்பு மாணாக்கர்களும், ஏழு அரசினர் பொறியியல் கல்லூரிகளில் 438 முதுநிலை பட்டப்படிப்பு மாணாக்கர்களும் பயின்று வருகின்றனர்.

### 2.2.2. தொழில்நுட்பப் பாடப் பிரிவுகள்

54 அரசினர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில், 30 வகையான பட்டயப்படிப்புப் பாடப் பிரிவுகளும், 11 அரசினர் பொறியியல் கல்லூரிகளில் 12 வகையான இளநிலை பொறியியல்

பட்டப்படிப்புகளும், ஏழு அரசினர் பொறியியல் கல்லூரிகளில் 17 வகை முதுநிலைப் பொறியியல் பட்டப்படிப்பு பாடப்பிரிவுகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன. பயிற்றுவிக்கப்படும் அனைத்துப் பொறியியல் பாடப்பிரிவுகளுமே மாணாக்கர்களுக்குப் பொறியியல் தொடர்பான அடிப்படை அறிவினை வலுப்படுத்தி, அதேசமயம் தொழிற்சாலைகளின் தற்போதைய தேவைக்கேற்ப நவீன அறிவினை மேம்படுத்தி, மாணாக்கர்களை வேலைவாய்ப்புப் பெறத் தகுதியுள்ளவர்களாக உருவாக்குகிறது.

## 2.3. நலத்திட்டங்கள் மற்றும் புதிய முயற்சிகள்

### 2.3.1. அரசுப் பள்ளி மாணாக்கர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் 7.5 விழுக்காடு உள்ஒதுக்கீடு

அரசுப் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களிடையே சமத்துவத்தை உறுதி செய்யும் பொருட்டு, 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பள்ளிகளின் மாணவர்களுக்கு

முன்னுரிமையின் அடிப்படையில் இளநிலை தொழிற்கல்வி படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி அரசு ஒதுக்கீட்டு இடங்களில் 7.5 விழுக்காடு உள்ஒதுக்கீடு வழங்கப்பட்டது. மாணாக்கர்களுக்கான கல்விக்கட்டணம், விடுதிக் கட்டணம், போக்குவரத்துக் கட்டணம் போன்ற முழுக்கட்டணத்தையும் அரசே ஏற்கும் என்றும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இது தொடர்பாக, 7.5 விழுக்காடு சிறப்பு உள் இடஒதுக்கீட்டின் கீழ் பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கை பெற்ற அரசுப் பள்ளி மாணாக்கர்களுக்கு மேற்காண் கட்டணத் தொகையினை வழங்குவதற்காக, ரூ.151.73 கோடி நிதியினை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

2021–22 ஆம் கல்வியாண்டில், 7,876 அரசுப் பள்ளி மாணாக்கர்கள், இத்திட்டத்தின் கீழ் பொறியியல் சேர்க்கை பெற்றுள்ளனர். 2022–23 ஆம்

கல்வியாண்டில், 8,771 அரசுப் பள்ளி மாணாக்கர்கள் பொறியியல் சேர்க்கை பெற்றுள்ளனர். இதில், அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள CEG, MIT, ACT மற்றும் SAP ஆகிய துறைகளில் 161 அரசுப் பள்ளி மாணாக்கர்கள் சேர்க்கை பெற்றுள்ளனர்.

### 2.3.2. முதன்மையான உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்ற அரசுப் பள்ளி மாணாக்கர்களுக்கு உதவித் தொகை

2022-23 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், இந்தியத் தொழில்நுட்பக் கழகம், இந்திய அறிவியல் கழகம் மற்றும் அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகம் போன்ற முதன்மையான உயர்கல்வி நிறுவனங்களில் அரசுப் பள்ளி மாணாக்கர்களைச் சேரத் தூண்டும் வகையில், முழுச் செலவையும் அரசே ஏற்கும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. நான்கு ஆண்டுகளுக்கான அனைத்துக் கட்டணத் தொகையும், மாணாக்கர்களுக்கு அரசால் வழங்கப்படுகிறது. 2021-22 ஆம் ஆண்டில் ஒரு மாணவரும், 2022-23 ஆம் ஆண்டில் ஒரு மாணவரும்

சென்னை இந்தியத் தொழில் நுட்பக் கழகத்தில் சேர்க்கை பெற்றனர்.

### 2.3.3. முதல் தலைமுறை பட்டதாரி மாணாக்கர்களுக்குக் கல்விக் கட்டணச் சலுகை

சமூகத்தின் அனைத்துப் பிரிவினைச் சார்ந்த மாணாக்கர்களும், தொழிற்கல்வி பயில்வதற்காக அரசு பல முயற்சிகளை எடுத்து வருகிறது. மாநிலத்திலுள்ள அனைத்துப் பொறியியல் கல்லூரிகளிலும், ஒற்றைச் சாளரக் கலந்தாய்வு மூலம் நேரடி சேர்க்கை பெறும் முதல் தலைமுறைப் பட்டதாரி மாணாக்கர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை (Tuition Fee Concession) வழங்குவதும் இம்முயற்சிகளில் ஒன்றாகும். இத்திட்டம் 2010–11 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2021–22 ஆம் கல்வியாண்டில், 1,46,559 மாணாக்கர்களுக்கு ரூ.353.34 கோடியும், 2022–23 ஆம் கல்வியாண்டில்,

1,45,695 மாணாக்கர்களுக்கு ரூ.356.11 கோடியும், முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்கான கல்விக் கட்டணச் சலுகையாக வழங்கப்பட்டுள்ளது.

## 2.3.4. புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழ் மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள்

தமிழ்நாட்டில் வசிக்கும் புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழ் மாணாக்கர்களும் பி.இ. / பி.டெக். பட்டபடிப்புகள் மற்றும் எம்.பி.ஏ. / எம்.சி.ஏ. / எம்.இ. / எம்.டெக். / எம்.ஆர்க். / எம்.பிளான். போன்ற முதுநிலைப் பட்டப்படிப்புகள் பயில ஏதுவாக, ஒற்றைச் சாளரக் கலந்தாய்வில் கலந்து கொள்ள, 2010 ஆம் ஆண்டு முத்தமிழ் அறிஞர் கலைஞரின் அரசால் அனுமதி வழங்கப்பட்டது.

மேலும், தகுதியுள்ள புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழ் மாணாக்கர்களுக்கும், தமிழ்நாட்டில் ஒற்றைச் சாளர முறைக் கலந்தாய்வின் மூலம் பொறியியல் கல்லூரிகளில் பயிலும் முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் கல்விக் கட்டணச்

சலுகை நீட்டிக்கப்பட்டுள்ளது. 2021–22 ஆம் கல்வியாண்டில், 19 மாணாக்கர்களும், 2022–23 ஆம் கல்வியாண்டில், 40 மாணாக்கர்களும் சேர்க்கை பெற்றுள்ளனர்.

### 2.3.5. முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி

பொருளாதாரத்தில் நலிவுற்ற மாணாக்கர்கள் இளநிலை பொறியியல் பட்டப்படிப்பினை (பி.இ. / பி.டெக்) படிப்பதற்கு ஊக்குவிக்கவும் மற்றும் தொடர்ந்து பயில்வதற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியின் கீழ் அரசால் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி உதவித்தொகையால் 2021–22 ஆம் ஆண்டில், 32 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர். 2022–23 ஆம் கல்வியாண்டில் 102 மாணாக்கர்களுக்கு நிதி உதவித் தொகையாக ஒவ்வொரு மாணவருக்கும் ரூ.50,000/– வழங்கப்படவுள்ளது.

2023–24 ஆம் கல்வியாண்டிலிருந்து 7.5 விழுக்காடு சிறப்பு ஒதுக்கீட்டில் உதவிபெறும் அரசுப் பள்ளி மாணாக்கர்கள் மற்றும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் மாணாக்கர்கள் தவிர்த்து, இத்திட்டத்திற்கான வரன்முறைகளை நிறைவு செய்யும் பிற மாணாக்கர்கள் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து உதவித்தொகை பெறத் தகுதியுடையவராவர்.

### 2.3.6. முதுநிலை பட்டப்படிப்பு மாணாக்கர்களுக்கான உதவித்தொகை

முதுநிலை பட்டப்படிப்பு மாணாக்கர்கள் தங்கள் படிப்பில் கவனம் செலுத்த ஊக்குவிப்பதற்கும், ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட அவர்களை ஊக்குவிப்பதற்கும், அரசு பொறியியல் கல்லூரிகளில் பயிலும் 600 முதுநிலை பட்டதாரி மாணக்கர்களுக்கு 2017–18 ஆம் ஆண்டு முதல் மாதாந்திர உதவித் தொகையாக ரூ.6,000/– வழங்க, தமிழக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாடு பொது நுழைவுத்

தேர்வு மதிப்பெண் (TANCET SCORE) அடிப்படையில் மாணாக்கர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் 2021-22 ஆம் ஆண்டின் மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, இத்திட்டத்தின்கீழ் பயனாளிகளின் எண்ணிக்கை 600-லிருந்து 1,200 ஆக உயர்த்தப்பட்டது. அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகள், அண்ணா பல்கலைக்கழகத் துறைகள், அண்ணா பல்கலைக்கழக உறுப்பு பொறியியல் கல்லூரிகள், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துறைகள், தேசிய தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (NITTTR), மத்திய பெட்ரோல் இரசாயன பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் பயிலகம் (CIPET) மற்றும் மேற்காணும் அனைத்துப் பயிலகங்களிலும் உள்ள சுயநிதிப் பாடப்பிரிவுகளில் முதுநிலைப் பட்டமேற்படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு உதவித்தொகை வழங்குவதற்கு ஏதுவாக அரசால், தொடர் செலவினமாக ரூ.8.64 கோடி

நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2021-22 ஆம் கல்வியாண்டில், 666 முதுநிலை மாணாக்கர்களுக்கு ரூ.4.80 கோடியும், 2022-23 ஆம் கல்வியாண்டில், 921 மாணாக்கர்களுக்கு ரூ.6.63 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

**2.3.7. தொழிலக உட்பயிற்சி**

மாணாக்கர்கள் வகுப்பறைகளில் பெற்ற அறிவைப் பயன்படுத்துவதற்கும், ஒரு குறிப்பிட்ட தொழில் பற்றி அறிந்து கொள்வதற்கும் வாய்ப்பளிக்கும் விதமாக, அரசு பொறியியல் கல்லூரி மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மாணாக்கர்களுக்குத் தொழிலக உட்பயிற்சி அளிப்பதற்காக அரசு, தொடர் செலவினமாக ரூ.16.60 கோடி நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. 2,500 அரசு பொறியியல் கல்லூரி மாணாக்கர்கள் மற்றும் 7,500 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மாணாக்கர்கள் என மொத்தம் 10,000 மாணாக்கர்களுக்கு, ஒவ்வொரு ஆண்டும்

தொழில்நுட்பத் திறனை மேம்படுத்த 25 நாட்களுக்கு தொழிலக உட்பயிற்சி அளிப்பதற்கு, ஒரு மாணாக்கருக்கு ரூ.16,600/- வீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது. தொழிலக உட்பயிற்சியினை வெற்றிகரமாக முடித்தால், உட்பயிற்சி வழங்கும் நிறுவனத்திலேயே வேலை பெறவும் இது வாய்ப்பாக உள்ளது.

### 2.3.8. அயலக மொழி கற்பித்தல்

வேலைவாய்ப்பு மற்றும் உயர் கல்வியில் நல்ல வாய்ப்பினைப் பெற ஆர்வமுள்ள மாணாக்கர்களுக்கு உதவிடும் வகையில், தமிழகத்தில் உள்ள 10 அரசு பொறியியல் கல்லூரிகளில் இறுதியாண்டு பயிலும் மாணக்கர்களுக்கு ஜெர்மன், பிரெஞ்சு மற்றும் ஜப்பானிய மொழிகள் கற்றுத்தரப்படுகின்றன. இதன் மூலம் 2022-23ஆம் கல்வியாண்டில், 10 அரசு பொறியியல் கல்லூரிகளிலிருந்து 600 இறுதியாண்டு மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

### 2.3.9. போட்டித் தேர்வுகளுக்குத் தீவிரப் பயிற்சி

2022-23 ஆம் ஆண்டு 10 அரசு பொறியியல் கல்லூரிகளில் B.E. / B.Tech. இறுதியாண்டு பயிலும் 500 மாணாக்கர்களுக்குப் போட்டித் தேர்வுகளான CAT / GMAT / GRE / IELTS மற்றும் TOEFL போன்றத் தேர்வுகளுக்குத் தீவிரப் பயிற்சி அளிக்கப்பட்டது. பொறியியல் பட்டப்படிப்பு பயிலும் மாணாக்கர்களை உயர்கல்விக்கான போட்டித் தேர்வுகளுக்குத் தயார்படுத்தி, அதில் வெற்றிபெறச் செய்வது மட்டுமல்லாமல், உள் மற்றும் வெளிநாடுகளில் வேலை வாய்ப்புகளுக்கான திறனை மேம்படுத்துவதற்கும் இப்பயிற்சி உதவி புரியும்.

### 2.3.10. போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம்

ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுடன் இணைந்து செயல்படுத்தும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை வழங்கும் இத்திட்டம், ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய

ஆதிதிராவிடர் மாணாக்கர்களுக்கு உயர்கல்வியினைப் பல நிலைகளிலும் இலவசமாக வழங்கும் நோக்கத்துடன் 2011–12 ஆம் கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் (சிறுபான்மைப் பயிலகங்கள் உட்பட) அரசு மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை பெற்ற மேற்குறிப்பிட்ட மாணாக்கர்களுக்கு, கட்டண நிர்ணயக் குழுவால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டாய மற்றும் திருப்பி அளிக்க இயலாத கட்டணங்கள் அனைத்தும் வழங்கப்பட்டு வருகின்றன. 2013–14 ஆம் கல்வியாண்டு முதல், மாணாக்கர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படுவதைத் தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், ஆதிதிராவிடர் நலத்துறையுடன் இணைந்து செயல்படுத்தி வருகிறது. 2021–22 ஆம் கல்வியாண்டில், 79,799 பொறியியல் மாணாக்கர்களுக்கு ரூ.401.18 கோடியும், 49,876 பட்டயப்படிப்பு மாணாக்கர்களுக்கு ரூ.167.55 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

### 2.3.11. பட்டயப்படிப்பு மாணாக்கர்களுக்குக் கல்விக் கட்டண விலக்கு

அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பட்டயப்படிப்பு பயிலும் மாணாக்கர்கள் மிகவும் சாதாரணமான குடும்பப் பின்னணியில் இருந்து வருகிறார்கள். அவர்கள் பட்டயப் படிப்பினைத் தேர்வு செய்வதன் முக்கிய நோக்கம், அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் குடும்பத்திற்கு ஆதரவளிப்பதற்காக, தொழில்நுட்ப அறிவினையும், திறன்களையும் வளர்த்துக்கொண்டு தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பினைப் பெறுவதேயாகும். எனவே, 2008–09 ஆம் கல்வியாண்டு முதல், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பட்டயப்படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்குக் கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து அரசு விலக்களித்துள்ளது. 2021–22 ஆம் கல்வியாண்டில், 42,479 பட்டயப் படிப்பு மாணாக்கர்களும், 2022–23 ஆம் கல்வியாண்டில், 43,123 பட்டயப் படிப்பு மாணாக்கர்களும் பயனடைந்துள்ளனர்.

## 2.3.12. கட்டணமில்லா பாடப் புத்தகங்கள் வழங்குதல்

2007-08 ஆம் கல்வியாண்டு முதல் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் அனைத்து முதலாமாண்டு மாணாக்கர்களுக்கும் பாடப்புத்தகங்கள் கட்டணமில்லாமல் வழங்கப்படுகின்றன. முதலாமாண்டு பட்டயப்படிப்பின் நான்கு முக்கியப் பாடங்களான ஆங்கிலம், பொறியியல் கணிதம், பொறியியல் இயற்பியல் மற்றும் பொறியியல் வேதியியல் ஆகிய பாடங்களுக்குப் புத்தகங்களை கட்டணமில்லாமல் வழங்குவதன் மூலம் மாணாக்கர்கள் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர்ந்து பயிலுவதை ஊக்கப்படுத்தவும், படிப்புகளில் சிறந்து விளங்கவும் அரசு உதவுகிறது. 2021-22 ஆம் கல்வியாண்டில், ரூ.37.97 இலட்சம் செலவிடப்பட்டு, 11,839 மாணாக்கர்களும், 2022-23 ஆம் கல்வியாண்டில், ரூ.42.31 இலட்சம் செலவிடப்பட்டு, 12,445 மாணாக்கர்களும் பயனடைந்துள்ளனர்.

**2.3.13. கட்டணமில்லாப் பேருந்துப் பயணச் சலுகை**

அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்கள் தங்கள் இருப்பிடங்களிலிருந்து அவர்கள் பயிலும் கல்லூரிகளுக்கு எளிதாகச் சென்றுவர வசதியாக, 2007–08 ஆம் கல்வியாண்டு முதல், கட்டணமில்லாப் பேருந்துப் பயணச்சலுகையை அரசு அளித்து வருகிறது. 2021–22 ஆம் கல்வியாண்டில், 41,978 மாணாக்கர்களும், 2022–23 ஆம் கல்வியாண்டில், 40,180 மாணாக்கர்களும் பயனடைந்துள்ளனர்.

**2.3.14. தமிழ் வழியில் பட்டயப் படிப்புகளை அறிமுகப்படுத்துதல்**

சென்னை, மைய பாலிடெக்னிக் கல்லூரி, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி மற்றும் நாகர்கோவில் ஆகிய ஐந்து இடங்களில் உள்ள அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில், கட்டடப் பொறியியல் மற்றும் இயந்திரப் பொறியியல் துறைகளில், தமிழ் வழியில் பட்டயப் படிப்பு 2022–23 ஆம் கல்வியாண்டு

முதல் தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம், மாணாக்கர்கள் பாடங்களின் கருத்துக்களையும் பயன்பாடுகளையும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். மேலும், மாணாக்கர்கள் தமிழ்வழிக் கல்வி மூலம் இடஒதுக்கீட்டின் அடிப்படையில் அரசுத் துறைகளில் வேலை வாய்ப்பினைப் பெற இது உதவும்.

### 2.3.15. மகளிருக்கான பட்டயப் படிப்புகளை அறிமுகப்படுத்துதல்

பட்டயப்படிப்பில் மாணவியரின் சேர்க்கையை அதிகரிப்பதற்கும், உயர்கல்வியில் சேர்வதை ஊக்குவிப்பதற்கும் மற்றும் மொத்த சேர்க்கை விகிதத்தினை உயர்த்துவதற்கும், 2022–23 ஆம் ஆண்டில் மகளிருக்காக ஆறு பட்டயப் படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவை, சென்னை, மைய பாலிடெக்னிக் கல்லூரியில் இயந்திரவியல் (கணினி கொண்டு வடிவமைத்தல்) பாடப் பிரிவு, சென்னை மாநில வணிகப் பயிலகத்தில் அலுவலக மேலாண்மை மற்றும் கணினிப் பயன்பாடுகள்

பாடப்பிரிவு, கோவை அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் இதயத் துடிப்பு பதிவி தொழில்நுட்பப் பாடப்பிரிவு, மதுரை தமிழ்நாடு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் இணையவலை வடிவமைப்புத் தொழில்நுட்பப் பாடப் பிரிவு, நாகர்கோவில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் உயிர் மருத்துவ மின்னணுவியல் பாடப்பிரிவு மற்றும் சென்னை டாக்டர் தர்மாம்பாள் அரசு மகளிர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் கட்டட உள்ளழகியல் பாடப் பிரிவு போன்றவை ஆகும்.

### 2.3.16. புதிய பட்டயப் படிப்புகளை அறிமுகப்படுத்துதல்

தொழில் நிறுவனங்களின் தேவைகளுக்கேற்பவும் மொத்த மாணாக்கர்கள் சேர்க்கை விகிதத்தை அதிகரிக்கவும், ஆடை வடிவமைப்பு பட்டயப் படிப்பினை, கரூர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியிலும், வேளாண்மை பொறியியல் பட்டயப் படிப்பினை, அரியலூர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியிலும், இயந்திர மின்னணுவியல் பட்டயப்

படிப்பினை, ஊத்தங்கரை அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியிலும், தளவாடத் தொழில்நுட்பப் பட்டயப்படிப்பினை, தூத்துக்குடி, மதுரை மற்றும் புத்தூர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியிலும் மற்றும் தானியங்கிப் பொறியியல் (Sandwich) பட்டயப்படிப்பினை, வேலூர் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் சென்னை, மைய பாலிடெக்னிக் கல்லூரியிலும் என ஐந்து புதிய பட்டயப் படிப்புகள் 2022–23 ஆம் கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.3.17. தொழில்துறைத் தேவைகளுக்கு ஏற்பப் பாடத்திட்ட சீரமைப்பு

பல்லாண்டுகளாக தொழில்துறைக்குத் தேவையான அதிக எண்ணிக்கையில் தொழில்நுட்பவியலாளர்களைத் தமிழ்நாடு அரசு உருவாக்கி வருகிறது. மாநிலத்தின் திறன் உருவாக்கத்திற்கும் பெரும் தொழில்மயத்திற்குத் தேவையான, திறன் வாய்ந்த தொழில்நுட்பப்

பட்டயதாரிகளை உருவாக்குவதிலும், பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் முக்கியப் பங்காற்றுகின்றன.

குறைந்த ஊதியம் மற்றும் அதிக உடலுழைப்பு என்ற அடிப்படையில் தொழிலாளர்களை உருவாக்குவதற்குப் பதிலாக, தேர்ந்த தொழில்நுட்ப அறிவு மற்றும் அறிவுத்திறன் சார்ந்தவர்களை உருவாக்குவதை தனது பொருளாதார நோக்கமாக தமிழ்நாடு கொண்டுள்ளது. தொழில்நுட்பம் வளர்ந்ததால், தொழில்துறையின் தேவைகளும் மாறிக்கொண்டே வருகின்றன. தொழில்துறை – கல்வி நிறுவனங்களை இணைக்கும் திறன் சார்ந்த பட்டதாரிகளே தற்போதைய தேவையாகும். அடுத்துவரும் தலைமுறையைத் தொழில்நுட்பத் திறன் வாய்ந்தவர்களாக உருவாக்கவும், தொழில்நுட்பத்தின் பயனை அடையவும், புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்க ஊக்குவிக்கவும், தற்போது இருக்கும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளின்

பாடத்திட்டத்தை மாற்றியமைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

இது குறித்து, பல்வேறு தொழிற்சாலைகள் மற்றும் தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்திடமிருந்து கருத்துக்களைப் பெற்று, பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளின் பாடத்திட்டத்தை மறுசீரமைப்பு செய்ய தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது. இந்தப் பாடத்திட்ட மறுசீரமைப்பானது, மாணவர்களின் வேலைவாய்ப்புத் திறனையும், தொழில் முனையும் திறனையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இப்புதிய பாடத்திட்டமானது 2023-24 ஆம் கல்வியாண்டு முதல் அமல்படுத்தப்பட உள்ளது.

**2.3.18. தொழில் முனைவு மேம்பாடு மையங்களை நிறுவுதல்**

சென்னையிலுள்ள தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்துடன் (Entrepreneurship Development Innovative

Institute (EDII)) இணைந்து, பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்கத் திட்டத்திற்காக (Entrepreneurship Development and Innovation Programmes) ஐந்து பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் ஐந்து தொழில் முனைவோர் மேம்பாட்டு மையங்கள், தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால் நிறுவப்பட்டுள்ளன. இம்மையங்கள் மூலம், 26 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. 717 ஆசிரிய உறுப்பினர்கள் மற்றும் 3,831 மாணாக்கர்கள் பங்கேற்றனர். தொழில் முனைவோர் மற்றும் புத்தாக்க விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், தொழில் முனைவோர் மேம்பாடு நிறுவனத்துடன் இணைந்து அந்தந்த இணைப்புக் கல்லூரிகளில் நடத்தப்படுகின்றன.

### 2.3.19. தொழிற்சாலைகளின் தேவைக்கேற்பக் கூடுதல் பாடங்கள்

தொழில்துறையின் தேவைகளுக்கேற்றவாறு மாணவர்களின் திறன்களை மேம்படுத்தி சிறந்த வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை அரசு அங்கீகரித்து, வேலைவாய்ப்புத் திறன் மற்றும் பணி அறிவை மேம்படுத்தும் நோக்கில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து, 2021–22 ஆம் கல்வியாண்டு முதல் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் இறுதியாண்டு மாணாக்கர்களுக்கு ரூ.3.00 கோடி செலவில் தொழில்துறைகளின் தேவை அடிப்படையிலான படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ், 3,000 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, தேர்ச்சிப் பெற்ற மாணாக்கர்களுக்கு குறுகிய கால திறன்பயிற்சிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. பாடங்களின் விவரம் பின்வருமாறு:–

| வரிசை எண். | கூடுதல் பாடங்கள் | மாணாக்கர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | இயந்திரவியல்<br>CNC Operator Machining Technician Level 3 – 320 Hours | 1200 |
| 2. | மின்னியல் மற்றும் மின்னணுவியல்<br>Electrical Assembly Operator – Control Panel – 200 Hours | 900 |
| 3. | மின்னியல் மற்றும் தொடர்பியல்<br>PLC Assembly Operator – 200 Hours | 900 |

### 2.3.20. பி.காம்., பட்டப்படிப்பில் நேரடி இரண்டாம் ஆண்டு சேர்க்கை

பட்டயப் படிப்புகளில் மொத்த சேர்க்கை விகிதத்தினை அதிகரிப்பதற்கும், பட்டயப் படிப்புகளில் மாணவ மாணவியர்களின் சேர்க்கையினை அதிகரிப்பதற்கும், பட்டயப் படிப்பு முடித்த மாணாக்கர்கள் உயர்கல்வியில் சேர ஊக்குவிப்பதற்கும், வணிகப் பயிற்சி பட்டயப் படிப்பில் தேர்ச்சி பெற்ற மாணாக்கர்கள், தமிழகத்தில் உள்ள அனைத்துப்

பல்கலைக்கழகங்கள் வழங்கும் அனைத்து இளநிலை வணிகப் பாடப்பிரிவுகளில் 2022–23 ஆம் கல்வியாண்டு முதல், நேரடியாக இரண்டாம் ஆண்டில் சேர்வதற்கு அரசால் ஆணை வெளியிடப்பட்டது. 2022–23 ஆம் கல்வியாண்டில், அரசு, அரசு நிதியுதவி, சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் நேரடியாக பி.காம். இரண்டாம் ஆண்டில் மொத்தம் 64 மாணாக்கர்கள் சேர்க்கை பெற்றுள்ளனர்.

### 2.3.21. பட்டயப் படிப்பு மாணாக்கர்களுக்கு மென்பொருள் பயிற்சி அளித்தல்

2021–22 ஆம் ஆண்டு, மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, தமிழகத்தில் உள்ள 51 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளின் மாணாக்கர்களுக்கு தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்துவதற்கும், அதன் மூலம் அவர்களின் வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதற்கும். மென்பொருள் பயிற்சி அளிப்பதற்காக, அக்டோபர், 2021

முதல் செப்டம்பர், 2022 வரையிலான ஒரு வருடத்திற்கு, தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், மும்பையில் உள்ள இந்தியத் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இப்பயிற்சியின் மூலம், 21,343 மாணாக்கர்கள் Python 3.4.3, Arduino, Q CAD, Scilab, Libre Office Suite போன்ற மென்பொருள் பயிற்சிகளை முடித்துள்ளார்கள்.

### 2.3.22. முதலமைச்சரின் ஆராய்ச்சி மானியத் திட்டம்

30.08.2022 அன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்பின்படி, உலகத்தரம் வாய்ந்த ஆராய்ச்சிகளை நமது மாநிலத்தில் மேற்கொள்ளவும், ஆசிரியர்கள், ஆராய்ச்சி மாணாக்கர்கள் மற்றும் இளநிலை மற்றும் முதுநிலை மாணாக்கர்களை ஆராய்ச்சி செய்ய ஊக்கப்படுத்தவும் 2023–24 ஆம் ஆண்டு முதல், முதலமைச்சரின் ஆராய்ச்சி மானியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அரசு உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும்

பல்கலைக்கழகங்களுக்கு அரசால் தொடர் செலவினமாக ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆராய்ச்சி மானியம், புதுமையான தொழில்நுட்பங்கள், தயாரிப்புகள் மற்றும் ஆய்வகங்களிலிருந்து வணிக மாதிரிகளைக் கொண்டு, ஆராய்ச்சியாளர்கள், கண்டுபிடிப்பாளர்களை ஆதரிக்கும் நோக்கத்தை ஊக்குவிக்கிறது. மேலும், புதிய தொழில்நுட்பம், தயாரிப்புகளை முயற்சித்து மதிப்பிடும் அனுபவத்தின் மூலம் சமூகங்களுக்கிடையில் அறிவியல் அணுகுமுறை, புதிய முயற்சி மற்றும் சமூகத்தை மேம்படுத்த உதவும் தயாரிப்புகள், செயல்முறைகளைப் பின்பற்றுவதற்கான தீவிரமான ஆர்வம், திறன் மற்றும் அணுகுமுறை ஆகியவற்றை உருவாக்குகிறது. தரமான ஆராய்ச்சியை ஊக்குவிக்கவும், பொறுப்பான ஆராய்ச்சியில் உலகளாவிய இயக்கவியலை ஆராய்வதற்காகவும், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு உயர்கல்வி

நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களிலிருந்து (கலை, அறிவியல் மற்றும் பொறியியல் போன்றவை) ஆராய்ச்சி முன்மொழிவுகள் சமர்ப்பிக்க அழைப்பு விடுக்கப்பட்டது. இதுவரை 1,960 ஆராய்ச்சிக் கருத்துருக்கள் பெறப்பட்டுள்ளன.

### 2.3.23. உலகத் திறன் அகாடெமி மற்றும் நவீனத் தொழில்நுட்ப உற்பத்தி மையம் அமைத்தல்

மின் உபகரணங்களை நிறுவல், தொழிலக கட்டுப்பாடுகள், தொழிலகத் தானியக்கமாக்கல், கட்டடத் தானியக்கமாக்கல் போன்ற உலகத் திறன்களுக்கு ஏற்ப, மாணாக்கர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கு ஏதுவாக, சென்னை, கோயம்புத்தூர், தருமபுரி, மயிலாடுதுறை, திருச்சிராப்பள்ளி மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள ஆறு அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில், ஸ்னைடர் எலக்ட்ரிக் இந்தியா நிறுவனத்துடன் இணைந்து ரூ.10 கோடி செலவில், தமிழ்நாடு திறன் மேம்பாடுக் கழகத்தின் நிதியுதவியுடன், உலகத் திறன் அகாடெமி மற்றும்

நவீனத் தொழில்நுட்ப உற்பத்தி மையம் அமைக்கப்பட்டு வருகிறது.

## 2.4. உட்கட்டமைப்பு வசதிகள்

### 2.4.1. கூடுதலாக விடுதிக் கட்டடங்களைக் கட்டுதல்

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, கோயம்புத்தூர், சேலம், காரைக்குடி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ள நான்கு அரசு பொறியியல் கல்லூரிகளில் கூடுதல் விடுதிக் கட்டடங்கள் கட்ட, அரசால் ரூ.34.10 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

காரைக்குடி, அழகப்பா செட்டியார் அரசு பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் வேலூர், தந்தை பெரியார் அரசு பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் இறுதிக்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கோயம்புத்தூர், அரசு தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் சேலம், அரசு பொறியியல்

கல்லூரிகளில், விடுதிக் கட்டடங்கள் கட்டும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

### 2.4.2. விளையாட்டு வசதிகளை மேம்படுத்துதல்

மாணாக்கர் சமூகத்தை ஒருங்கிணைக்கவும், பலப்படுத்தவும், நெறிப்படுத்தவும், மாணாக்கர்களைக் கல்வி சாராத விளையாட்டுச் செயல்பாடுகளில் ஊக்குவிக்கவும், மாநில மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கவும், அவர்களின் சாதனைகளை மேம்படுத்தவும், தமிழகத்தில் உள்ள 10 அரசு பொறியியல் கல்லூரிகளிலும், உள்விளையாட்டு அரங்கத்துடன் கூடிய விளையாட்டு வசதிகள் ரூ.80 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டு வருகிறது. 10 அரசு பொறியியல் கல்லூரிகளில், உள்விளையாட்டு அரங்கம் கட்டும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

### 2.4.3. பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்

**2.4.3.1.** தமிழகத்தில் உள்ள 26 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில், ரூ.100 கோடி மதிப்பீட்டில், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டும் மொத்த மாணாக்கர்கள் சேர்க்கை விகிதத்தை அதிகப்படுத்தவும், கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள், பணிமனைகள், கழிவறை வசதிகள் மற்றும் உணவறை போன்ற வசதிகள் பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

**2.4.3.2.** தொழில்திறன் அடிப்படையிலான புதுப்பிக்கப்பட்ட பாடத்திட்டத்தின்படி, அரசு பொறியியல் கல்லூரிகளிலும், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளிலும், சுற்றுச்சூழல் ஆய்வகம், பொருட்களின் இணைய ஆய்வகம், கணினி ஆய்வகம் மற்றும் பிற ஆய்வகங்களை நவீனப்படுத்துவதற்காகப்

பல்வேறு இயந்திரங்களையும் உபகரணங்களையும் கொள்முதல் செய்வதற்கு, தமிழ்நாடு அரசு ரூ.50 கோடி நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

### 2.4.4. "செய்கலைஞர் ஆய்வுக் கூடம்" நிறுவுதல்

மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்களின் தனித்திறமைகள், கற்றல் உத்திகள், படைப்பாற்றல், ஆக்கப்பூர்வமான சிந்தனைகள் ஆகியவற்றை செயல்முறை அறிவுத்திறனுடன் செயல்படுத்த காரைக்குடி, ஸ்ரீரங்கம், திருநெல்வேலி, சேலம் ஆகிய நான்கு அரசு பொறியியல் கல்லூரிகளிலும் மற்றும் மதுரையில் உள்ள தமிழ்நாடு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியிலும், தொழிற்சாலைகளுடன் இணைந்து "செய்கலைஞர் ஆய்வுக் கூடம் (Fab Makerspace Lab)" நிறுவப்படவுள்ளது.

மேலும், சேலம், திருநெல்வேலி மற்றும் ஸ்ரீரங்கம் ஆகிய இடங்களிலுள்ள அரசு பொறியியல் கல்லூரிகளில் “புத்தாக்க வழிகாட்டுதல்” என்ற

தலைப்பில் ஆசிரியர் மேம்பாட்டு பயிற்சி நடத்தப்பட்டது. இந்தப் பயிற்சிகளில், 111 ஆசிரியர்கள் பயனடைந்துள்ளனர். மேலும், தோராயமாக 1,200 மாணாக்கர்களுக்கு சிந்தனைத் திறன் பயிற்சி அளிக்கப்பட்டது. அவற்றில் 184 மாணாக்கர்கள் திட்டக் கருத்துருக்களை 45 புத்தாக்க வழிகாட்டுதல் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் வழிகாட்டுதலின்படி, சமர்ப்பித்துள்ளனர்.

### 2.4.5. 50 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் திறன்மிகு வகுப்பறைகள்

தரம்மிக்க தொழில்நுட்பக் கல்வியை மாணாக்கர்களுக்கு வழங்குவதற்கு, நன்கு மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய திறன்மிகு வகுப்பறைகள் அவசியம் என்பதால், தமிழகத்தில் உள்ள 50 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் ரூ.10 கோடி செலவில் திறன்மிகு வகுப்பறைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய திறன்மிகு வகுப்பறைகள்,

மாணாக்கர்களின் அறிவை மேம்படுத்தவும், கோட்பாடு உள்ளடக்கத்தை நிஜ வாழ்க்கையில் பயன்படுத்தவும் உதவுகின்றன. மேலும், மென்பொருள் மற்றும் உருவகப்படுத்தும் உள்ளடக்கங்கள் மூலம் இணையப் பாதுகாப்பு பயிற்சி (Cyber Security), கேஸ் கட்டிங் செயல்முறை (Gas Cutting Process), Fork lift பயிற்சி, Lean Manufacturing, கட்டடப் பாதுகாப்பு, கியர் பாக்ஸ் (Gear Box), மின்னாக்கி (Power Generator) எனப் பல்வேறு தொழில்நுட்ப பயிற்சிகள் இந்தத் திறன்மிகு வகுப்பறைகள் மூலம் வழங்கப்படவுள்ளன.

## 2.5. மின்-ஆளுகை

### 2.5.1. தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை-2022 (TNEA - 2022)

2019-20 ஆம் கல்வியாண்டு முதல், தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால் நடத்தப்பட்டு வருகிறது. கொரோனா பெருந்தொற்று காரணமாக 2020-21 ஆம் கல்வியாண்டிலிருந்து விண்ணப்பப்பதிவு, சான்றிதழ்

பதிவேற்றம், சான்றிதழ் சரிபார்ப்பு, சமவாய்ப்பு எண் வழங்குதல், தரவரிசைப் பட்டியல் வெளியீடு, சிறப்புப் பிரிவினர்களுக்கான கலந்தாய்வு, பொதுக் கலந்தாய்வு, தொழில்முறைக் கலந்தாய்வு, துணைக் கலந்தாய்வு, பட்டியலின அருந்ததியருக்கான காலியிடம், பட்டியலின வகுப்பினர்களுக்கான கலந்தாய்வு, ஒதுக்கீட்டுப் பட்டியல் வெளியிடுதல் போன்ற அனைத்தும், இணையவழி மூலமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. இதேபோன்று, 2021–22 ஆம் கல்வியாண்டிற்கான தமிழ்நாடு பொறியியல் சேர்க்கையும், இணையவழி மூலமாகவே நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. 2022–23 ஆம் கல்வியாண்டில் 93,290 மாணாக்கர்கள் அரசு ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை பெற்றுள்ளனர்.

மேலும், 2022–23 ஆம் கல்வியாண்டில், பிற சேர்க்கைகளான முதலாமாண்டு B.Arch. பட்டப்படிப்பு, B.E./B.Tech. இரண்டாமாண்டு நேரடி சேர்க்கை, B.E./B.Tech., பகுதிநேரப் பட்டப்படிப்பு, MBA /

MCA முதுநிலைப் படிப்புகள், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாமாண்டு / இரண்டாமாண்டு நேரடிச் சேர்க்கை / பகுதி நேரப் பட்டயப்படிப்பு ஆகிய அனைத்தும் இணையவழி மூலமாக நடைபெற்றுள்ளன.

பொறியியல் கல்லூரிகளில், இடஒதுக்கீட்டு ஆணை பெற்ற பின்பு கல்லூரிகளில் சேராதவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக, 2022–23 ஆம் கல்வியாண்டிலிருந்து, மாணாக்கர்களின் சேர்க்கையை உறுதிசெய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. ஒதுக்கீட்டை ஏற்று, கல்லூரிகளில் சேர விரும்புவோர், கல்லூரிகளிலும் மற்றும் தற்போதைய ஒதுக்கீட்டை ஏற்று மேல்நோக்கி நகர விரும்புவோர், பொறியியல் சேர்க்கை மையங்களிலும் கல்விக்கட்டணத்தைச் செலுத்தி சேர்க்கையை உறுதிப்படுத்துகின்றனர். அவ்வாறு உறுதி செய்யாதவர்களின் ஒதுக்கீட்டு இடங்கள், மேல்நோக்கிச் செல்லக் காத்திருக்கும் மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டன. இதன்

காரணமாக, கடந்த ஆண்டு சேர்க்கை பெற்ற 79,139 மாணாக்கர்களுடன் ஒப்பிடும்போது, இந்த வருடம் 93,290 மாணாக்கர்கள் பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்துள்ளனர். மாணாக்கர்களின் சேர்க்கை கடந்த ஆண்டைவிட 8.36 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

### 2.5.2. அனைத்து உயர்கல்வி நிறுவனங்களிலும், வளத் திட்டமிடலுக்கான மென் பொருளுடன் (LMS & ERP) ஒருங்கிணைந்த கற்றல் மேலாண்மை அமைப்பை நிறுவுதல்

தமிழகத்தில் உயர்கல்வித் துறையில் அரசின் இலக்குகளை அடைவதற்காக, சமூகத்தின் தேவைக்கேற்ப கொள்கைகள், சட்டங்கள், ஒழுங்குமுறைகளை வகுத்து, பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஏதுவாக, நிறுவன வளத் திட்டமிடுதலுக்கான, மென்பொருளுடன் கூடிய (Learning Management System integrated with an Enterprise Resource Planning (LMS & ERP)) ஒருங்கிணைக்கப்பட்ட கற்றல் மேலாண்மை

அமைப்பானது, அனைத்து உயர்கல்வி நிறுவனங்களிலும் நிறுவப்படவுள்ளது. இது தொடர்பான திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான திட்ட மேலாண்மை ஆலோசகரை நியமித்து, வடிவமைப்பு மற்றும் திட்டச் செயல்பாட்டிற்கான வளங்களை உருவாக்கும் செலவுக்காகவும், தமிழகத்தில் உள்ள நிறுவன வளத் திட்டமிடல் தீர்வுடன் ஒருங்கிணைக்கப்பட்ட கற்றல் மேலாண்மை அமைப்பின் தேர்வு மற்றும் அறிமுகம் போன்றவற்றிற்காகவும், 2021–22 ஆம் ஆண்டில் அரசு ரூ.4.09 கோடி நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

M/s. Price Waterhouse Cooper என்ற நிறுவனம், நிறுவன வளத் திட்டமிடல் மென்பொருளுடன் (LMS & ERP) ஒருங்கிணைந்த கற்றல் மேலாண்மை அமைப்பை நிறுவுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனம், உயர்கல்வித் துறையின் கீழுள்ள 13 பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்வி

இயக்குநரகம், கல்லூரிக் கல்வி இயக்ககம், அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்குச் சென்று அந்நிறுவனங்களுக்குத் தேவையான தகவல்களைக் கண்டறிந்துள்ளது. மேற்கண்ட நிறுவனம், அனைத்து செயல்பாட்டுத் தேவைகளையும் சரிபார்ப்பதற்காக, "எதிர்கால மாநிலத் தொழில்நுட்பச் செயலாக்க வரைபடத்தில் (Future State Technology Blueprint (FSTB))" ஆவணப்படுத்தி, சமர்ப்பித்துள்ளது. "எதிர்கால மாநிலத் தொழில்நுட்பச் செயலாக்க வரைபடத்தில் (FSTB)" குறிப்பிடப்பட்டுள்ள செயல்பாட்டுத் தேவைகளை மதிப்பாய்வு செய்வதற்காக, தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகத்தால், அனைத்துப் பங்குதாரர்களுடன் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. திட்டக் குழுவின் கருத்து மற்றும் பரிந்துரைகள் "எதிர்கால மாநிலத் தொழில்நுட்பச் செயலாக்க வரைபடத்தில் (FSTB)" இணைக்கப்பட்டன. மேற்படி

நிறுவனம், ஒரு "விரிவான திட்ட அறிக்கையைத் (DPR)" தயாரித்து, சரிபார்ப்புக்காகத் தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகத்திடம் சமர்ப்பித்துள்ளது. இந்தத் திட்டத்தினை 25.05.2025இல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.5.3. திட்டக் கண்காணிப்பு மையம்

தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில், புதிய மின் ஆளுகைச் செயல் திட்டத்தை வடிவமைத்து, மேம்படுத்தி நடைமுறைபடுத்துவதற்காகவும், மாநில அரசின் திட்டங்கள் மற்றும் ஒன்றிய அரசின் திட்டங்கள், மாணாக்கர் நலத்திட்டங்கள், அறிவிப்புகள் போன்றவற்றை மேற்பார்வையிடுவதற்காகவும், மேலும், மாணாக்கர்கள், தொழிலகங்கள் மற்றும் சமூகத்திற்கிடையே சிறப்பான ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி, தொழிற்கல்வியில் தனித்துவமான வளர்ச்சியை உருவாக்குவதற்கும், தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் திட்டக் கண்காணிப்பு மையம் உருவாக்கப்பட்டுள்ளது.

## 2.6. அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் சிறப்புப் பயிலகங்களில் ஆசிரியர்கள் நியமனம்

மாணாக்கர்களின் வாழ்க்கையை வடிவமைப்பதில் ஆசிரியர்கள் முக்கியப் பங்கு வகிக்கிறார்கள். மாணாக்கரின் எதிர்காலம் ஆசிரியரின் கைகளில் உள்ளது. இதை அடைவதற்கான நோக்கத்துடன், பொறியியல் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கான ஆசிரியர்கள், கடுமையான தேர்வு நடைமுறைகளின் அடிப்படையில் பணியமர்த்தப்படுகிறார்கள்.

எனவே, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் சிறப்புப் பயிலகங்களில் காலியாக உள்ள 1,060 விரிவுரையாளர் பணியிடங்களை நிரப்புவதற்காக, ஆசிரியர் தேர்வு வாரியம் ஓர் அறிவிப்பை வெளியிட்டு, அதற்கான தேர்வுகள் நடத்தப்பட்டு, சான்றிதழ் சரிபார்ப்பு மேற்கொள்ளப்பட்டு, 1,026 நபர்கள் அடங்கிய தெரிவுப் பட்டியலை ஆசிரியர்

தேர்வு வாரியம் வெளியிட்டது. அதனடிப்படையில், தெரிவு செய்யப்பட்ட நபர்கள், அனைத்து அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் சிறப்புப் பயிலகங்களில் விரிவுரையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

# 3. கல்லூரிக் கல்வி

1965 ஆம் ஆண்டில் கல்லூரிக் கல்வியைத் தனியாக நிர்வகிக்கும் நோக்கில், முந்தைய பொதுக் கல்வித் துறையைப் பள்ளிக் கல்வித் துறை மற்றும் கல்லூரிக் கல்வித் துறை என இரண்டாகப் பிரித்து கல்லூரிக் கல்வித் துறை உருவாக்கப்பட்டது. இந்த அரசு, மேம்பட்ட அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் படிப்புகளை அறிமுகப்படுத்தி, மாநில மாணாக்கர்களின் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. தற்போது கீழ்க்காணும் கல்லூரிகள், கல்லூரிக் கல்வித் துறையின் கீழ் செயல்பட்டு வருகின்றன:–

| கல்லூரி வகைகள் | அரசு கல்லூரிகள் | அரசு உதவி பெறும் கல்லூரிகள் | சுயநிதி கல்லூரிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 163 | 139 | 633 | 935 |
| உடற்கல்வி கல்லூரிகள் | 0 | 3 | 8 | 11 |
| கீழ்த்திசைக் கல்லூரிகள் | 0 | 4 | 0 | 4 |
| சமூகப் பணி பள்ளிகள் | 0 | 2 | 0 | 2 |
| கல்வியியல் கல்லூரிகள் | 7 | 14 | 621 | 642 |
| **மொத்தம்** | **170** | **162** | **1262** | **1594** |

## 3.1. கட்டணமில்லாக் கல்வி

பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள பெற்றோரின் நிதிச் சுமையைக் குறைக்கும் நோக்கில், 2007–08 ஆம் கல்வியாண்டு முதல், அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் 2010–11 ஆம் கல்வியாண்டு முதல், அரசுக் கல்லூரிகளில் முதுகலைப் பட்டப்படிப்பு பயிலும் அனைத்து மாணக்கர்களுக்கும் கல்விக் கட்டணம்

ரத்து செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக, மாநிலத்தின் மொத்த சேர்க்கை விகிதம் அதிகரித்துள்ளது.

### 3.2. கட்டணமில்லாப் பேருந்துப் பயணச் சலுகை

2007–08 ஆம் கல்வியாண்டு முதல், அனைத்து அரசு கல்லூரி மாணவர்களுக்கும் கட்டணமில்லாப் பேருந்துப் பயண அட்டை வழங்கும் திட்டம் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. மாணவர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களின் அடிப்படையில், கல்லூரிகள் மூலம் கட்டணமில்லாப் பேருந்துக்கான பயண அட்டை வழங்கப்படுகிறது. 2022–23 ஆம் கல்வியாண்டில், இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 1,34,194 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

### 3.3. மாணாக்கர் சேர்க்கையில் இணைய வழி விண்ணப்பப் பதிவு

2020–21 ஆம் கல்வியாண்டில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணாக்கர்கள்

சேர்க்கைக்கு இணைய வழி மூலம் பதிவு செய்ய இணையதளம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மாணாக்கர்கள் மாநிலம் முழுவதும் உள்ள அரசுக் கல்லூரிகளில் உள்ள பல்வேறு பாடப் பிரிவுகளில் சேர்க்கை பெற ஒரே பதிவில் பதிவு செய்து கொள்ளலாம். இந்த இணையதளம் மாணாக்கர்களின் சிரமங்களைக் குறைத்து அவர்களின் அலைபேசி மூலம் கூட எளிதாக விண்ணப்பிக்க வழிவகை செய்கிறது.

## 3.4. பாரதி இளம் கவிஞர் விருது

2021 ஆம் ஆண்டு முதல் மகாகவி பாரதியின் நூற்றாண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 11 ஆம் தேதியை மகாகவி தினமாக அனுசரிக்கவும், கல்லூரி மாணவர்களுக்கான மாநில அளவிலான கவிதைப் போட்டியை நடத்தவும், இப்போட்டியில் வெல்லும் ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்கு "பாரதி இளம்

கவிஞர் விருது" என்ற பட்டமும், தலா ரூ.1 இலட்சம் ரொக்கப்பரிசும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. மேற்கண்ட விருதுக்கான நிதி ஒப்புதல், 2022–23 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. அதன்படி, 2022–23 ஆம் கல்வியாண்டில் மாநில அளவிலான கவிதைப் போட்டி நடத்தப்பட்டு, ஒரு மாணவனும், ஒரு மாணவியும் இந்த விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

## 3.5. பாடப் புத்தகங்களைத் தமிழில் மொழிபெயர்த்தல்

தமிழ் வழியில் உயர்கல்வி பயிலும் மாணவர்களின் வசதிக்காக, 2021–22 ஆம் ஆண்டில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்துடன் இணைந்து, ரூ.2.00 கோடி செலவில் 100 பாடநூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. பாடவாரியாக மொழிபெயர்ப்புப் பணி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் இனங்காணப்பட்ட மொழிபெயர்ப்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுப் பாடப்

புத்தகங்கள் மொழிபெயர்க்கும் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன. கல்லூரி நூலகங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியில், 30 விழுக்காட்டுத் தொகை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்திடமிருந்து, மொழிபெயர்க்கப்பட்ட பாடப்புத்தகங்களை வாங்குவதற்குப் பயன்படுத்தப்படும்.

### 3.6. வேலைவாய்ப்பு முகாம்

கல்லூரிக் கல்வித் துறையின் கீழ் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில், ஆண்டுதோறும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்கள், படிப்பை முடித்தவுடன் வேலைவாய்ப்பினைப் பெற சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த இலக்கை அடைவதற்காக, கல்லூரிகளில் உள்ள வேலைவாய்ப்புப் பிரிவு புதுப்பிக்கப்பட்டு, ஆர்வமுள்ள ஆசிரியர்கள் வேலைவாய்ப்புப்

பிரிவுகளுக்குப் பொறுப்பாக அமர்த்தப்பட்டுள்ளனர். 2022-23 ஆம் கல்வியாண்டில் 8,552 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

## 3.7. ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணாக்கர்களுக்குச் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த அரசு கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்கள், குறிப்பாக கிராமப்புறங்களில் பயிலும் மாணாக்கர்கள் பல்கலைக்கழகத் தேர்வுகளில் ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களில் தேர்ச்சி பெறுவதில் இடர்களைச் சந்திக்கின்றனர். இப்பாடங்களை மாணாக்கர்கள் முழுமையாகப் புரிந்துகொள்ளும் வகையில், வகுப்பு நேரத்திற்குப் பிறகும், வார இறுதி நாட்களிலும், சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இந்தச் சிறப்பு பயிற்சி, பிற மாணக்கர்களுக்கு இணையாகப் போட்டியிடவும், பல்கலைக்கழகத்

தேர்வில் அதிக மதிப்பெண்களைப் பெறவும் உதவுகிறது. இத்திட்டத்திற்காக, 2022–23 ஆம் நிதியாண்டில் ரூ.2.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

### 3.8. தமிழ் வழி பயிலும் மாணக்கர்களுக்கு உதவித்தொகை

1971–72ஆம் ஆண்டில், தமிழ் வழியில் சேரும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் உதவித் தொகை வழங்கும் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியது. ஆண்டுக்கு ரூ.400/– வீதம் வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை 2018–19ஆம் கல்வியாண்டு முதல், ரூ.900/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 2023–24ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக அரசு ரூ.4.24 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

### 3.9. மின் ஆளுகை (e–governance)

கல்லூரிக் கல்வி இயக்ககத்தில், மின் ஆளுகைத் திட்டங்களைச் செயல்படுத்த அரசால் முதற்கட்டமாக

ரூ.99.80 இலட்சமும், இரண்டாம் கட்டமாக ரூ.1.32 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காகத் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT) மூலம் கணினிகள் மற்றும் உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு முழுவதும் மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள் மற்றும் கல்லூரிகளுக்காக உருவாக்கப்பட்ட இணைய தளங்களுக்கான கணினிகள் மற்றும் உபகரணங்களை நிறுவும் பணி நிறைவடைந்துள்ளது. கணினிமயமாக்கும் பணியின் முதற்கட்டமாக, மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள் மற்றும் கல்லூரிகளில் ssஇதைச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், இதன் சோதனை ஓட்டம் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.

## 3.10. உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தரமான கற்றல் சூழலை உருவாக்கவும், உள்கட்டமைப்பை மேம்படுத்தவும், மாணக்கர்களின்

நலனைக் கருத்தில் கொண்டு, அரசு ரூ.4.84 கோடி நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் மூலம் 2022-23 ஆம் ஆண்டில், 29 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், ஆசிரியர்களுக்கான 579 வகுப்பறை மேசைகள் மற்றும் 726 இருக்கைகள், ஆசிரியர்களின் அறைகளுக்கு 668 மேசைகள், 351 செராமிக் கரும்பலகைகள், நூலகங்களுக்கான 352 மேசைகள் மற்றும் 1,459 இருக்கைகள், 971 கணினி மேசைகள், 1,318 கணினி நாற்காலிகள், 254 அறிவிப்புப் பலகைகள் மற்றும் நூலகங்களுக்கான 691 அலமாரிகள் ஆகியவை வாங்கப்பட்டு இப்பணிகள் நிறைவடைந்துள்ளன.

### 3.11. நிரந்தரக் கட்டடம் கட்டுதல்

2017-18 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்ட அரசுக் கல்லூரிகளில் நிரந்தரக் கட்டடம் கட்டப்படாமல் தற்காலிக கட்டடத்தில் செயல்பட்டு வரும் கீழ்கண்ட 10 அரசுக் கல்லூரிகளுக்கு நிரந்தரக் கட்டடங்கள் கட்ட

ரூ.116.64 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, அக்கட்டடங்கள் கட்டும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன:–

| | | | |
|---|---|---|---|
| 1. | கடலூர் மாவட்டம் | – | காட்டுமன்னார் கோவில் |
| 2. | இராமநாதபுரம் மாவட்டம் | – | இராமேஸ்வரம் |
| 3. | கள்ளக்குறிச்சி மாவட்டம் | – | ரிஷிவந்தியம் |
| 4. | கோயம்புத்தூர் மாவட்டம் | – | புலியங்குளம் |
| 5. | கரூர் மாவட்டம் | – | தரகம்பட்டி |
| 6. | விருதுநகர் மாவட்டம் | – | திருவில்லிப்புத்தூர் |
| 7. | தென்காசி மாவட்டம் | – | சங்கரன்கோவில் |
| 8. | தென்காசி மாவட்டம் | – | ஆலங்குளம் |
| 9. | ராணிப்பேட்டை மாவட்டம் | – | சோளிங்கர்(ஜம்புகுளம்) |
| 10. | விழுப்புரம் மாவட்டம் | – | வானூர் |

2021–22 மற்றும் 2022–23 ஆகிய ஆண்டுகளில் புதியதாகத் தொடங்கப்பட்ட 20 அரசுக் கல்லூரிகளில் தற்போது 10 அரசுக் கல்லூரிகளுக்கு நிரந்தரக் கட்டடங்கள் கட்ட ரூ.128.17 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு,

அக்கட்டடங்கள் கட்டும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன:–

| | | | |
|---|---|---|---|
| 1. | விருதுநகர் மாவட்டம்– | – | திருச்சுழி |
| 2. | ஈரோடு மாவட்டம் | – | தாளவாடி |
| 3. | திண்டுக்கல் மாவட்டம் | – | ஒட்டன்சத்திரம் |
| 4. | திருநெல்வேலி மாவட்டம் | – | மானூர் |
| 5. | திருப்பூர் மாவட்டம் | – | தாராபுரம் |
| 6. | புதுக்கோட்டை மாவட்டம் | – | ஆலங்குடி |
| 7. | வேலூர் மாவட்டம் | – | சேர்க்காடு |
| 8. | திருச்சி மாவட்டம் | – | மணப்பாறை |
| 9. | கிருஷ்ணகிரி மாவட்டம் | – | தளி |
| 10. | புதுக்கோட்டை மாவட்டம் | – | திருமயம் |

## 3.12. புதுக்கோட்டை, மாமன்னர் கல்லூரியில் புதிய நூலகக் கட்டடம் கட்டுதல்

2022–23 ஆம் ஆண்டில் புதுக்கோட்டை மாமன்னர் கல்லூரியில் உள்ள நூலகத்திற்கு நவீன வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு ரூ.6.00 கோடி நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.

இதில் ரூ.4.00 கோடி, அரசு நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.2.00 கோடி, கல்லூரி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

## 3.13. பெருந்தலைவர் காமராஜர் கல்லூரிகள் மேம்பாட்டுத் திட்டம்

55 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதிய பாடப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டு மாணக்கர்கள் சேர்க்கை அதிகரித்துள்ளதால், ஆய்வகங்கள், வகுப்பறைகள், கழிவறைகள் மற்றும் இதர வசதிகளை மேம்படுத்துவது அவசியமாகிறது. பெருந்தலைவர் காமராஜர் கல்லூரிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 55 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அரசு ரூ.100 கோடி நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நடைபெற்று வருகின்றன.

2022-23 ஆம் ஆண்டில், பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்

சென்னை பாரதி மகளிர் கல்லூரியில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் நூலகங்கள் கட்டுவதற்கு, அரசு ரூ.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

### 3.14. கணினி பயிற்சித் திட்டப் பயிற்றுநர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திரத் தொகுப்பூதியத்தினை ரூ.4,000/- லிருந்து ரூ. 10,000/- ஆக உயர்த்தி வழங்குதல்

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், 2000-01 ஆம் ஆண்டில், கணினி அறிவியல் அல்லாத பாடங்களைப் பயிலும் மாணாக்கர்கள், பட்டப்படிப்பு முடித்தவுடன் உடனடியாக வேலைவாய்ப்பைப் பெறுவதற்காக, கணினி அறிவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. கணினி அறிவுத் திட்டப் பயிற்றுநர்களுக்கு மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட கட்டணத்திலிருந்து தொகுப்பூதியமாக மாதம் ரூ.4,000/- வழங்கப்பட்டது. 2022-23 ஆம் ஆண்டு முதல், மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டணத் தொகை ரூ.700/- லிருந்து ரூ.1,000/- ஆக

உயர்த்தப்பட்டு, தற்போது மாதாந்திரத் தொகுப்பூதியம் ரூ.10,000/- ஆக வழங்கப்பட்டுவருகிறது.

### 3.15. சென்னை, மாநிலக் கல்லூரியில் பயிலும் மாற்றுத்திறனாளி மாணாக்கர்களுக்குப் புதிய விடுதிக் கட்டடங்கள் மற்றும் "முத்தமிழறிஞர் கலைஞர்" பெயரில் மாபெரும் அரங்கம் (Auditorium) கட்டுதல்

05.07.2022 அன்று சென்னை மாநிலக் கல்லூரியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பின் அடிப்படையில், அக்கல்லூரியில் மாற்றுத் திறனாளி மாணாக்கர்களுக்கான விடுதிக் கட்டடங்கள் கட்டுவதற்கு, 2022-23 ஆம் ஆண்டில் ரூ.21.60 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் இக்கல்லூரியில், "முத்தமிழ் அறிஞர் கலைஞர்" பெயரில், கலையரங்கம் கட்டுவதற்கு ரூ.63 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, 2022-23 ஆம் ஆண்டிற்கு ரூ.7.00 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது.

## 3.16. சென்னை ராணி மேரி கல்லூரியில் மகளிர் விடுதிக் கட்டடங்கள் கட்டுதல்

22.11.2022 அன்று சென்னை ராணி மேரி கல்லூரியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பின் அடிப்படையில், சென்னை ராணி மேரி கல்லூரியில் ரூ.42 கோடி மதிப்பீட்டில் விடுதிக் கட்டடம் கட்டுவதற்கு அரசு நிர்வாக ஒப்புதல் அளித்து, 2022–23 ஆம் ஆண்டில், ரூ.1.00 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து, பணி துவங்கப்பட்டுள்ளது.

## 3.17. புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்குதல்

சமச்சீர் கல்வியை நிலைநிறுத்தவும், தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கி ஒரே மாதிரியான உயர்கல்வியை வழங்கும் வகையிலும் 20 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்

2021–22 மற்றும் 2022–23 ஆம் ஆண்டுகளில், கீழ்க்கண்ட இடங்களில் தொடங்கப்பட்டுள்ளன:

| வ.எண் | மாவட்டம் | கல்லூரி அமைந்துள்ள இடம் |
|---|---|---|
| 1 | விருதுநகர் | திருச்சுழி |
| 2 | கள்ளக்குறிச்சி | திருக்கோவிலூர் |
| 3 | ஈரோடு | தாளவாடி |
| 4 | திண்டுக்கல் | ஒட்டன்சத்திரம் |
| 5 | திருநெல்வேலி | மானூர் |
| 6 | திருப்பூர் | தாராபுரம் |
| 7 | தருமபுரி | ஏரியூர் |
| 8 | புதுக்கோட்டை | ஆலங்குடி |
| 9 | வேலூர் | சேர்க்காடு |
| 10 | திருவாரூர் | கூத்தாநல்லூர் (மகளிர்) |
| 11 | திருச்சிராப்பள்ளி | மணப்பாறை |
| 12 | விழுப்புரம் | செஞ்சி |
| 13 | கிருஷ்ணகிரி | தளி |
| 14 | புதுக்கோட்டை | திருமயம் |
| 15 | ஈரோடு | அந்தியூர் |
| 16 | கரூர் | அரவக்குறிச்சி |
| 17 | தஞ்சாவூர் | திருக்காட்டுப்பள்ளி |
| 18 | திண்டுக்கல் | ரெட்டியார்சத்திரம் |
| 19 | கடலூர் | வடலூர் |
| 20 | காஞ்சிபுரம் | ஸ்ரீபெரும்புதூர் |

மேற்குறித்த கல்லூரிகள் ஒவ்வொன்றுக்கும் தலா 17 ஆசிரியர் மற்றும் 17 ஆசிரியரல்லாப் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு, தொடர் செலவினமாக ரூ.44.85 கோடியும், தொடரா செலவினமாக ரூ.7.20 கோடியும், ஆக மொத்தம் ரூ.52.05 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, திருப்பத்தூர் மாவட்டம் நாட்றாம்பள்ளியில், 2023-24 ஆம் கல்வியாண்டு முதல், ஒரு புதிய அரசுக் கல்லூரி துவங்குவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

**3.18. கணினிகள் மற்றும் தடையில்லா மின்வழங்கிகள் கொள்முதல்**

2022-23 ஆம் ஆண்டிற்கு, 31 அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், 1,550 கணினிகள் மற்றும் 62 தடையில்லா மின் வழங்கிகள் வாங்க அரசு ரூ.8.48 கோடி நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது. மேற்கண்ட பொருட்கள் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT) மூலம் கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டன.

### 3.19. பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளை அரசுக் கல்லூரிகளாக மாற்றுதல்

**3.19.1.** அரசின் அறிவிப்பின் அடிப்படையில், பல்வேறு பல்கலைக்கழகங்களின் கீழ் செயல்பட்டு வந்த 14 உறுப்புக் கல்லூரிகள், முதல் கட்டமாக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக மாற்றப்பட்டுள்ளன. மேற்கண்ட கல்லூரிகளுக்கு 793 ஆசிரியர் பணியிடங்களும், 238 ஆசிரியர் அல்லாத பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டு, அப்பணியிடங்களுக்கான தொடர் செலவினங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.19.2.** இரண்டாம் கட்டமாகப் பல்வேறு பல்கலைக்கழகங்களின் கீழ் செயல்பட்டு வந்த 27 உறுப்புக் கல்லூரிகள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக மாற்றப்பட்டுள்ளன. அக்கல்லூரிகளுக்கான 1,455 ஆசிரியர் பணியிடங்களும், 507 ஆசிரியர் அல்லாத பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டு, மேற்கண்ட

பணியிடங்களுக்கான ஊதியம் மற்றும் படிகளுக்கான தொடர் செலவினங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.19.3. இக்கல்லூரிகளின் நிர்வாகக் கட்டுப்பாட்டைப் பல்கலைக்கழகங்களிடமிருந்து கல்லூரிக் கல்வி இயக்ககத்திற்கு சுமூகமாக மாற்றுவதற்காக, இக்கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களின் எண்ணிக்கை, இக்கல்லூரிகளுக்கு அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கையுடன் ஒத்திசைவு செய்யப்பட்டு, இந்தப் பணியிடங்களில் தற்போது பணிபுரிந்து வரும் பணியாளர்கள், அப்பணியிடங்கள் நிரந்தர பணியாளர்களைக் கொண்டு நிரப்பப்படும் வரை இக்கல்லூரிகளில் மாற்றுப்பணி அடிப்படையில் தொடர அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், பல்கலைக்கழகங்களினால் நியமிக்கப்பட்ட பணியாளர்களுக்கான சம்பளம், தற்போது கருவூலம்

மூலம் கல்லூரிக் கல்வி இயக்குநரால் வழங்கப்பட்டு வருகின்றது.

பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள், அரசுக் கல்லூரிகளாக மாற்றப்பட்டதைத் தொடர்ந்து, 41 இணைப் பேராசிரியர்கள் பதவி உயர்வு பெற்று இக்கல்லூரிகளில் நிலை–II முதல்வர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## 3.20. மாற்றுத் திறனாளி மாணாக்கர்களுக்குப் புதிய முதுகலைப் பாடப்பிரிவு தொடங்கி ஆசிரியர் பணியிடங்களை உருவாக்குதல்

2022–23 ஆம் கல்வியாண்டில், சென்னை மாநிலக் கல்லூரியில், செவித்திறன் குறைபாடுள்ள மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான முதுகலை வணிகவியல் பாடப்பிரிவைத் தொடங்க அரசு அனுமதி அளித்துள்ளது. இப்பாடப்பிரிவினைக் கையாள்வதற்கு ஐந்து உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, இப்பணியிடங்களுக்குத் தொடர்

செலவினமாக ரூ.51.97 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

### 3.21. முனைவர் பட்ட ஆராய்ச்சிப் பாடப் பிரிவு

2022-23 ஆம் கல்வியாண்டில், கீழ்க்கண்ட 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், தமிழ், வரலாறு, வேதியியல், ஆங்கிலம், வணிகவியல், தாவரவியல் மற்றும் பொருளியல், கணிதம் போன்ற பல்வேறு துறைகளில் புதிய முனைவர் பட்டப் படிப்புகளைத் தொடங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

| வ. எண் | கல்லூரி | மாவட்டம் |
|---|---|---|
| 1. | கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரி | திருவண்ணாமலை |
| 2. | திருவள்ளுவர் அரசு கலைக் கல்லூரி | இராசிபுரம் |
| 3. | உலகநாத நாராயணசாமி அரசினர் கல்லூரி (த) | பொன்னேரி |
| 4. | அரசு மகளிர் கலைக் கல்லூரி | சேலம் |
| 5. | ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி (த) | மதுரை |

| | | |
|---|---|---|
| 6. | எல்.ஆர்.ஜி அரசு மகளிர் கலைக் கல்லூரி | திருப்பூர் |
| 7. | அரசு கலைக் கல்லூரி | சிதம்பரம் |
| 8. | குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக் கல்லூரி (த) | தஞ்சாவூர் |
| 9. | அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி | முசிறி |
| 10. | பாரதி மகளிர் கல்லூரி (த) | சென்னை |

## 3.22. தமிழக முதலமைச்சரின் ஆராய்ச்சி ஊக்கத்தொகை

தமிழ்நாட்டில் திறமையான முதுகலை மாணக்கர்களுக்கான ஆராய்ச்சித் தளத்தை வழங்கும் வகையில், முதலமைச்சரின் ஆராய்ச்சி உதவித்தொகை வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது. முதலமைச்சரின் ஆராய்ச்சி உதவித்தொகையினைப் பெறுவதற்காக, மாணாக்கர்களைத் தேர்வு செய்வதற்கு, மாநில அளவிலான தகுதித் தேர்வை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நடத்தி, கலை, சமூக அறிவியல் மற்றும் மானுடவியல் பிரிவைச் சேர்ந்த 60 தகுதி வாய்ந்த மாணாக்கர்களும் அறிவியல் பிரிவில்

60 மாணாக்கர்களும் என மொத்தம் 120 மாணாக்கர்களுக்குத் தற்போதுள்ள திட்டத்திற்கு மாற்றாக அதிகபட்சம் மூன்றாண்டுகளுக்கு மாதாந்திர உதவித்தொகை ரூ.25,000/- வழங்கப்படும். 2022-23 ஆம் கல்வியாண்டில் சேர்ந்த மாணாக்கர்களின் நலனைப் பாதுகாக்கும் வகையில், தற்போதுள்ள திட்டத்தின் கீழ், 120 ஆராய்ச்சி மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர உதவித்தொகை ரூ.5,000/- முதுநிலை மாணாக்கர்களுக்கு 2024-25 வரையும், எம்.பில் மாணாக்கர்களுக்கு 2023-24 வரையும் நீட்டிக்கப்படும்.

### 3.23. உதவிப் பேராசிரியர்களை நியமிக்கும் முறையில் மாற்றம்

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் காலியாக உள்ள 2,331 நிரந்தர உதவிப் பேராசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பை, ஆசிரியர் தேர்வு வாரியம் 28.08.2019 மற்றும் 04.10.2019 தேதியிட்ட அறிவிப்பின் மூலம் வெளியிட்டுள்ளது.

ஆனால், நீதிமன்ற வழக்குகள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், தெரிவுப் பணியை முடிக்க இயலவில்லை. இப்பிரச்சினையை அரசு தீவிரமாகக் கவனத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், உயர்நிலைக் குழுக்கூட்டம் கூட்டப்பட்டு தகுதி, கற்பித்தல் அனுபவம் மற்றும் நேர்முகத் தேர்வுக்குச் சிறப்பு மதிப்பெண்கள் வழங்கும் நடைமுறையைக் கைவிட்டு, அரசுக் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர்களாகப் பணிபுரிய, போட்டி எழுத்துத்தேர்வுக்கு 200 மதிப்பெண்கள், நேர்முகத் தேர்வுக்கு 30 மதிப்பெண்கள் என்ற அடிப்படையில் தேர்வு முறை முடிவு செய்யப்பட்டு, ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இந்தத் திருத்தப்பட்ட முறை சுதந்திரமான, நியாயமான மற்றும் வெளிப்படையான தெரிவினை உறுதி செய்யும்.

**3.24. அரசுக் கல்லூரிகளில் 4,000 உதவிப் பேராசிரியர்கள் நியமனம்**

தரமான உயர்கல்வியை வழங்குவது, உள்கட்டமைப்பு வசதிகளை உள்ளடக்கியது

மட்டுமல்லாமல், தகுதிவாய்ந்த ஆசிரியர்களையும் சார்ந்துள்ளது. இப்பிரச்சனைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அனைத்துத் தரப்பினருடனும் விரிவான கலந்துரையாடலுக்குப் பிறகு, 2019–20 ஆம் ஆண்டு வரை உள்ள காலிப்பணியிடங்களின் மதிப்பீட்டைக் கருத்தில் கொண்டு, அரசுக் கல்லூரிகளில் 4,000 உதவிப் பேராசிரியர்களை நியமிக்க ஆணையிட்டுள்ளார்கள். மொத்த காலிப் பணியிடங்களில், ஏற்கனவே அறிவிக்கப்பட்ட 2,331 காலிப் பணியிடங்களும் அடங்கும், ஆனால், 2019 முதல் தெரிவுப் பணி நடைபெறவில்லை. ஏற்கனவே 2019 அறிவிப்பின் அடிப்படையில் விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை என்றும், வேலை தேடுபவர்களின் சிரமத்தைத் தவிர்க்கும் வகையில் அவர்களின் விண்ணப்பங்களும் இந்தத் தெரிவுப்பணிக்குப் பரிசீலிக்கப்படும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

புதிதாக 4,000 உதவிப் பேராசிரியர்களை நியமிப்பதற்கான பணிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டு, எழுத்துத் தேர்வு பாடங்களுக்கான பாடத்திட்டம் இறுதி செய்யப்பட்டுள்ளது.

**3.25. 1,895 கௌரவ விரிவுரையாளர்கள் நியமனம்**

அரசுக் கல்லூரிகளில் புதிதாக நியமனம் செய்யப்படவுள்ள 4,000 உதவிப் பேராசிரியர்களைத் தெரிவு செய்யும் பணிக்குச் சிறிது கால அவகாசம் தேவைப்படும் என்பதால், மாணாக்கர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, உதவிப் பேராசிரியர் பணியிடங்களில் காலியாக உள்ள 1,895 பணியிடங்களை, மாதாந்திரத் தொகுப்பூதியம் ரூ.20,000/- என்ற அடிப்படையில், 11 மாத காலத்திற்கு கௌரவ விரிவுரையாளர்களைக் கொண்டு நிரப்ப முடிவு செய்யப்பட்டது. கௌரவ விரிவுரையாளர்களை நியமிப்பதற்கான நடைமுறை மாற்றம் செய்யப்பட்டு, இணைய வழியில் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன. நியாயமான மற்றும்

வெளிப்படையான தெரிவு முறையைப் பின்பற்றித் தகுதியான விரிவுரையாளர்களைத் தேர்வு செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டு இக்குழுவினால் கௌரவ விரிவுரையாளர்களைத் தெரிவு செய்யும் பணி படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு, இதுவரை 1,772 கௌரவ விரிவுரையாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

## 3.26. இணையதள இணைப்பு வழங்குதல்

150 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளுக்கு இணைய வசதியை வழங்க அரசு முடிவு செய்து, பாரத் நெட் திட்டத்தின் கீழ், டான்ஃபிநெட் (TANFINET) மூலம் ரூ.12 கோடி மதிப்பீட்டில், 14 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு ஒளியிழை இணைப்பு (OFC) வழங்கியும், மீதமுள்ள 136 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளுக்கு, 100 mpbs திறன் கொண்ட இணைய வசதியும், ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

### 3.27. அரசுக் கல்லூரி ஆசிரியர்களுக்கான இடமாறுதல் கலந்தாய்வு

அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கான பொது இடமாறுதல் கலந்தாய்வு, கடந்த மூன்று ஆண்டுகளாக நடத்தப்படாமல், தற்போது 2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், ஒளிவு மறைவற்ற கலந்தாய்வு நடத்தப்பட்டது. மொத்தம், 569 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, தகுதியான, 199 பேராசிரியர்கள், விருப்பத்திற்கேற்ப இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

### 3.28. அரசுக் கல்லூரிகளில் 2015ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட உதவிப் பேராசிரியர்களைப் பணிவரன்முறை செய்தல்

2015 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட 957 உதவிப் பேராசிரியர்களின் பணி, ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மேற்கண்ட உதவிப் பேராசிரியர்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு அவர்களின் பணிமேம்பாட்டிற்கு வழிவகுத்துள்ளது.

### 3.29. பணி மேம்பாட்டுத் திட்டம்.

2018 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியக் குழு விதிமுறைகளை அரசு அமல்படுத்தியுள்ளது. இதன் அடிப்படையில், கடந்த ஐந்து ஆண்டுகளாக நிலுவையில் இருந்த கல்லூரி ஆசிரியர்களுக்கான பணி மேம்பாட்டுத் திட்டம் (CAS) வழங்கப்பட்டு, சுமார் 2,800 கல்லூரி ஆசிரியர்கள் பயனடைந்துள்ளனர். இதன் மூலம் கல்லூரி ஆசிரியர்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறியுள்ளது.

### 3.30. நான் முதல்வன் திட்டம்

தமிழ்நாட்டில் உள்ள அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், மாணாக்கர்களின் திறன் மேம்பாட்டினை வளர்க்கும் விதமாக "நான் முதல்வன் திட்டம்" தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து, 2022–23 ஆம் ஆண்டு அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. பல்வேறு கல்லூரிகளில்

உள்ள பாடப்பிரிவுகளும் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கும், தொழில் துறைக்கும் தேவையான தொழில்சார் திறன்களைக் கற்றுத்தரும் பாடப்பிரிவுகள் பற்றிய தகவல்களையும், நான் முதல்வன் திட்டம் மாணாக்கர்களுக்கு தொடர்ந்து வழங்கி வருகிறது. மாணாக்கர்கள் தங்களின் விருப்பத்திற்கு ஏற்ற துறையில் பயிற்சி பெற்று, வேலை வாய்ப்பு தொடர்பான குறிக்கோள்களை அடையும் வகையில் இந்த திறன்சார் பாடப்பிரிவுகள் அமைந்துள்ளன. மாணாக்கர்களின் வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதற்காக பல்வேறு தொழில் நிறுவனங்களால் வழங்கப்படும் இந்த திறன்சார் பாடங்கள், இளநிலை பாடத்திட்டத்திற்குள் சேர்க்கப்பட்டுள்ளன. தற்போதைய தொழில் நிறுவனங்களின் தேவைகளை உணர்ந்து உரிய பயிற்சிகளை நல்கும் நிறுவனங்களைத் தேர்ந்தெடுப்பது இத்திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும்.

2022-23 ஆம் கல்வியாண்டில், இத்திட்டத்தின்கீழ் பொறியியல் மாணாக்கர்களுக்கு ஒற்றைப்படை மற்றும் இரட்டைப்படை பருவங்களில் கீழ்க்கண்ட திறன்பயிற்சி பாடங்கள்வழங்கப்பட்டன:

| வ. எண் | பாடங்கள் | பயனடைந்த மாணாக்கர்–களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Office Fundamentals | 82287 |
| 2 | Big Data | 9572 |
| 3 | Cyber Security | 3233 |
| 4 | Full Stack | 5926 |
| 5 | Machine Learning | 3337 |
| 6 | Machine Learning (Mech) | 24207 |
| 7 | Cloud Essentials | 8678 |
| 8 | Robotics simulation (Hybrid) | 4397 |
| 9 | AR/VR (Hybrid) | 4012 |
| 10 | Industry 4.0 (Hybrid) | 3954 |
| 11 | Powering IoT (Hybrid) | 4184 |
| 12 | Building Information Modelling | 2980 |
| 13 | Design and construction of Steel buildings | 2234 |
| 14 | High Rise Building Design | 2055 |
| 15 | Transportation Infrastructure-Airports, Metros & Seaports | 2764 |

| | | |
|---|---|---|
| 16 | Electric Vehicle (EEE) | 4278 |
| 17 | Electric Vehicle (Mech) | 6970 |
| 18 | Smart Energy Grid | 3392 |
| 19 | Communicative English | 72,974 |
| 20 | Project Based Learning – AI, ML, FS, IOT | 54,350 |

| வ. எண் | பாடங்கள் | பயனடைந்த மாணாக்கர்–களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Architecture Visualization using AR/VR | 1665 |
| 2 | Block Chain Development | 7946 |
| 3 | Design of Photo Voltaic System | 2487 |
| 4 | Digital Marketing | 7072 |
| 5 | Electric Vehicle Charging System Design | 2522 |
| 6 | Embedded System Design – Process board design | 1372 |
| 7 | Embedded System Design – Industrial Application | 2192 |
| 8 | Embedded System Design & Application | 450 |
| 9 | EV Design | 4971 |
| 10 | Full Stack | 3167 |

| | | |
|---|---|---|
| 11 | Industrial Metaverse using mixed reality (XR) | 3450 |
| 12 | Manufacturing of Mechanical Components using CNC Turning/Milling | 1000 |
| 13 | Product Design Engineering and Modelling | 5678 |
| 14 | Network Engineering | 9431 |
| 15 | Network Essentials | 32000 |
| 16 | Plant Simulation | 568 |
| 17 | Product Design Engineering and 3D Surface Modelling | 4029 |
| 18 | Foundation of AI, ML, FS | 4915 |
| 19 | Professional Readiness for employment | 24547 |
| 20 | Robotic Process & Industrial Automation | 16795 |
| 21 | Smart & Advanced Manufacturing – Design Simulation | 12024 |
| 22 | Sustainable Building Design | 4781 |
| 23 | Smart & Advanced Manufacturing – Process Simulation | 1888 |

2022–23 ஆம் கல்வியாண்டில், இத்திட்டத்தின்கீழ் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் மாணாக்கர்களுக்கு ஐந்தாம் பருவத்தில் கீழ்க்கண்ட திறன்பயிற்சி பாடங்கள் வழங்கப்பட்டன:

| வ. எண் | பாடங்கள் | பயனடைந்த மாணாக்கர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | AR/VR Development | 6296 |
| 2 | Building Information Modelling | 1408 |
| 3 | Lean Manufacturing | 354 |

இத்திட்டத்தின் கீழ், 2022–23 ஆம் கல்வியாண்டில், இரண்டாம், நான்காம் மற்றும் ஆறாம் பருவங்களில் பயிலும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணாக்கர்களுக்கு, கீழ்க்கண்ட திறன் மேம்பாட்டுப் பாடங்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன:–

| பருவம் | பாடப்பிரிவுகள் | தனித்த திறன்கள் | பயனாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| II மற்றும் IV | அனைத்துப் பாடப்பிரிவுகள் | திறன்மிகு ஆங்கிலம் (Effective English) மைக்ரோசாப்ட் | 5,55,000 |

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலக பயன்பாடுகள் (Ms Office) | |
| VI | கணினி பயன்பாடு, தகவல் தொழில்நுட்பம், கணினி அறிவியல் | IBM தொழில் கல்வி, கூகுள், இணைய பாதுகாப்பு (Cyber Security) மற்றும் மின்னணு வர்த்தகம் | 35,538 |
| | இயற்பியல், கணிதம், தரவு அறிவியல், மின்னணுவியல் மற்றும் புள்ளியியல் | விற்பனைத் திறன் | 15,866 |
| | வணிகவியல், பொருளியல், வணிக நிர்வாகவியல் | மின்னணு வங்கி பரிவர்த்தனை மற்றும் தணிக்கைக் கூறுகள் | 1,04,634 |
| | தாவரவியல் மற்றும் உயிரி தொழில்நுட்பம் | மருத்துவ குறியீட்டியல் | 6,200 |
| | பிற பாடப்பிரிவுகள் | வேலைவாய்ப்புத் திறன்கள் | 94,641 |

மாணாக்கர்களின் வேலைவாய்ப்புத் திறனை அதிகரிக்கும் முக்கிய நோக்கத்துடன் பன்னாட்டு

தொழில் நிறுவனங்களால் இந்த பாடங்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன. இப்புதிய பாடங்களை, மாணாக்கர்களுக்கு சீரிய முறையில் பயிற்றுவிப்பதற்காக, 30.01.2023 முதல் 11.02.2023 வரை, மாநில பல்கலைக்கழகங்களில், ஆசிரியர்களுக்கு இரண்டு கட்டங்களாகப் பயிற்சிகள் நடத்தப்பட்டன. இத்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளைப் பெற்ற பட்டதாரிகள் தொழிற்நிறுவனங்களில் வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கான முழுத்தகுதியும், திறனும் பெறுவர்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து, 10 அரசு பொறியியல் கல்லூரிகளில் பயிலும் 600 இறுதியாண்டு மாணாக்கர்களுக்கு ஜெர்மனி, பிரெஞ்ச், ஜப்பானிய மொழிகள் கற்றுதரப்படுகிறது.

போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவதற்கும், பன்னாட்டு நிறுவனங்களில் வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கும், 10 அரசு பொறியியல் கல்லூரிகளில்,

இறுதியாண்டு பயிலும் 500 மாணாக்கர்களுக்கு போட்டித் தேர்வுகளான GRE / GMAT / CAT/ IELTS மற்றும் TOEFL தேர்வுகளுக்கு, தீவிர பயிற்சி அளிக்கப்படுகிறது.

2022–23 ஆம் கல்வியாண்டில், நான் முதல்வன் திட்டத்தில், 844 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் சேர்ந்துள்ளன. 15 தொழில் நிறுவனங்கள் கண்டறியப்பட்டு, 27 புதிய திறன்சார் பாடப்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 4,60,734 பொறியியல் மாணாக்கர்களும், 8,11,879 கலை மற்றும் அறிவியல் மாணாக்கர்களும், நான் முதல்வன் இணைய தளத்தில் பதிவு செய்துள்ளனர். 12,582 பொறியியல் ஆசிரியர்களும், 9,183 கலை மற்றும் அறிவியல் ஆசிரியர்களும் பயிற்சி பெற்றுள்ளனர்.

### 3.31 "புதுமைப் பெண்" திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சமூக நலத்துறை மூலம், செப்டம்பர் 6, 2022 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட "புதுமைப் பெண்" (மூவலூர்

இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதி திட்டம்) திட்டத்தின் கீழ், ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை தமிழக அரசு / துறைப் பள்ளிகளில் பயின்ற மாணவியர், தடையின்றி உயர் கல்வி பயில வேண்டும் என்ற நோக்கத்தோடு, தமிழகத்தில் உள்ள, மாநில அரசு / மத்திய அரசு சார்ந்த, பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்ற உயர் கல்வி நிறுவனங்களில், இளநிலைப் பிரிவில் மருத்துவம், துணை மருத்துவம், பொறியியல், கலை மற்றும் அறிவியல் பாடங்கள் பயிலவும், பட்டயப் படிப்புகள் மற்றும் தொழில் துறைப் பயிற்சி நிறுவனங்களில் பயிலவும், உதவித் தொகையாக, மாதந்தோறும் ரூ.1,000/– ஒவ்வொரு மாணவிக்கும் வழங்கப்பட்டு வருகின்றது. நேரடி பயன் பரிமாற்ற முறைப்படி, இந்த உதவித்தொகை, நேரடியாக, மாணவியரின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படுகின்றது.

2022–23 ஆம் கல்வியாண்டில், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் 4,806 மாணவியரும், அரசு பொறியியல் கல்லூரிகளில் 12,711 மாணவியரும்,

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 1,27,767 மாணவியரும் பயனடைந்துள்ளனர். 2021-22 ஆம் கல்வியாண்டில் முதலாமாண்டு மாணவியரின் சேர்க்கை எண்ணிக்கை 71,008. புதுமைப்பெண் திட்டத்தினை செயல்படுத்தியதன் விளைவாக 2022-23 ஆம் கல்வியாண்டில் மாணவியரின் சேர்க்கை எண்ணிக்கை 91,485 ஆக உள்ளது. இந்த மாணவியரின் சேர்க்கை சென்ற கல்வியாண்டைவிட 29% உயர்ந்துள்ளது. வறுமை காரணமாகவும், வேறு காரணங்களுக்காகவும், படிப்பை இடை நிறுத்திய மாணவியர், இப்புதுமைப் பெண் திட்டத்தின் கீழ், மீண்டும் உயர்கல்வியைத் தொடர்ந்து பெற்று பயனடைந்து வருகின்றனர். மேலும், சமூகத்தின் பல்வேறு பிரிவுகளின் அடிப்படையில் உயர்ந்துள்ள மாணவியரின் உயர்கல்வி சேர்க்கை சதவீதங்கள், அதாவது, அட்டவணைப்படுத்தப்பட்ட பட்டியல் இனத்தை சார்ந்த மாணவிகள் (அருந்ததியர்)-71%, பழங்குடி இனத்தை சார்ந்த மாணவிகள் (ST)-41%, பிற்படுத்தப்பட்ட இஸ்லாமிய மாணவிகள் (BCM)-51%,

மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவிகள் (MBC)–35%, சீர்மரபினர் இனத்தை சார்ந்த மாணவிகள் (DNC)–32% என்ற புள்ளி விவரங்கள், புதுமைப்பெண் திட்டத்தின் வெற்றிக்கு சான்றாக உள்ளன.

## 4. பல்கலைக்கழகங்கள்

உயர்கல்வித்துறை ஆளுகையின் கீழ் பின்வரும் பல்கலைக்கழகங்கள் செயல்படுகின்றன :–

1. சென்னைப் பல்கலைக்கழகம்
2. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
3. அண்ணா பல்கலைக்கழகம்
4. பாரதியார் பல்கலைக்கழகம்
5. பாரதிதாசன் பல்கலைக்கழகம்
6. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
7. அழகப்பா பல்கலைக்கழகம்
8. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
9. பெரியார் பல்கலைக்கழகம்
10. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
11. திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
12. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
13. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

## 4.1. சென்னைப் பல்கலைக்கழகம்

**4.1.1.** சென்னைப் பல்கலைக்கழகம் 1857ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இணைப்பு பெற்ற பல்கலைக்கழகமாக இப்பல்கலைக்கழகம் அப்போதைய சென்னை மாகாணத்திற்குட்பட்ட பகுதிகளை வரம்பெல்லையாகக் கொண்டிருந்தது. காலப்போக்கில், ஒவ்வொரு புதிய பல்கலைக்கழகத்தின் உருவாக்கத்தினால், இதன் எல்லை சுருக்கப்பட்டு, சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் ஆகிய நான்கு மாவட்டங்களின் பரப்புகளை உள்ளடக்கி உள்ளது. இப்பல்கலைக்கழகம், ஆராய்ச்சி மற்றும் முதுநிலைப் பட்டப் படிப்புகளைக் கற்பிப்பதில் முழுமையாக ஈடுபட்டுள்ளது. இது கலை மற்றும் அறிவியல் கல்விப் புலத்தில் புகழ் பெற்ற பல்கலைக்கழகமாகும். இப்பல்கலைக்கழகத்தில் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சியை உள்ளடக்கிய 73 துறைகளும் 45 ஆராய்ச்சி மையங்களும் மற்றும் 134 இணைப்புக் கல்லூரிகளும் உள்ளன.

**4.1.2.** 2014இல் தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று குழுவின் (National Assessment and Accreditation Council – NAAC) 3.32 / 4.00 மதிப்பெண்களைப் பெற்று 'ஏ' தரத்தைப் பெற்றுள்ளது. தரப்படுத்தப்பட்ட தன்னாட்சியின்கீழ் பல்கலைக்கழக மானியக்குழுவால் (UGC) 'சிறந்து விளங்கும் திறன் கொண்ட பல்கலைக்கழகம்' என்று அங்கீகரிக்கப்பட்டு, அதன் முதல் மற்றும் இரண்டாம் நிலைகளை இப்பல்கலைக்கழகம் நிறைவு செய்துள்ளது.

**4.1.3.** தேசிய நிறுவனத் தரவரிசைக் கட்டமைப்பில் 2022 (National Institutional Ranking Framework 2022–NIRF) நாட்டின் சிறந்த பல்கலைக்கழகங்களில் இந்தப் பல்கலைக்கழகம் 39 வது இடத்தில் உள்ளது.

**4.1.4.** உயர்கல்வியை அனைவருக்கும் வழங்குவதற்காக இப்பல்கலைக்கழகம் 1981இல் தொலைதூரக் கல்வி நிறுவனத்தை உருவாக்கியது. இது தற்போது 19 இளநிலைப் படிப்புகள், 21 முதுநிலைப்

படிப்புகள், 21 பட்டயம் / முதுநிலைப் பட்டயப் படிப்புகள் மற்றும் 17 சான்றிதழ் படிப்புகளை வழங்குகிறது. இந்த அனைத்துப் படிப்புகளையும் பல்கலைக்கழக மானியக்குழுவின் தொலைதூரக் கல்விக் குழுமம் [Distance Education Bureau – DEB] அங்கீகரித்துள்ளது. இப்பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி நிறுவனம் கடந்த ஐந்து ஆண்டுகளை ஒப்பிடுகையில் இளநிலை மற்றும் முதுநிலைப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைகளின் மொத்த எண்ணிக்கையைக் கணிசமாக மேம்படுத்தி உள்ளது.

**4.1.5.** பல்கலைக்கழக மானியக்குழுவின் இன்ஃப்லிப்நெட்டின் (INFLIBNET) மின்னணு தகவல் வைப்பான ஷோத்கங்காவில் (Shodhganga) முனைவர்பட்ட ஆய்வேடுகளைப் பதிவேற்றுவதில் 696 பல்கலைக்கழகங்களில் சென்னை பல்கலைக்கழகம் முதல் இடத்தில் உள்ளது. இதுவரை 13,881 ஆய்வேடுகளைப் பதிவேற்றியுள்ளது.

**4.1.6.** ஸ்கோபஸால் பட்டியலிடப்பட்ட முன் மதிப்பாய்வு செய்யப்பட்ட இதழ்களில் சென்னைப் பல்கலைக்கழகம் 2,073 (2021–2022) வெளியீடுகளை 24 எச்–இன்டெக்ஸ்களுடன் வெளியிட்டுள்ளது.

**4.1.7.** இப்பல்கலைக்கழகம் ஐக்கிய அரசு (UK) QS உலகத் தரவரிசையில் ஆய்வுசெய்யப்பட்ட உலகப் பல்கலைக்கழகங்களில் 541–550 வரிசையில் 547 வது இடத்தைப் பெற்றுள்ளது. மேலும் ஆசிரியர்களுக்கான மேற்கோள்களுக்காக [Citations] உலக அளவில் 48வது இடத்தைப் பெற்றுள்ளது. QS தரவரிசையின்படி தென்னிந்தியாவில் IIT Madrasக்கு அடுத்தபடியாக இது உள்ளது. சென்னை பல்கலைக்கழகம் இந்த QS உலகத் தரவரிசையில் முதன்முறையாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

**4.1.8.** இப்பல்கலைக்கழகம் தென்மண்டலப் பல்கலைக்கழகங்களுக்கு இடையே நடந்த விளையாட்டுப் போட்டிகளில் 3 தங்கம் மற்றும் ஒரு வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுள்ளது. தேசியப்

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் ஒரு தங்கம் மற்றும் ஒரு வெண்கல பதக்கத்தைப் பெற்றுள்ளது. KHELO இந்தியப் பல்கலைக்கழக விளையாட்டில் 2022இல் இரண்டாவது முறையில் ஆறு தங்கம் ஏழு வெள்ளி மற்றும் ஐந்து வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுள்ளது.

**4.1.9.** இப்பல்கலைக்கழகத்தின் நாட்டுநலப் பணித்திட்டம் [NSS] மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான DREAM KALAM ஆகியவை சுற்றுச்சூழல் மேம்பாட்டு முயற்சியான "GO GREEN" உலக சாதனையை உருவாக்கியுள்ளன.

**4.1.10.** சேத்துப்பட்டு வளாகத்தில், அறிவியல், விளையாட்டு உபகரணங்களுடன் கூடிய உடற்பயிற்சி மையம் 2022இல் தொடங்கப்பட்டது. இந்த மையம் தற்போது பல்கலைக்கழகம் மற்றும் இணைவு பெற்ற கல்லூரிகளின் விளையாட்டு வீரர்களுக்குத் தேசிய

மற்றும் சர்வதேச அளவில் போட்டியிடும் திறனை மேம்படுத்துவதற்குப் பயனுள்ளதாக உள்ளது.

**4.1.11.** இப்பல்கலைக்கழகம் அனைத்து இணைவு பெற்ற கல்லூரிகளிலுள்ள மாணவர்களுக்கு இளநிலை பட்டப் படிப்புகள் மற்றும் ஒருங்கிணைந்த ஐந்து வருடப் பட்டப் படிப்புகளில் "சமூக நீதி" [Social Justice] மற்றும் "தொழில்முறை நெறிமுறைகளுக்கான திருக்குறள்" ஆகிய புதிய விருப்பப் பாடங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

**4.1.12.** "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்ற கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு [அரசு, அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதிக் கல்லூரிகள்] ஆசிரிய மேம்பாட்டுத் திட்டத்தின் முதல் கட்டம் [FDP] ஜனவரி 30, 2023 முதல் பிப்ரவரி 11, 2023 வரை இப்பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டது.

**4.1.13.** சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் ஜப்பானின் கியோ பல்கலைக்கழகம் மற்றும் இந்தியாவின் RIKA இன்ஸ்டியூட் ஆகியவை ஐந்து ஆண்டு காலத்திற்குக் கல்வி மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு நடவடிக்கைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கத்திற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நிறைவேற்றியுள்ளது.

**4.1.14.** இப்பல்கலைக்கழகம் மெல்போர்ன் பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தும் மூன்று ஆண்டுகளுக்கான இளநிலை அறிவியலில் புதிய பாடத் திட்டத்தை தொடங்கியுள்ளதுடன் இதற்கென ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் மேற்கொண்டுள்ளது. இது உலக அளவில் நமது மாநில மாணவர்களுக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்தும்.

**4.1.15.** இப்பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி நிறுவனத்தில், இணையவழி [Online] கற்பித்தலில் ஒரு சான்றிதழ் படிப்பு 2022-23ஆம் கல்வி ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**4.1.16**. இப்பல்கலைக்கழகத்தின் இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ், பல்கலைக்கழகத்தின் 70 இணைவு பெற்ற கல்லூரிகளில் இளநிலை படிப்புகளைப் படிக்க 2022–23ஆம் கல்வி ஆண்டில் 200 மாணாக்கர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**4.1.17.** இப்பல்கலைக்கழகத்தில் உள்ள தொலைதூரக் கல்வி நிறுவனம் அடுத்த ஆண்டு முதல் தொலைதூர முறையில் B.Sc. Data Science மற்றும் M.B.A. Data Analytics போன்ற வளர்ந்து வரும் துறைகளில் புதிய படிப்புகளைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது.

**4.1.18.** RUSA வின் கீழ் உள்ள தொழில் முனைவு மற்றும் தொழில் மையம் இப்பல்கலைக்கழகத்தில் ECH–RUSA 2.0 திட்டத்தின் ஆதரவுடன் "அரும்பு" என்ற ஆய்வு அடிப்படையிலான திட்டத்தை தொடங்கியுள்ளது. முதுநிலை மாணவர்களின் புதுமையான திட்டத்திற்கு உதவும் வகையில் அரும்பு 2022 வடிவமைக்கப்பட்டு முன்மொழியப்பட்டுள்ளது.

**4.1.19.** 2022ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க இப்பல்கலைக்கழகத்தின் மெரினா வளாகத்தில் மாணவர் விடுதி கட்டுவதற்காக அரசு ரூ.28.05 கோடி வழங்கியுள்ளது.

**4.1.20.** இணையவழிப் பாடநெறி உள்ளடக்கம் உட்பட இணைய அடிப்படையிலான கற்றல் முறையைத் தொடங்க, பல்கலைக்கழகம் உத்தேசித்துள்ளது. மின்னஞ்சல், வீடியோ கான்பரன்சிங் மற்றும் இணையம் மூலம் நேரடி விரிவுரைகள் (வீடியோ ஸ்ட்ரீமிங்) வழி கலந்துரையாடல் நடத்தும் நோக்கத்திற்காக இணையதள மேம்பாடு மற்றும் வகுப்பறை வசதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தப் பல்கலைக்கழகம் முடிவுசெய்துள்ளது.

## 4.2. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

**4.2.1.** தமிழ்நாட்டில் இரண்டாவதாக தொடங்கப்பட்ட பல்கலைக்கழகமான மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1966ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் ஒரு முன்னோடி நிறுவனமாக, தகுதியுடைய உயர் கல்வியை வழங்குவதன் மூலம் மாநிலம் மற்றும் தேசத்தின் முன்னேற்றத்திற்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளது. மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 20 புலங்களையும், 77 துறைகளையும் கொண்டுள்ளது. மதுரை, தேனி, விருதுநகர் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் 116 இணைப்புக் கல்லூரிகளையும், 5 மாலை நேரக் கல்லூரிகளையும், 16 அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களையும் கொண்டுள்ளது.

**4.2.2.** 2021ஆம் ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக்கழகம் தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவின் நான்காவது சுற்றில் A++ என்னும் தகுதியைப் பெற்றது.

2022ஆம் ஆண்டு தேசிய நிறுவனத் தரவரிசைக் கட்டமைப்புப் பட்டியலில் 52வது இடத்தைப் பெற்றுள்ளது. இப்பல்கலைக்கழகம் இந்தியப் பல்கலைக்கழகங்களுள் முதல் வகை–I (கேட்டகிரி–1) தகுதியைப் பெற்றுள்ளது. 2022–23ஆம் ஆண்டு உலக இந்திய உயர்கல்வித் தரவரிசையில் இப்பல்கலைக்கழகம் தமிழ்நாட்டின் மாநில முதன்மை பல்துறைப் பல்கலைக்கழகம் என்ற தரத்தினைப் பெற்று அகில இந்திய அளவில் 9வது இடத்தைப் பிடித்துள்ளது.

**4.2.3.** RUSA 2.0 திட்டத்தின் கீழ் ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு, தொழில் / திறன் / தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் ஆசிரியர் மேம்பாடு ஆகிய திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூ.53.50 கோடியில் 235 ஆராய்ச்சி மாணாக்கர்கள் / திட்ட உதவியாளர்கள் அதிநவீன ஆராய்ச்சி மற்றும் உட்கட்டமைப்புகளுடன் கூடிய 57 ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள ரூ.35 கோடி ஒதுக்கப்பட்டது. மதுரை காமராசர்

பல்கலைக்கழகத்தில் ரூசா–2 கீழ் ரூ.15 கோடி மதிப்பில் 'தொழில் முனைவோர், புதுமைகளுக்கான தொழில் மையம்' அமைக்கப்பட்டுள்ளது.

**4.2.4.** பல்கலைக்கழக உயிர் அறிவியல் புலம், ரூசா 2.0 திட்டத்தின் நிதி உதவியுடன் அதிநவீன தொல் மரபணுவியல் ஆய்வகத்தை நிறுவியுள்ளது. அவ்வாய்வகம் மானுடவியல் துறையுடன் இணைந்து, கீழடி, கொந்தகை, சிவகலை, ஆதிச்சநல்லூர், கொடுமணல் உள்ளிட்ட தமிழகத்தின் தொல்பொருள் அகழ்வாராய்ச்சித் தளங்களிலிருந்து பழங்கால மனித மற்றும் விலங்குகளின் எலும்புகள் மற்றும் பழங்கால படிமங்களைச் சேகரித்து ஆய்வு செய்யத் தொடங்கியுள்ளது.

**4.2.5.** ரூசா 2.0 திட்டத்தின் உதவியுடன், தகவல் தொழில்நுட்பப் புலத்தில் செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றலில் ஒரு சிறப்பு மையம் (CoE) நிறுவப்பட்டுள்ளது.

**4.2.6.** இப்பல்கலைக்கழகத்தின் மாத மின் கட்டணச் செலவான ரூ.7.50 இலட்சத்தைக் குறைக்கும் வகையில், 3225 சூரிய சக்தி மின் தகடுகள் ரூ.7.25 கோடி செலவில், புதுதில்லியில் உள்ள ஊரக மின்சாரக் கழகத்தின் உதவியுடன் நிறுவப்பட்டுள்ளது.

**4.2.7.** தமிழக அரசு உதவியுடன் தொடங்கப்பட்ட பல்கலைக்கழக அண்ணா நூற்றாண்டு குடிமைப்பணி மையத்தில் நடத்தப்படும் இலவசப் பயிற்சி வகுப்புகளைக் குடிமைப்பணி ஆர்வலர்கள் பயன்படுத்தலாம். தற்போதைய பிரிவில், 83 மாணாக்கர்கள் (43 ஆண்கள் மற்றும் 40 பெண்கள்) பயிற்சி பெற்று வருகின்றனர்.

**4.2.8.** இப்பல்கலைக்கழகத்தின் உயிர் அறிவியல் புலத்தில் ரூ.3.5 கோடி மதிப்பிலான தூய அறையுடன் கூடிய உயிரி–பாதுகாப்பு நிலை–III ஆய்வகம் நோய்

உண்டாக்கும் உயிர்களைக் கையாளும் வகையில் நிறுவப்பட்டிருக்கிறது.

**4.2.9.** இப்பல்கலைக்கழகம், 'தன் அறக்கட்டளை' மற்றும் 'எச்.சி.எல்' ஆதரவுடன் பெரிய மரத்தோட்டத்தை நிறுவியுள்ளது. இப்பகுதியில் மரபணுப் பன்முகத்தன்மையைப் பாதுகாக்கும் வகையில், கடம்ப மரக்கன்றுகள் நடப்பட்டன. மேலும் 4,200 வேப்ப நாற்றுகள் வளாகத்தில் நடப்பட்டு வேப்ப மரக் காடு உருவாக்கப்பட்டுள்ளது.

**4.2.10.** உயிர் அறிவியல் புலத்தில் கொசு விரட்டி மேலாண்மைக்கான செயற்கை நுண்ணறிவு (AI) சாதனங்களை உருவாக்கும் செயல்முறை உள்ளது. அறிவியல் தொழில்நுட்பக்கழக "அதிநவீன பகுப்பாய்வு மற்றும் தொழில்நுட்ப உதவி நிறுவனங்கள் (SATHI)–2022"–இன் கீழ் ஒரு ஆராய்ச்சி உள்கட்டமைப்பை நிறுவுவதற்கான திட்டத்தை இப்பல்கலைக்கழகம் சமர்ப்பித்துள்ளது.

**4.2.11.** தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் இப்பல்கலைக்கழக வளாகத்தில் உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவை நிறுவ முன்வந்துள்ளது. முன்மொழியப்பட்ட உயிர் தொழில்நுட்பப் பூங்கா, தமிழ்நாட்டின் தென் மண்டலத்தில் உள்ள மாணவர் சமூகம், இளம் தொழில் முனைவோர் மற்றும் விஞ்ஞானிகளின் தொழில்துறையில் நிலையான வளர்ச்சியை நோக்கிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அமையும்.

**4.2.12.** தகவல் தொழில்நுட்பவியல் புலம், கணினி நுண்ணறிவுத்திறன் மற்றும் தரவகப் பகுப்பாய்வு, தரவு அறிவியல் மற்றும் இணைய (சைபர்) பாதுகாப்பு ஆகியவற்றில் புதுமையான ஆராய்ச்சி அணுகுமுறைகள் மூலம் மாணவர்களின் திறன் மேம்பாட்டைக் கணிசமாக மாற்றும் வகையில், கணக்கீட்டு நுண்ணறிவு மற்றும் தரவுப் பகுப்பாய்வு ஆகியவற்றில் சிறப்பான மையத்தை (CoE) நிறுவியுள்ளது. இப்பல்கலைக்கழகத் துறைகளிலும்

இணைப்புக் கல்லூரிகளிலும் படிக்கும் மாணவர்களுக்கு மேகக் கணினி மின்னணு வழி ( Cloud Computing) மதிப்பீடு செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

**4.2.13.** நடப்புக் கல்வியாண்டு முதல் நுழைவுத் தேர்வு மற்றும் மாணவர் சேர்க்கை ஆகியவற்றை இணையவழியில் பல்கலைக்கழகமே நடத்த உள்ளது. மேலும் விடைத்தாள்களைத் திருத்துவதும் இணைய வழியாக நடத்தப்பட உள்ளது.

## 4. 3. அண்ணா பல்கலைக்கழகம்

**4.3.1.** இந்தியாவின் மிகப்பெரிய தொழில்நுட்பப் பல்கலைக்கழகமான அண்ணா பல்கலைக்கழகம் உயர் தொழில்நுட்ப அறிவு மதிப்பீடுகள் கொண்ட வல்லுநர்களை உருவாக்கி வருகிறது. இந்தப் பல்கலைக்கழகம் நன்கு அறியப்பட்ட நான்கு தொழில்நுட்ப நிறுவனங்களான கிண்டி பொறியியல் கல்லூரி (1794), அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி (1944), சென்னை தொழில்நுட்ப நிறுவனம் (1949) மற்றும் கட்டடக்கலை மற்றும் திட்டமிடுதல் பள்ளி (1957) ஆகியவற்றை ஒருங்கிணைத்து செப்டம்பர் 4, 1978இல் துவங்கப்பட்டது. இப்போது இப்பல்கலைக்கழகம் மாநிலத்தின் அனைத்துப் பொறியியல் கல்லூரிகளையும் அதன் குடையின் கீழ் இணைக்கும் பல்கலைக்கழகமாகத் திகழ்கின்றது.

**4.3.2.** பல்கலைக்கழகத்தில் 4 வளாகங்கள் (CEG, ACT, MIT மற்றும் SAP), 13 உறுப்புக் கல்லூரிகள் மற்றும்

திருநெல்வேலி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 3 மண்டல வளாகங்கள் உள்ளன. 490 அரசு, அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதிக் கல்லூரிகள் அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. அண்ணா பல்கலைக்கழகத் துறைகளில் 28 இளநிலை மற்றும் 78 முதுநிலை படிப்புகளில் 11,597 மாணாக்கர்களும், இணைப்புக் கல்லூரிகளில் 47 இளநிலை மற்றும் 63 முதுநிலை படிப்புகளில் 3,91,930 மாணாக்கர்களும், தொலைதூரக் கல்வியில் 2,772 முதுநிலை மாணாக்கர்களும் பயின்று வருகின்றனர். மேலும், அண்ணா பல்கலைக்கழகத்தில் மொத்தம் 12,564 ஆராய்ச்சி மாணாக்கர்களும் பயின்று வருகின்றனர்.

**4.3.3.** 2022ஆம் ஆண்டு NIRF தரவரிசையில் மற்ற பல்கலைக்கழகங்களை ஒப்பிடுகையில் அண்ணா பல்கலைக்கழகம் 20ஆவது இடத்திலும், கட்டடக்கலை நிறுவனங்களில் 29வது இடத்திலும், பொறியியல் நிறுவனங்களில் 17ஆவது இடத்திலும், ஒட்டுமொத்தப்

பிரிவில் 22ஆவது இடத்திலும், மேலாண்மைப் பிரிவில் 49ஆவது இடத்திலும் உள்ளது. குவாக்கரெல்லி சைமண்ட்ஸ் இன்டெக்ஸ் (QS Index) 2023–இல் அண்ணா பல்கலைக்கழகம் உலகளவில் 551–560க்கு இடைப்பட்ட வரிசையிலும், ஆசிய அளவில் 185ஆவது இடத்தையும் பெற்றுள்ளது.

**4.3.4.** 29.07.2022 அன்று 42 ஆவது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் சிறப்புரை ஆற்றினார். பட்டமளிப்பு விழாவிற்கு மேதகு தமிழக ஆளுநர் தலைமை தாங்கினார். மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும் மாண்புமிகு தமிழக உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களும் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்றனர். 3,68,192 மாணாக்கர்கள் இந்தப் பட்டமளிப்பு விழாவில் தங்களது பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

**4.3.5.** R–2021 பாடத்திட்டத்தை உயர்தனிச்சிறப்புகளுடன் விரிவாக்கம் செய்கையில் தனித்திறன் பயிற்சிகளில் மிகுந்த கவனம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. அண்ணா பல்கலைக்கழகம் மூலம் 150 தொழில்துறை வல்லுநர்கள் மற்றும் பங்குதாரர்களால் மாணவர்களுக்குப் புத்தாக்க பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன. மேம்படுத்தப்பட்ட கல்விமுறையின் மூலம் ஒவ்வொரு துறையிலும் தனித்திறன் உயர்வுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு மேம்படுத்தப்பட்ட கல்வி முறையில் காணப்படும் "முழுமையான நெகிழ்ச்சித்தன்மையுடன் கூடிய மதிப்பீடு முறையானது" மாணாக்கர்கள் தங்களுக்குப் பிடித்த பாடப்பிரிவினைத் தேர்ந்தெடுக்கத் துணை நிற்கிறது.

**4.3.6.** அண்ணா பல்கலைக்கழகம் பல்வேறு வகையான புதுமையான அனுபவத்துடன் கூடிய கற்றலை ஊக்குவிக்கும் வகையில் பயனுள்ள

கற்பித்தல் – கற்றல் முறையை அறிமுகப்படுத்தியது. மேற்கூறியவற்றின் ஒரு பகுதியாக, ஒரு தனித்துவமான மற்றும் முதல் முயற்சியாக, அண்ணா பல்கலைக்கழகமும் IBM நிறுவனமும் இணைந்து "அனுபவத் திட்ட அடிப்படையிலான கற்றல்" படிப்பை, "புதுமை, வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவுக்கான தயார்நிலை" என்ற 3 மதிப்பீட்டு முறையில் (Credit) வழங்குகிறது. இந்தப் படிப்பு அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் ICT, NASSCOM மற்றும் IBM ஆகிய நிறுவனங்களின் கூட்டு முயற்சியால், தமிழ்நாடு அரசின் நான் முதல்வன் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்த 538 கல்லூரிகளில் கணினி அறிவியல் மற்றும் பொறியியல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பு பொறியியல் துறைகளில் ஏழாம் பருவத்தில் பயிலும் 54,000 மாணாக்கர்கள் இந்தப்

படிப்பை முடித்துள்ளனர். வடிவமைப்புச் சிந்தனைகள், ஏற்புடைய சிறந்த முறைகள், கருத்தியல்கள், விமர்சன சிந்தனைகள், குழுப்பணிகள், தொழில்நுட்பத் தொடர்பான குவியல்கள், குறிமுறையாக்கம் மற்றும் தீர்வு ஆகியவை இப்பாடத்தின் முக்கிய முடிவுகளாக உள்ளன.

**4.3.7.** தமிழ்நாடு அரசு மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமும் நான் முதல்வன் திட்டத்தின் முன்முயற்சியின்கீழ் பல்கலைக்கழகத் துறைகள், பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் மற்றும் தன்னாட்சி பெறாத இணைப்புக் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் திறன் சார்ந்த படிப்புகளை வழங்கும் திட்டத்தை தொடங்கியுள்ளது. இம்முன்முயற்சியின் மூலம், தனியார் நிறுவனங்கள் கூட்டாண்மை செய்யப்பட்டு, செப்டம்பர் 2022 – ஜனவரி 2023 கல்வி அமர்வின் போது முறையே 2 மதிப்பீட்டுமுறை (Credit) கொண்ட 19 படிப்புகள் வழங்கப்பட்டன. பிப்ரவரி 2023 – மே 2023 கல்வி

அமர்வின் போது தலா 2 மதிப்பீட்டுமுறை (Credit) கொண்ட 23 படிப்புகள் வழங்கப்படுகின்றன. மேலும், இத்திட்டத்தின்கீழ் ஒற்றைப்படைப் பருவத்தில் பயிலும் (Odd Semester) 1,78,421 மாணவர்களுக்குப் பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சிகள் அளிக்கப்பட்டன. தற்போது 1,54,950 மாணாக்கர்கள் இரட்டைப்படை பருவத்தில் (Even Semester) சேர்ந்துள்ளனர். 9,405 ஆசிரிய உறுப்பினர்களுக்கு 19 வெவ்வேறு பாடப்பிரிவுகளில் ஒற்றைப்படை பருவத்தில் (Odd Semester) பயிற்சித் திட்டம் நடத்தப்பட்டது. மேலும் 5,596 ஆசிரியர்கள் இரட்டைப்படை பருவத்தில் (Even Semester) 23 படிப்புகளில் பயிற்சி பெற்றுள்ளனர்.

**4.3.8.** பல்கலைக்கழகம் கையேடு / கையியக்க மதிப்பீட்டிற்குப் பதிலாக மின் எண்ணியல் மதிப்பீட்டு முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. தமிழ்நாடு அரசு TANII திட்டத்தின்கீழ் டிஜிட்டல் மதிப்பீட்டு முறை திட்டத்திற்கு ரூ.9 கோடி அனுமதித்துள்ளது. இதில் முதல் தவணையாக ரூ.84.5 இலட்சம் வழங்கியுள்ளது.

**4.3.9.** அண்ணா பல்கலைக்கழகத்தில் பட்டயப் படிப்பு முடித்த மாணவர்களை, இளநிலை பட்டப்படிப்பு பிரிவின் கீழ் சேர்ப்பதற்காக 2022-23ஆம் ஆண்டு முதல் நேரடி இரண்டாமாண்டு சேர்க்கை (Lateral entry) அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் கிண்டி பொறியியல் கல்லூரி வளாகத்தில் 360 மாணாக்கர்களும், அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் 124 மாணாக்கர்களும், சென்னை தொழில்நுட்ப நிறுவன வளாகத்தில் 230 மாணாக்கர்களும் தற்போது பயின்று வருகின்றனர்.

**4.3.10.** அண்ணா பல்கலைக்கழகத்தில் "தமிழர் மரபு - தமிழரும் தொழில்நுட்பமும்" என்ற பாடங்கள் இளங்கலை பொறியியல் பிரிவுகளுக்கு முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டு, அதனைப் பயிற்றுவிக்க 23 தமிழாசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

"தமிழர் மரபு" என்ற பாடப் பகுதியில் தமிழர் மரபு குறித்த பெருமைமிகு செய்திகள் பொறியியல் கல்லூரி

மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கப்படுகின்றன. தமிழ் இலக்கியமும், இலக்கியத்தின் வழியான பண்பாடும் குறித்து இப்பகுதி அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் மொழியானது செம்மொழியாக அறிவிக்கப்பட்டிருப்பதற்கான அடிப்படைக் கூறுகளும் சிறப்புத் தகுதிகளும் இப்பகுதியில் அமைந்துள்ளன.

"தமிழரும் தொழில்நுட்பமும்" என்ற பாடப் பகுதியில் தமிழர்கள் பழங்காலத்திலேயே ஆகச்சிறந்த தொழில்நுட்ப அறிவுடன் விளங்கியதை வேளாண்மைத் தொழில்நுட்பம், நெசவுத் தொழில்நுட்பம், பானைத் தொழில்நுட்பம், கட்டடத் தொழில்நுட்பம் குறித்து இலக்கிய ஆதாரங்களுடனும், கல்வெட்டு – அகழ்வாய்வுச் செய்திகளுடனும் மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கப்படுகிறது.

**4.3.11.** அண்ணா பல்கலைக்கழக SAP வளாகத்திலுள்ள திட்டமிடுதல் துறையில் (Department of Planning) 2022 ஆம் கல்வியாண்டில் B.Plan என்னும்

இளநிலை பட்டப்படிப்பு 40 மாணவர்களைச் சேர்க்கும் வகையில் தொடங்கப்பட்டது. தமிழ்நாடு அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் மூலம் இதற்கு ரூ.18.54 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

**4.3.12.** NHHID, TEC, AIC – AU Incubation foundation, ANIHEES, CIPR, CED மற்றும் BIRAC மையங்கள் மூலமாக "தொழில் முனையும் வளர்ச்சி மற்றும் புத்தாக்கக் குழு" (EDIC) புதிய முயற்சிகளைத் தடையின்றி கொண்டு செல்வதற்காகத் தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அண்ணா பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கு எழுச்சியுடன் கூடிய நற்சூழல் ஏற்பட்டுள்ளது. AIC–AU அடைகாக்கும் அறக்கட்டளை (Incubation Foundation) 27 திட்ட ஆலோசனை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. அதில் 9 திட்டத்திற்குத் தொடக்க நிதியாக ரூ.9.15 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**4.3.13.** இருவாரங்களுக்கு ஒருமுறை SWOC ஆய்வு முறை மூலமாக கல்வி மற்றும் நிர்வாகப் பிரிவுகளின் வளர்ச்சி நிலைகள் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன.

**4.3.14.** அண்ணா பல்கலைக்கழகம், 31,155 வெளியீடுகள் மற்றும் 4,01,965 மேற்கோள்களுடன் முதல் 20,000 ஆவணங்களுக்கான 'h' குறியீடு 178ஆக உள்ளது. இது தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களிலேயே மிக உயர்ந்ததாகும்.

**4.3.15.** ஆராய்ச்சி மற்றும் புதுமையான கண்டுபிடிப்புகளுக்காக மட்டும் கடந்த ஆண்டில் 15 தன்னாட்சி ஆராய்ச்சி மையங்களைப் பல்கலைக்கழகம் தொடங்கியுள்ளது. இதில் Automobile Technology, Robotics & Automation, IoT, e-vehicles, AI & Data Science Research and Application, Wireless System and

Design, Multi–disciplinary System Research and Energy Storage ஆகிய துறைகளும் அடங்கும்.

**4.3.16.** ஆராய்ச்சி முடிவுகளின் அடிப்படையில் 2022–23 ஆம் ஆண்டில் 23 காப்புரிமைகள் அண்ணா பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளன மற்றும் 7 காப்புரிமைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

**4.3.17.** கிண்டி பொறியியல் கல்லூரி வளாகத்தில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் ஆய்வுப்பூங்கா ஒன்று தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. புத்தாக்கம், அடைகாப்பு, புதிய முயற்சிகளை விரைவுபடுத்துதல் – போன்றவற்றை ஊக்குவிக்க இது பயன்படும்.

**4.3.18.** கடந்த 24.09.2022 அன்று புது தில்லியில் நடைப்பெற்ற நாட்டு நலப்பணித் திட்ட (N.S.S) தின கொண்டாட்டத்தின் போது மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு அவர்களிடமிருந்து சிறந்த

பல்கலைக்கழக தேசிய விருதை அண்ணா பல்கலைக்கழகம் பெற்றது.

**4.3.19.** 2022–23இல் சுமார் 215 நிறுவனங்கள் அண்ணா பல்கலைக்கழகம் – பல்கலைக்கழக தொழில்துறை ஒத்துழைப்புக்கான மையத்திற்கு (AU–CUIC) வருகை தந்துள்ளன. மேலும் அவர்கள் 1,308 இளநிலை மற்றும் 301 முதுகலை மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகளை அளித்துள்ளனர். அவர்களுக்கு ஆண்டு வருமானமாக ரூ.3 இலட்சம் முதல் ரூ.40 இலட்சம் வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**4.3.20.** ரெனால்ட் நிசான் தொழில்நுட்பம் மற்றும் வணிக மையம் இந்தியா பிரைவேட் லிமிடெட் (RNTBCI), டெமினோஸ் (Temenos), டன் பிராட்ஸ்ட்ரீட் (Dun Bradstreet) ஆகிய மூன்று தொழில் நிறுவனங்கள் பல்கலைக்கழகத் துறைகளைச் சேர்ந்த ஏறத்தாழ

260 மாணவர்களுக்குத் தலா மாதம் ரூ.30,000/- என்ற அளவில் உதவித்தொகை வழங்க முன் வந்துள்ளன.

**4.3.21.** அண்ணா பல்கலைக்கழகத்தின் போராசிரியர்கள், அறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணாக்கர்கள் தொடர்ந்து பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். ரூசா (RUSA) 2.0 திட்டத்தின்கீழ், தொழில் முனைவோர், புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில் மையம் மற்றும் மின்சார வாகன தொழில்நுட்பங்களுக்கு ரூ.25 கோடியும், பிற நிதியுதவி சார்ந்த ஆராய்ச்சித் திட்டங்களுக்கு ரூ.21 கோடியும் வழங்கியுள்ளது. ஆசிரியர்கள் ஆலோசனை மற்றும் ஆய்வுகள் செய்து அதன்மூலம் ரூ.53.70 கோடி ஈட்டியுள்ளனர்.

## 4.4. பாரதியார் பல்கலைக்கழகம்

**4.4.1.** பாரதியார் பல்கலைக்கழகம் 1982ஆம் ஆண்டு 9 கல்வித் துறைகளுடன் நிறுவப்பட்டது. தற்போது பல்கலைக்கழகத்தில் 13 பள்ளிகள் 38 துறைகள் உள்ளன. இந்த துறைகள் மூலம் ஆய்வியல் நிறைஞர் (M.Phil) மற்றும் முனைவர் பட்ட ஆய்வாளர் (Ph.D.) பட்டப்படிப்புகளுடன் 46 முதுகலை பாடங்கள் மற்றும் 3 இளநிலை பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. 2022–23ஆம் கல்வியாண்டில் 2740 முதுநிலை மாணாக்கர்கள், 473 இளநிலை மாணாக்கர்கள், 99 ஆய்வியல் நிறைஞர் (M.Phil) மற்றும் 764 முனைவர் பட்ட ஆய்வாளர்கள் (Ph.D) பதிவில் உள்ளனர்.

**4.4.2.** இப்பல்கலைக்கழகத்தில் 140 இணைப்புக் கல்லூரிகள் (20 அரசுக் கல்லூரிகள், 16 அரசு உதவி பெறும் கல்லூரிகள், 1 விமானப்படை நிர்வாகக் கல்லூரி, 13 மேலாண்மைக் கல்லூரிகள் மற்றும் 90 சுயநிதிக்

கல்லூரிகள்) உள்ளன. மேலும் இப்பல்கலைக்கழகத்தின் கீழ் 34 ஆராய்ச்சி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

**4.4.3.** இந்த ஆண்டு 81,487 இளநிலை, முதுநிலை, ஆய்வியல் நிறைஞர் (M.Phil) முனைவர் பட்ட ஆய்வாளர்கள் (Ph.D.,) ஆய்வு மாணாக்கர்கள், முறையான கல்வி முறையிலும், 162 மாணாக்கர்கள் பல்கலைக்கழகத் துறைகள் மற்றும் பாரதியார் பல்கலைக்கழக தொலைதூரக் கல்வி மையம் – இணையவழிக் கல்வி வாயிலாகவும் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட நிறுவனங்களில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**4.4.4.** 2021–22 ஆம் ஆண்டு 353 மாணாக்கர்கள் பட்டியலினத்தவர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவரு (SC / ST / SCC) க்கான இந்திய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகையின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.39.03 இலட்சம் பெற்று

பயனடைந்தனர். 129 மாணாக்கர்கள் தமிழ்நாடு அரசின் உயர் கல்வி சிறப்புக் கடன் உதவித் தொகையின் கீழ் பயனடைந்துள்ளனர். அதே பிரிவில் உள்ள விடுதி மாணவர்களுக்கு ரூ.10.21 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.4.5.** 2016–23ஆம் ஆண்டிற்கான தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று குழுவால் (NAAC) தொடர்ச்சியாக மூன்று சுழற்சிகளிலும் "A" கிரேடு மூலம் அங்கீகாரம் பெற்றுள்ள பாரதியார் பல்கலைக்கழகம் இப்போது NAAC அங்கீகார செயல்முறையின் 4 வது சுழற்சிக்கான சுய ஆய்வு அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

**4.4.6.** 2022ஆம் ஆண்டிற்கான இந்திய அரசின் கல்வி அமைச்சகம் (MoE), வெளியிட்ட தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பின் (NIRF) தரவரிசையில் பாரதியார் பல்கலைக்கழகம், இந்தியப் பல்கலைக்கழகங்களில் 15வது இடத்திலும்,

ஒட்டுமொத்த வரிசையில் 24வது இடத்திலும், ஆராய்ச்சி வகைகளில் 22வது இடத்திலும் உள்ளது. பாரதியார் பல்கலைக்கழகம் 2023ஆம் ஆண்டிற்கான QS, UK தரவரிசையில் ஆசிய பல்கலைக்கழகங்களில் 205வது இடத்திலும், தெற்கு ஆசிய அளவில் 36வது இடத்திலும் உள்ளது.

பாரதியார் பல்கலைக்கழகம் 2023 ஆம் ஆண்டுக்கான UK, TIMESஇன் உயர்கல்விக்கான உலகப் பல்கலைக்கழகத் தரவரிசையில் 801–1000 இடத்திலும், இந்திய நிறுவனங்களில் 18வது இடத்திலும், உலக இளம் பல்கலைக்கழகங்களில் 251–300 இடங்களிலும் இடம் பெற்றுள்ளது.

**4.4.7.** முன்னணி அறிவியல் ஆராய்ச்சி தரவுத்தளமான SCOPUS அடிப்படையில் உலகின் சிறந்த 2% விஞ்ஞானிகளின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள 18 பேராசிரியர்களைக் கொண்டிருப்பதில் இப்பல்கலைக்கழகம் பெருமை கொள்கிறது. பாரதியார்

பல்கலைக்கழகப் பேராசிரியர்களில் ஒருவர், கிளாரிவேட் அனலிட்டிக்ஸில் (Claryvate/Analytics) மிகவும் அதிகமாக மேற்கோள் காட்டப்பட்ட ஆராய்ச்சியாளர் என்று பட்டியலிடப்பட்டுள்ளார்.

**4.4.8.** இப்பல்கலைக்கழகம் ஜனவரி 10, 2023 SCOPUS தரவுத்தளத்தின்படி 11,445 வெளியீடுகள், 1,72,605 மேற்கோள்களுடன், "H" Index–யில் 137 குறியீடுகளைக் கொண்டுள்ளது.

**4.4.9.** இப்பல்கலைக்கழகத்தின் பெயரில் பன்னிரெண்டு காப்புரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், இருபது காப்புரிமைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன மற்றும் பதினாறு பதிப்புரிமைகள் இப்பல்கலைக்கழகத்தின் பெயரிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**4.4.10.** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி இப்பல்கலைக்கழகத்தில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் அறிவு

ஆராய்ச்சிப் பூங்கா அமைக்கும் பணி ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது.

**4.4.11.** 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் இப்பல்கலைக்கழகத்தில் "கல்லூரிக் கனவு" நிகழ்ச்சியின் போது, பாரதியார் பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரிகள் மற்றும் மாவட்டத்தில் உள்ள பள்ளிகளுக்கு இடையே 40க்கும் மேற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoUs) கையெழுத்தாகின. இந்த முயற்சியின் மூலம், அரசு, அரசு உதவி பெறும் மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் 10–ஆம் வகுப்பு முடித்த மாணாக்கர்கள், உயர்கல்வியில் உள்ள பல்வேறு பாடப் பிரிவுகளைப் பற்றித் தெரிந்துகொள்ள கல்லூரிகளில் இருந்து தொழில் வழிகாட்டிக்கான வாய்ப்பைப் பெறுவார்கள்.

**4.4.12.** இப்பல்கலைக்கழகம் மற்றும் டாடா எலக்ட்ரானிக்ஸ் இண்டஸ்ட்ரி, ஓசூர் இணைந்து பல்கலைக்கழகம் மற்றும் தொழில்துறை கூட்டுறவின்

கீழ் (BU–CUIC) புதிதாக, பி.எஸ்சி. (உற்பத்தி அறிவியல்) படிப்பை மின்னணு சாதனம் மற்றும் குறைக்கடத்தி உற்பத்தித் துறையைச் சார்ந்த டாடா எலக்ட்ரானிக்ஸின் ஊழியர்களுக்காக (95% பெண் பணியாளர்கள்) தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ஊழியர்களில் 85% பேர் முதல் பட்டதாரிகளாக உள்ளனர், மேலும், அவர்கள் இந்தியாவில் நுகர்வு மின்னணு சாதன துறையில் இன்னும் 4 – 5 ஆண்டுகளுக்கு வழி நடத்துவார்கள்.

**4.4.13.** முன்னாள் DRDO–Bharathiar University Center for Life Sciences (DRDO–BU CLS) தற்போது DRDO – Industry–Academia Centre of Excellence பாரதியார் பல்கலைக்கழகம் (DIA–CoE BU) ஆக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. அக்டோபர் 20, 2022 அன்று குஜராத்தின், காந்திநகரில் DEPEXPO 2022 இல் DRDO மற்றும் BU இடையே அடுத்த 25 ஆண்டுகளுக்கு (2047 வரை) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டுள்ளது. பாதுகாப்புத்

தொழில்நுட்பங்கள் மற்றும் தேவைகள் ஆகியவற்றில் ஒன்றிணைந்து செயல்படுவதற்கு இப்பகுதியில் தொழில்துறை அகாடமியா ஒத்துழைப்புகளை அதிகரிக்க இந்த மையம் உதவுகிறது.

**4.4.14.** இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் ஒட்டுமொத்த ஹெச்–இன்டெக்ஸ் (ஸ்கோபஸ்) அடிப்படையில் இப்பல்கலைக்கழகத்திற்கு **DST-PURSE** திட்டத்தின் மூலம் ரூ.17.25 கோடி அதிநவீன கருவிகளை வாங்குவதற்காக வழங்கப்பட்டுள்ளது.

**4.4.15.** இந்திய அரசின் கல்வி அமைச்சகத்தின் ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு மற்றும் தர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.50 கோடி RUSA 2.0 திட்டத்தைப் பெறும் இந்தியாவில் உள்ள 16 பல்கலைக்கழகங்களில் இப்பல்கலைக்கழகமும் ஒன்றாகும். இந்த மானியத்தின் மூலம், பாரதியார் பல்கலைக்கழகம் தொழில்முனைவோர் கண்டுபிடிப்பு மற்றும் தொழில் மையத்தை (BEICH) ரூ.15 கோடியிலும், பாரதியார்

புற்றுநோய் சிகிச்சை ஆராய்ச்சி மையத்தினை (BCTRC) ரூ.35 கோடி செலவிலும் தொடங்கியுள்ளது.

**4.4.16.** கோவிட் 19 பெருந்தொற்று சூழ்நிலைக்கு ஏற்றவாறு, இப்பல்கலைக்கழகம் ரூ.1.35 கோடி நிதியுதவியுடன் தமிழக அரசின் ஆதரவுடன் வளாகம் முழுவதும் நிறுவன வள திட்டம் (ERP) உருவாக்கத் தொடங்கியுள்ளது.

**4.4.17.** பாரதி நூற்றாண்டு விழா மற்றும் இந்திய சுதந்திரத்தின் 75 வது ஆண்டு விழாவின் ஒரு பகுதியாக ஒரு மணிக்கூண்டு கட்டப்பட்டுள்ளது. பாரதியார் நூற்றாண்டு விழாவின் ஒரு பகுதியாக, வளாகத்தில் பாரதியார் அருங்காட்சியகம் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**4.4.18.** பழங்கால பாரம்பரிய மூலிகை மருத்துவத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்த தாவரங்களை வளர்ப்பதற்காக மூலிகைத் தோட்டத்தை இப்பல்கலைக்கழகம் நிறுவியுள்ளது.

**4.4.19.** 2022–23ஆம் ஆண்டில் தோராயமாக ரூ.43 கோடி தோராய மதிப்பீட்டில் 3 உயிர் அறிவியல் கட்டடங்கள், 3 சமூக அறிவியல் கட்டடங்கள் மற்றும் மேம்பட்ட அறிவியல் ஆய்வகத்தின் விரிவாக்கத்திற்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

**4.4.20.** 2022–23ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, பெண்கள் விடுதி கட்ட ரூ.15.24 கோடி இப்பல்கலைக்கழகத்திற்கு அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

**4.4.21.** சமூகத்தின் முன்னேற்றத்திற்காக கோவையில் உள்ள அனைத்து கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள், மருத்துவ ஆய்வகங்கள், பயிற்சி நிறுவனங்களை ஒன்றிணைத்து கோயம்புத்தூர் கல்வி மையத்தை அமைப்பதற்கான கூட்டு மானியத்திற்கான அடிப்படை முன்மொழிவை இப்பல்கலைக்கழகம் தயாரித்துள்ளது.

**4.4.22.** தோடா, பணியா, இருளா, முதுவா, கோட்டா, காதர், காட்டுநாயக்கர், குறும்பா போன்ற பழங்குடி மொழிகளைப் பாதுகாத்துப் பராமரிக்கும் வகையில் இப்பல்கலைக்கழகத்தில் திராவிட பழங்குடியினர் மொழிகள் மையம் நிறுவப்பட உள்ளது.

**4.4.23.** மெல்போர்ன் பல்கலைக்கழகத்துடன் இயற்பியல் மற்றும் வேதியியல் இணைந்த இளநிலை அறிவியல் பட்டப்படிப்பைத் தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

## 4.5. பாரதிதாசன் பல்கலைக்கழகம்

**4.5.1.** பாரதிதாசன் பல்கலைக்கழகம் 1982ஆம் ஆண்டு புரட்சிக்கவிஞர் மற்றும் சாகித்திய அகாடமி விருது பெற்ற பாரதிதாசன் பெயரில் தொடங்கப்பட்டது. பாரதிதாசன் பல்கலைக்கழகக் கோட்பாடாக புரட்சிக் கவிஞரின் கவிதை வரியில் இருந்து 'புதியதோர் உலகம் செய்வோம்' வடிவமைக்கப்பெற்றது.

**4.5.2.** தரமான கற்பித்தலை உறுதி செய்தல், உயர்கல்வி வழி பாடம் கற்றல், ஆராய்ச்சி மற்றும் அறிவை விரிவுபடுத்துதல், மாணவர்களின் தெளிவான தேடல், அறிவியல் சிந்தனை, ஆழ்ந்த தேடல் உள்ளவர்களாக உருவாக்கி அறிவின் எல்லைக்கு அவர்களை முன்னோக்கி எடுத்துச் செல்வதே இப்பல்கலைக்கழகத்தின் பணி ஆகும்.

**4.5.3.** பல்கலைக்கழகத்தின் கல்விசார் மையங்கள் நான்கு புலங்கள், 16 பள்ளிகள், 38 துறைகள், ஒரு முதுநிலை விரிவாக்க மையம்,

33 சிறப்பு ஆராய்ச்சி மையங்கள், 11 நிபுணத்துவம் பெற்ற ஆய்வு மையங்கள், 10 மையப்படுத்தப்பட்ட மையங்கள், பொது நூலகம், கணினி மயமாக்கப்பட்ட சுவடி அரங்கம் மற்றும் தொலைதூர மற்றும் இணையவழிக் கல்வி மையம் (CDOE) ஆகியவற்றை உள்ளடக்கியது.

**4.5.4.** மாற்றுத்திறனாளி மையத்தின் வழியாக இளநிலை கணினிப் பயன்பாடு, முதுநிலை பட்டயப் படிப்பு, அலுவலகத் தானியங்கி பட்டயப்படிப்பு மற்றும் துணை தொழில்நுட்பம், நிழற்படத் தொகுப்பு, இரு பரிமாண படக் கதையாக்கம், அடிப்படைக் கணினி, காது கேளாத மற்றும் வாய் பேச இயலாத குழந்தைகளுக்கான பயிற்சி மற்றும் மேம்பாடு ஆகிய படிப்புகள் வழங்கப்பட்டு மாற்றுத் திறனாளிகளை தொழில் கற்ற திறனாளியாக மாற்றுகிறது.

**4.5.5.** பல்கலைக்கழக முன்னாள் மாணவர் சங்கத்திற்கான தனி இணையதளம் தொடங்கப்பட்டு

அவர்களின் பங்களிப்பு பல்கலைக்கழக மேம்பாட்டிற்கு பயன்படுத்தப்படுகிறது.

**4.5.6.** அலகாபாத் இந்தியச் சமூக அறிவியல் அமைப்பு வழியாக, இப்பல்கலைக்கழகத்தின் நிதி நல்கையுடன், Pan–India 46 ஆவது இந்தியச் சமூக அறிவியல் மாநாடு 2023ஆம் ஆண்டு ஜனவரி 27 முதல் 31 வரை 5 நாட்கள் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

**4.5.7.** தமிழக அரசு RUSA–2.0 திட்டத்தின் கீழ் 2022ஆம் ஆண்டிற்கான OUR WINNER AWARD–ஐ தமிழகப் பல்கலைக்கழகங்களுள், இப்பல்கலைக் கழகத்திற்கு வழங்கிச் சிறப்பித்தது.

**4.5.8.** இந்தியப் பல்கலைக்கழகக் கூட்டமைப்பு பிப்ரவரி 2023–இல் நடத்திய தேசிய அளவிலான நாட்டுப்புற நடனப் போட்டியில் பாரதிதாசன் பல்கலைக்கழகக் குழு வெற்றி பெற்றது.

**4.5.9.** மிகுந்த ஆற்றலுடன் செயல்படும் பல்கலைக்கழகத்தின் நாட்டுநலப்பணித் திட்டம் (NSS),

2017–18ஆம் ஆண்டிற்கான தேசிய விருதினைப் பெற்றது. நாட்டுநலப்பணித் திட்ட தன்னார்வலர்கள் பல்கலைக்கழக வளாகத்தின் உள்ளேயும், வெளியேயும், நகரம், கிராமம், மாவட்ட தலைநகரங்கள் எனத் தங்களது சேவையைச் சிறப்பாக ஆற்றிவருகின்றனர். கோவிட்–19, விழிப்புணர்வு தடுப்பூசி பணி என இளையோர் செஞ்சிலுவை இயக்கத்தோடு தோளோடு தோளாக நின்று களப்பணி ஆற்றியது.

**4.5.10.** நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 6.1.2023 முதல் 11.02.2023 வரை ஆசிரியர் மேம்பாட்டு பயிற்சி நடைபெற்றது.

**4.5.11.** RUSA – 2.0 – நிதிநல்கையுடன் ரூ.4 கோடியில் நவீனத் தொழில் நுட்பத்துடன் கூடிய X–கதிர் போட்டோ எலக்ட்ரான் ஸ்பெக்ரோ மீட்டர் பல்கலைக்கழக அறிவியல் சாதன மையத்தில் 17.02.2023இல் நிறுவப்பட்டுள்ளது.

**4.5.12.** இப்பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆராய்ச்சிப்பிரிவு பிஎச்.டியின் பதிவு முதல் முடிவு அறிக்கை வரை, பல்கலைக்கழகத்தால் வடிவமைக்கப்பட்ட மென்பொருள் துணை கொண்டு இணையவழியில் நடைபெறுகிறது. டர்ன்ட்டின் (TURNITIN) நெறி மற்றும் எடுத்தாளுகையை சரிபார்க்கும் மென்பொருள், பல்கலைக்கழகத்தின் நிதிஉதவியுடன் நிறுவப்பட்டுள்ளது.

**4.5.13.** பல்கலைக்கழக சமூகப்பணித்துறையின் பன்னாட்டுத் தொடர்பில், ஸ்வீடனின் மேற்கு பல்கலைக்கழகத்தின் சமூகப் பணித்துறையுடன் மாணவ பரிமாற்ற புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகம், சமூகப்பணித் துறையின் இரண்டு மாணாக்கர்கள், லின்னேயஸ் ஆசிரியர் மாணவர் பரிமாற்றத்திற்கு ஸ்வீடனின் மேற்குப் பல்கலைக்கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். பாரதிதாசன் பல்கலைக்கழகப் பருவத் தேர்வுகள் மற்றும்

விடைத்தாள் மதிப்பிடுதல் யாவும் கணினிமயமாக்கப்பட்டன.

**4.5.14.** 2022ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, பாரதிதாசன் பல்கலைக்கழத்தின் காஜாமலை வளாகத்தில் பெண்கள் விடுதி கட்டுவதற்காக அரசு ரூ.8.83 கோடி வழங்கியுள்ளது.

**4.5.15.** தகவல் மற்றும் தொலைத் தொடர்பில் தொழில்நுட்ப அறிவினைப்பெறும் வகையில் பல்கலைக்கழகத்தின் அனைத்துத் துறைகளிலும், திறன் வகுப்பறைகள் (Smart Classroom) உள்ளன. கற்றல் மேலாண்மை அமைப்பினைப் பல்கலைக்கழகம் ஏற்றுக் கொண்டுள்ளது. இப்பல்கலைக்கழகம் அனைத்துப் பணியாளர்களுக்கும் உயிரிய அளவியல் முறை வருகைப் பதிவேடு மற்றும் மின்னணு வருகைப் பதிவேட்டினை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

## 4.6. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்

**4.6.1.** அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற புனித அன்னை தெரசா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, பெண்கல்வி மேம்பாட்டிற்கான ஒரு சிறந்த கல்வி நிலையமாக விளங்குகிறது. தமிழ்நாடு அரசால் 1984 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இப்பல்கலைக்கழகம், மாநிலத்திலேயே ஒரே ஒரு மகளிர் பல்கலைக்கழகம் என்ற பெருமையையும், தேசத்தில் மூன்றாவது பல்கலைக்கழகம் என்ற தனித்துவத் தகுதியையும் பெற்றுள்ளது. மேலும், இப்பல்கலைக்கழகம் பெண்களால், பெண்களுக்காக, பெண்களே நடத்தும் உயர்கல்வி நிறுவனம் என்ற தனித்துவத்தையும் பெற்றுள்ளது.

**4.6.2.** இப்பல்கலைக்கழகம் "சரி நிகர் சமானத்தை நோக்கி" என்ற குறிக்கோளுடன், கல்வியின் மூலம் பெண்கள் மேம்பாடு மற்றும் சமத்துவ சமுதாயம்

ஆகியவற்றை உருவாக்கும் உயர்ந்த இலக்குடன் செயல்பட்டு வருகிறது. இங்கு பயிலும் மாணவியரை, உலகத்தரம் வாய்ந்த உயர்கல்வி உதவியுடன், சவால்கள் நிறைந்த பொறுப்புகளை ஏற்று, நிலையான தேசிய வளர்ச்சிக்குப் பங்களிக்கும் திறமையுள்ளவர்களாக மாற்றும் விதமாக இப்பல்கலைக்கழகம் பயிற்சி அளிக்கிறது.

**4.6.3.** இப்பல்கலைக்கழகத்தில் 16 துறைகளும், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் முதுநிலை மற்றும் ஆய்வு விரிவாக்க மையங்களும், பள்ளப்பட்டியில் உள்ள சிப்காட் வளாகத்தில் மகளிர் மேம்பாட்டு மையமும் உள்ளன. தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள மகளிர் கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரிகளாக இணைக்கப்பட்டுள்ளன. தற்பொழுது இப்பல்கலைக்கழகத்தின் கீழ் 3 அரசு கலைக்கல்லூரிகள், 1 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி, 2 தன்னாட்சி மற்றும் அரசு உதவி பெறும்

கல்லூரிகள் மற்றும் 7 தனியார் கல்லூரிகள் என மொத்தம் 13 கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன.

**4.6.4.** அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் மூன்றாம் சுழற்சியில் தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று குழுவின் "A" கிரேடு அங்கீகாரம் பெற்றுள்ளது. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தால் ஒன்பது காப்புரிமைகள் 2022இல் பதிவு செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

**4.6.5.** இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலுள்ள கேம்பிரிட்ஜ் ஆங்கில மதிப்பீடு நிறுவனத்தின் மூலம் ஆங்கிலத்தில் கருத்துப்பரிமாறும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி, பல்கலைக்கழக மாணவிகள் மற்றும் நிர்வாக ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது. அமெரிக்காவை தளமாகக் கொண்ட சென்னையிலுள்ள INSTA GANA Live நிறுவனம், பல்கலைக்கழக மாணவிகளுக்கு

இணையவழி வேலைவாய்ப்பு பயிற்சியை வழங்கி வருகிறது.

4.6.6. இப்பல்கலைக்கழகத்தின் தமிழ்நாடு காமன்வெல்த் சர்வதேச மையம் மூலமாக 4 வெளிநாட்டுப் பேராசிரியர்கள் பல்கலைக்கழகத்திற்கு வருகை புரிந்து சிறப்புரை ஆற்றினர். (டாக்டர். சஃபி பிளாரன்ஸ், ஜாஜன் பல்கலைக்கழகம், சவுதி அரேபியா, டாக்டர். ஆர். ஜகந்நாதன், பேராசிரியர், செயின்ட் தெரசா பல்கலைக்கழகம், செயின்ட் வின்சென்ட்ஸ் மற்றும் கிரெனடைன்ஸ், மேற்கிந்தியத் தீவுகள், முன்னாள் துணைவேந்தர், மத்திய கிழக்கு பல்கலைக்கழகம், ராஸ் அல் கைமா, ஜக்கிய அரபு எமிரேட்ஸ், டாக்டர் சேவியர் பெர்னாண்டோ, பேராசிரியர், ரைர்சன் கம்ப்யூட்டிங் லேப், ரைர்சன் பல்கலைக்கழகம், கனடா, டாக்டர் விஜேந்திர அகர்வால், மினியாபோலிஸ், முன்னாள் நிர்வாக உறுப்பினர், வெள்ளை மாளிகை அமெரிக்கா, அறிவியல் மற்றும்

தொழில்நுட்பக் கொள்கை, வாஷிங்டன் DC, அமெரிக்கா).

4.6.7. பல்கலைக்கழகத்தின் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரி தொழில்நுட்பவியல் துறைகள் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைந்து, டிஎஸ்டி (DST) – அதிநவீன பகுப்பாய்வு மற்றும் தொழில்நுட்ப உதவி நிறுவனங்கள் திட்டம் 2022க்கு கருத்துரு சமர்ப்பித்துள்ளது.

4.6.8. பல்கலைக்கழகத்தின் காட்சித் தொடர்புத்துறை, பெண்கள் நலனிற்காகவும், பெண்கள் அதிகாரம் பெறவும், பெண்கள் மேம்பாட்டிற்காகவும், சமுதாயத்தில் விளிம்பு நிலையிலுள்ள பெண்களின் உள்ளடங்கிய வளர்ச்சிக்காகவும் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில் சமூக வானொலி நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 4.7. அழகப்பா பல்கலைக்கழகம்

**4.7.1.** அனைத்து வழிமுறைகளிலும் தரமான கல்வி வழங்குவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு, அழகப்பா பல்கலைக்கழகம் ஒரு மாநிலப் பல்கலைக்கழகமாக 1985ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் 4 புலங்கள், 44 துறைகள், 10 இயக்குநரகங்கள் மற்றும் மையங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. மேலும் சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் அமைந்துள்ள 45 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும் இணைப்புக் கல்லூரிகளாகக் கொண்டுள்ளது.

**4.7.2.** இப்பல்கலைக்கழகம், பல்கலைக்கழகத் துறைகள் வாயிலாக 203 பட்டப் படிப்புகளையும், இணைவுக் கல்லூரிகள் மூலம் 117 பட்டப் படிப்புகளையும், தொலைநிலைக் கல்வி வாயிலாக 71 பட்டப் படிப்புகளையும், இணைந்த கல்வி முறையின்

கீழ் 171 பட்டப் படிப்புகளையும் வழங்கி வருகிறது. ஏறத்தாழ 1.45 இலட்சம் மாணாக்கர்கள் மேற்குறிப்பிட்ட கல்வி முறையின் வாயிலாக உயர்கல்வி பயின்று வருகிறார்கள்.

**4.7.3.** இப்பல்கலைக்கழகம் உலகத் தரத்திற்கிணையான இலக்கை எட்டும் வகையில், கற்றல்–கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் உயர்கல்வி சார் மேம்பாட்டுச் செயல்பாடுகளைச் செம்மையாகவும், பல்கலை வளாகத்தினை உலகமயமாக்கும் நோக்கில் அகன்ற பார்வையுடனும், சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

**4.7.4.** 2017ஆம் ஆண்டில் நடைபெற்ற தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று (NAAC) தர நிர்ணயக் குழுவின் தர மதிப்பீட்டில், தமிழ்நாட்டில் A+ தகுதியைப் பெற்ற முதல் பல்கலைக்கழகம் இப்பல்கலைக்கழகம் ஆகும். அழகப்பா பல்கலைக்கழகம், தேசியக் கல்வி

நிறுவனத் தரக் கட்டமைப்பு (NIRF) 2022 தரப்பட்டியலில் 28ஆம் இடத்தைப் பெற்றுள்ளது.

**4.7.5.** இப்பல்கலைக்கழகம், QS தெற்காசிய பல்கலைக்கழகங்களின் தர வரிசையில், 51ஆவது இடத்தினையும், QS ஆசிய பல்கலைக்கழகங்களின் வரிசைக் கோர்வையில் 251 – 260 இடத்தினையும் பெற்றுள்ளது. Times Higher Education (THE) 2022ஆம் ஆண்டு தர மதிப்பீட்டில் 122ஆம் இடத்தினையும், உலக அளவிலான இளைய பல்கலைக்கழகங்களுக்கான தர வரிசையில், அழகப்பா பல்கலைக்கழகம், 138ஆவது இடத்தையும் பெற்றுள்ளது.

**4.7.6.** ஒன்றிய அரசின், உயிரித் தொழில்நுட்பவியல் துறை, இப்பல்கலைக்கழகத்தில் உயிரித் தகவலியல் துறையில் "உயிரித் தகவலியல் மையத்தினைத்" தொடங்கி, அதன் மூலம் வரும் ஐந்து

ஆண்டுகளில் (டிசம்பர் 2021 முதல்) உயராய்வு மேற்கொள்வதற்காக ரூ.1.89 கோடி வழங்கியுள்ளது.

**4.7.7.** 2022ஆம் ஆண்டு புது தில்லி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை "DST Bio–energy & H2 MAP" என்ற திட்டத்தின்கீழ் பத்து கூட்டாண்மை நிறுவனங்களுக்கு ரூ.11.40 கோடியை வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்தின் ஓர் அங்கமாக இப்பல்கலைக்கழகம் ரூ.1.03 கோடி ஆய்வு நிதிப் பங்களிப்பாகப் பெற்றுள்ளது.

**4.7.8.** தமிழ்நாடு அரசின் ரூசா இயக்குநரகம், அதன் பயனாளிகளாக உள்ள 87 கல்வி நிறுவனங்களில் ஒன்றான இப்பல்கலைக்கழகத்திற்கு அதன் ரூசா நிதி மேலாண்மை மற்றும் சிறப்பான பயன்பாட்டினைக் கணக்கிட்டு "OUR (Optimum Utilization of Resources) ரூசா நட்சத்திர விருது ஒன்றை வழங்கிச் சிறப்பித்துள்ளது.

**4.7.9.** "நான் முதல்வன் திட்டத்தின்" மூலம் மாணவர்களுக்குத் தொழில் சம்பந்தப்பட்ட, வேலைவாய்ப்பு மற்றும் தொழில் முனைவோர் திறன் வளர்ப்பு போன்ற படிப்புகளை இப்பல்கலைக்கழகம் வழங்குகிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, ஆசிரியர்களுக்காக திறன் மேம்பாட்டுப் பயிற்சி 30.01.2023 முதல் 11.02.2023 வரை நடைபெற்றது. NSE அகாடமி, IZAPY, TNASDA - Health care, மைக்ரோசாப்ட் மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலிருந்து மிகுந்த அனுபவம் பெற்ற பயிற்றுநர்கள் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வகுப்புகளை நடத்தினார்கள்.

**4.7.10.** **தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட "போதைப் பொருள் இல்லாத தமிழ்நாடு" – திட்டத்தினை இப்பல்கலைக்கழகம், முழுமையாகக் கடைப்பிடித்து வருகிறது. இது தொடர்பாக, "போதைக்கு அடிமையாகாமல் இருத்தல்" "போதையின் தீங்கினை**

போக்குதல்" போன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் 2022-23ஆம் ஆண்டில் பல்கலைக்கழக வளாகம் மற்றும் இணைப்புக் கல்லூரிகளிலும் நடத்தப்பட்டன.

**4.7.11.** அழகப்பா திறன் மேம்பாட்டு நிறுவனம் e-learnet skills என்ற நிறுவனத்துடன் இணைந்து, 10 திறன் மேம்பாட்டு பயிற்சி மையங்களை உருவாக்கியுள்ளது. அதன் மூலம் 16 வகையிலான திறன் மேம்பாட்டுப் பாடப்பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும், இங்கு பயிற்சி பெறுபவர்களில் சுமார் 80 சதவிகிதம் பேர் பல்வேறு தொழிலகங்களில் வேலைவாய்ப்பு பெறுகின்றனர். சிலர் தொழில்முனைவோர்களாக உருவெடுத்துள்ளனர்.

**4.7.12.** தேசிய உயர்கல்வித் திட்டத்தின் கீழ் (ரூசா 2.0) 2022-23ஆம் ஆண்டிற்கு, தொடங்கிடு (Start-up) மற்றும் அடைகாத்தல் (Incubation) அலகினைத் தொடங்குவதற்கு ரூ.3.50 கோடி

ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்படி, முதுநிலை மற்றும் ஆராய்ச்சி மாணவர்களிடமிருந்து தொழில் முனைவோர் திறன்களை மேம்படுத்துவது தொடர்பான முன்மொழிவுகள் பெறப்பட்டன. அவ்வாறு பெறப்பட்ட 38 முன்மொழிவுகளில் 30 முன்மொழிவுகள் தேர்வு செய்யப்பட்டு, தலா ரூ. 3.20 இலட்சம் வீதம் (EIR – Entrepreneur in Residence) வழங்கப்பட்டுள்ளது. மேலும், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் இளம் தொழில் முனைவோரிடமிருந்து பெறப்பட்ட 33 முன்மொழிவுகளில், 20 முன்மொழிவுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு தலா ரூ.20 இலட்சம் வீதம் தொடங்கிடு மற்றும் அடைகாத்தல் முயற்சிக்கு வழங்கப்பட்டுள்ளன.

**4.7.13.** 2022ஆம் ஆண்டின் முடிவில், SCOPUS தரவின் அடிப்படையில், இப்பல்கலைக்கழகத்தின் 'h' குறியீடு 101 ஆக உயர்ந்துள்ளது. மே 2021 இல் 44 ஆக இருந்த இப்பல்கலைக்கழக ஆசிரியர்களின்

காப்புரிமை பதிவுகள் டிசம்பர் 2022 ஆம் ஆண்டு இறுதியில் 91 ஆக உயர்வு பெற்றுள்ளது.

**4.7.14.** 2022–23ஆம் ஆண்டில், இப்பல்கலைக்கழகத்தின் மேலாண்மைத் தகவல் மையம், பிற பல்கலைக்கழகங்களுக்கு மாணவர் சேர்க்கை, கணினி மதிப்பீட்டு முறை, தேர்வு நடத்துதல், தேர்வு முடிவுகள் வெளியிடுதல் தொடர்பாக கணினி மென்பொருள் தொகுப்பு (Software Pacakage) தயார் செய்து ஆலோசனை வழங்கி வருகிறது.

**4.7.15**. 2022–23ஆம் ஆண்டில் கூடுதல் உடற்கல்வி வகுப்பு அறைகள், நுண்கலை கட்டடம், கணினி அறிவியல் கட்டடம், செயற்கை இழை ஓடுதளம், டென்னிஸ் மைதானம் மற்றும் சோலார் பார்க் ஆகியவை ரூசா 2.0 திட்டத்தின் கீழ் உருவாக்கப்படுவதற்கு ரூ.9.70 கோடி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**4.7.16.** சமுதாய மேம்பாட்டில் ஒரு சிறப்பு முயற்சியாக, மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான சிறப்புக் கல்விப் பிரிவில், அவர்களுக்கான வாழ்க்கைத் திறன் பயிற்சிக்கான "வளப் பள்ளி" (Resource School) நிறுவப்பட்டுள்ளது. 50க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளி மாணாக்கர்கள் இப்பள்ளியில் பயிற்சிப்பெற்று பயனடைகின்றனர்.

**4.7.17.** 2022ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட **“தொண்டி வளாகத்தில் கடல்சார் விளையாட்டு மையம் மற்றும் சுற்றுலா தளம் உருவாக்கப்படும்" என்ற அறிவிப்பிற்கிணங்க, அதற்கான** பணிகள் நடைபெற்று வருகின்றன.

**4.7.18.** 2022ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, பல்கலைக்கழக வளாகத்தில் ஆராய்ச்சிப் பூங்காவினை அமைக்க இப்பல்கலைக்கழகம் துரித நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ITC, பெங்களூர் மற்றும் Evolva Chemical Ltd.,

சென்னை, நிறுவனங்களுடன் இணைந்து பல்கலைக்கழக வளாகத்தில் அவர்களின் ஆராய்ச்சி மையங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**4.7.19.** தேர்வு பிரிவில் 'மின்னணு மதிப்பீட்டுத் திட்டத்தினை" (Digital Evalutation System) செயல்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்ட செயல்பாட்டிற்கு ரூ.4.50 கோடி நிதியினை, தமிழ்நாடு புதுமை மற்றும் கண்டுபிடிப்புத் திட்டத்தின் (TANII Scheme) கீழ் வழங்கியுள்ளது. இந்த மின்னணு மதிப்பீட்டு முறை முதலில் பல்கலைக்கழக துறைக்கும் பின்னர் இணைப்புக் கல்லூரிகள் மற்றும் தொலைநிலைக் கல்வி மாணவர்களுக்கும் விரிவாக்கம் செய்யப்பட உள்ளது.

**4.7.20.** 2021-22 ஆம் ஆண்டில் புதுடெல்லியிலுள்ள தொல்பொருள் ஆய்வுக் கழகம்,

அழகப்பா பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறைக்கு சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் தாலுகாவில் உள்ள இலந்தக்கரை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அகழ்வாய்வு மேற்கொள்ள அனுமதியளித்துள்ளது. இதற்காக தமிழக அரசின் தொல்லியல் துறை முதல் கட்ட மானியமாக ரூ.5.00 இலட்சம் வழங்கியுள்ளது. இரண்டாம் கட்ட பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

**4.7.21.** அழகப்பா திறன்வளர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் இணையவழி வளர்ச்சியின் துணையுடன் செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திர வழிக் கற்றல், இயந்திரமயமாக்கல், தரவு அறிவியல், 5ஜி செயல்பாடு, சைபர் பாதுகாப்பு மற்றும் அவற்றின் மதிப்பை அளவிடுதல் துறைகளில் திறன் மற்றும் மெய்நிகர் சார்ந்த பாடத்திட்டங்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**4.7.22.** தேசிய ஹைட்ரஜன் இயக்ககத்தின் குறிக்கோளுக்கிணங்க, இப்பல்கலைக்கழகம், M/s Galaxy Research Technologies சிங்கப்பூர் நிறுவனத்துடன் இணைந்து பயோ ஹைட்ரஜனை உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளது.

**4.7.23.** இப்பல்கலைக்கழகம், சமுதாயப் பொறுப்பின் ஒரு பகுதியாக, செராமிக் மற்றும் வரைகலை (ஆத்தங்குடி தரைஓடு), செட்டிநாடுப் பாரம்பரியம் (சமையல் மற்றும் சுற்றுலா), கைவினை வேலை (மரம் மற்றும் உலோகம்) மற்றும் வர்த்தகம் (பங்குச் சந்தை) ஆகிய தேர்ந்தெடுக்கப்பட்ட தளங்களில் உள்ளூர்த் திறமைசாலிகளை அடையாளம் காணவும், அவர்களின் திறன்களை மேம்படுத்தவும் திட்டமிட்டுள்ளது.

## 4.8. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

**4.8.1.** மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் தமிழ்க் கவிஞரும், இலக்கியவாதியுமான பேராசிரியர் மனோன்மணியம் சுந்தரம் பிள்ளையின் பெயரில் 1990 இல் நிறுவப்பட்டது. இப்பல்கலைக்கழகம் தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களான திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய நான்கு மாவட்டங்களின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

**4.8.2**. இப்பல்கலைக்கழகம் தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று குழுவிடமிருந்து "A" தகுதியைப் (CGPA-3.13) பெற்றுள்ளது. 2021 ஆம் ஆண்டைய தேசியத் தர நிறுவன தரவரிசை கட்டமைப்பில் (NIRF-2021) தேசிய அளவில் 80ஆவது இடத்தை இப்பல்கலைக்கழகம் பெற்றுள்ளது. மாநிலத்தின் முதல்

ஏழு பல்கலைக்கழகங்களில் ஒன்றாகவும் இப்பல்கலைக்கழகம் திகழ்கிறது.

**4.8.3.** இப்பல்கலைக்கழகத்தில் நான்கு புலங்கள், 24 துறைகள், நான்கு சிறப்பு மையங்கள், ஒரு மைய சோதனை கருவியகம் உள்ளன. மேலும், பல்வேறு துறைகள் மூலம் 100 க்கும் மேற்பட்ட (ஒருங்கிணைந்த முதுநிலை / முதுநிலை / ஆய்வியல் நிறைஞர் / முனைவர் பட்டப்படிப்பு) பாடத்திட்டங்களை நடத்தி வருகிறது. தற்போது 3392 மாணாக்கர்கள், பல்கலைக்கழகத் துறைகளில் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சிப் படிப்பினை கற்று வருகின்றனர்.

**4.8.4.** இப்பல்கலைக்கழகத்தின் கீழ் 106 இணைப்புக் கல்லூரிகள் உள்ளன. அதாவது 11 அரசுக் கல்லூரிகள், 23 அரசு உதவிபெறும் கல்லூரிகள், 56 சுயநிதி கல்லூரிகள், 10 தன்னாட்சிக் கல்லூரிகள், 6 மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகத்

துறைகள் வாயிலாக 1,26,030 மாணாக்கர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

**4.8.5.** இப்பல்கலைக்கழகம் 2022-23 ஆம் ஆண்டில் 10 காப்புரிமைகளைப் பெற்றுள்ளது. தேசிய அளவிலான கல்வி நிறுவனங்கள், தொழில் நிறுவனங்களுடன் 7 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செய்துள்ளது. இங்கு பணிபுரியும் ஆசிரியர்கள் சுமார் 5640 ஆய்வுக்கட்டுரைகளை Scopus மற்றும் Web of Sciences ஆகிய இதழ்களில் வெளியிட்டுள்ளனர்.

**4.8.6.** அனைத்து இளநிலைப் பாடத்திட்டத்திலும் 'நான் முதல்வன்' திட்டத்தின்படி 2022-23ஆம் கல்வியாண்டிலிருந்து இரண்டு, நான்கு மற்றும் ஆறாம் பருவங்களில் திறன்வளர் கல்வி சார்ந்த பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

**4.8.7.** தொல்லியல் பண்பாட்டுச் செயல்பாடுகள், உயிரியல் பன்முகத்தன்மை, இயற்கைக் கட்டமைப்புகள், பாரம்பரிய மருந்துகள், விவசாய

நடைமுறைகள் மற்றும் கையெழுத்து பிரதிகள் போன்றவற்றின் விரிவான அறிவுத்தளம் மற்றும் டிஜிட்டல் ஆவணக்காப்பகத்தை உருவாக்க பல்கலைக்கழகத்துறைகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்து தமிழ் அறிவு அமைப்பு பற்றிய ஆய்வு மையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்திய தொல்லியல் துறையுடன் (ASI) இணைந்து அகழ்வாய்வுக்கான இருக்கைகள் அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளன.

**4.8.8.** ஆறு திட்ட முன்மொழிவுகளுக்கு ரூ.1.10 கோடி பல்வேறு நிதியுதவி நிறுவனங்களால் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

## 4.9. பெரியார் பல்கலைக்கழகம்

**4.9.1.** பெரியார் பல்கலைக்கழகம் 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டது. இப்பல்கலைக்கழகம் சேலம், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய நான்கு மாவட்டங்களைக் கல்வி எல்லையாகக் கொண்டு இயங்கிவருகிறது

**4.9.2.** இப்பல்கலைக்கழகம் பல்கலைக்கழக மானியக் குழுவிடமிருந்து 12(B) மற்றும் 2(f) தகுதி நிலையைப் பெற்றுள்ளது. இப்பல்கலைக்கழகம் 2021 ஆம் ஆண்டு நடத்தப்பெற்ற NAAC எனப்படும் தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று குழுவின் தரவரிசையில் A++ தரத்தினை பெற்றுள்ளது.

**4.9.3.** இப்பல்கலைக்கழகம், பல்கலைக்கழகக் கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறைகள், இணைவு பெற்ற கல்லூரிகள், PUCODE எனப்படும் இப்பல்கலைக்கழக இணையவழி (online) மற்றும் தொலைதூரக்

கல்விமையம் ஆகிய மூன்று முறைகளில் உயர்கல்வியை வழங்கி வருகிறது.

**4.9.4.** இப்பல்கலைக்கழகம் தற்போது 5 அறிவியல் பள்ளிகளையும், 3 கலைப் பள்ளிகளையும் கொண்ட 27 துறைகளில் 35 முதுநிலைப் பாடங்களையும், 04 இளநிலைப் பாடங்களையும், 1 பட்டயப்படிப்பையும், 27 ஆராய்ச்சிப் படிப்புகளையும் வழங்கிவருகிறது.

**4.9.5.** இப்பல்கலைக்கழகம் நூலகம், நாட்டுநலப்பணித் திட்டம், இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம், மகளிர் நலமையம், செயற்கை இழை ஓடுதளம் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுக் கட்டமைப்புகள் ஆகியவற்றைக் கொண்ட மாணவர் நலன் சார்ந்த சேவைகளை வழங்கி வருகிறது.

**4.9.6.** பல்கலைக்கழக மானியக் குழுவின் SAP எனப்படும் சிறப்பு உதவித் தொகையுடன் 4 துறைகளும், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்

துறையின் FIST திட்டத்தின் நிதி உதவியுடன் 7 துறைகளும் பல்கலைக்கழகத்தில் இயங்கி வருகின்றன. பல்கலைக்கழக மானியக் குழுவின் ரூ.1.5 கோடி நிதி உதவியுடன் உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்து மற்றும் ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகள் துறைகளில் B.Voc., படிப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**4.9.7.** 2022ஆம் ஆண்டு நடத்தப்பெற்ற NIRF எனப்படும் தேசிய நிறுவனத் தரவரிசைக் கட்டமைப்பின் தரவரிசையில் 63 ஆவது இடம்பெற்று, கடந்த ஆறு ஆண்டுகளாகத் தொடர்ந்து 100 இடங்களுக்குள் தரவரிசைப்பட்டியலில் இடம் பிடித்துவருகிறது.

**4.9.8.** புதுமைக் கண்டுபிடிப்புகளுக்கான தரவரிசையான அடல் (Atal) தரவரிசையில் இந்தியாவிலேயே 10 இடங்களுக்குள் இடம் பெற்றுள்ள ஒரே மாநிலப் பல்கலைக்கழகம் பெரியார்

பல்கலைக்கழகம் மட்டுமே ஆகும். நிறுவனங்களின் புதுமைக்கண்டுபிடிப்புகளைத் தரவரிசைப்படுத்தும் மொத்தமுள்ள 5 புள்ளிகளில் 4 புள்ளிகளைப் பெற்றுள்ள ஒரே மாநிலப் பல்கலைக்கழகம் பெரியார் பல்கலைக்கழகம் ஆகும்.

**4.9.9.** கொரானா நுண்கிருமி மற்றும் எச்ஐவி நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டுப் பெற்றோரை இழந்த மாணவர்களுக்குப் பல்கலைக்கழகக் கல்விக் கட்டணத்திலிருந்து முழுவிலக்களிக்கப்பட்டுள்ளது.

**4.9.10.** தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் அறிவுறுத்தல்படி பல்கலைக்கழகத் துறைகள் மற்றும் இணைவு பெற்ற கல்லூரிகளின் பாடத்திட்டங்கள் புதுப்பிக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன. அங்ஙனம் திருத்தப்பட்ட புதிய பாடத்திட்டங்கள் 2021−22ஆம் கல்வியாண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**4.9.11.** ஒன்றிய அரசின் கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் செயற்கை இழை ஓடுதளம் அமைப்பதற்காக ரூ.7.00 கோடி நிதிபெற்றுள்ள பெரியார் பல்கலைக்கழகம், அதனை அமைக்கும் பணிகளை நிறைவு செய்யும் நிலையில் உள்ளது.

**4.9.12.** பல்கலைக்கழகத்திலுள்ள நூல்களை மாணாக்கர்கள் எளிதாகப் பயன்படுத்தும் வண்ணம் தானியங்கிக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. 5,000 புதிய நூல்களைக் கொண்ட குழந்தைகள் நூலகம் உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் வாசிக்கும் திறனை ஊக்குவிக்கும் வண்ணம் பல்கலைக்கழகத்தில் வாசகர் வட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

**4.9.13.** தந்தை பெரியார் இருக்கை, பேரறிஞர் அண்ணா இருக்கை, முத்தமிழ் அறிஞர் தமிழவேள் கலைஞர் மு.கருணாநிதி ஆய்வு மையம் ஆகியவற்றின்

பணிகளை மேற்கொள்ளத் தனியாக இயக்குநர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

**4.9.14.** போட்டித் தேர்வுகளுக்கு மாணவர்களைத் தயார் செய்யும் வண்ணம் குடிமைப் பணித் தேர்வுகளுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**4.9.15.** மூலிகைப் பூங்கா, காளான் வளர்ப்புப் பண்ணை, மண்புழு உரம் தயாரிக்கும் பிரிவு, உயிர் வாயுக்கலன், ஆற்றல் பூங்கா, அலங்காரமலர்கள் பூங்கா, ஆக்சிஜன் பூங்கா ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழகத்தின் நூலகத்தில் 'திராவிட இயல் பதிப்பகம்' என்னும் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது.

**4.9.16.** தமிழ்நாடு அரசின் EDII–TN திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூ.70 இலட்சம் நிதி உதவியுடன், பெரியார் பல்கலைக்கழகத்தின் தொழில் அடைகாக்கும் மையத்தின் சார்பில் உருவாக்கப்பட்டுள்ள தொழிலக உற்பத்திப் பிரிவின் மூலம் மணிக்கு 50 முதல்

100 கிலோ அளவிலான சிற்றுண்டி தயாரிக்கும் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.

**4.9.17.** பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வு மாணவர்களின் 199 ஆய்வுச் சுருக்கங்கள் சென்னை, தமிழ் இணையப் பல்கலைக்கழகத்திற்குச் சமர்பிக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழகம் சார்பில் நடத்தப்பட்ட "பெரியாரை வாசிப்போம்" நிகழ்ச்சியில் 6 இலட்சம் பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்கள் பங்கேற்றனர்.

**4.9.18.** பெரியார் பல்கலைக்கழகத்தின் துறைகள் மற்றும் அதன் இணைவு பெற்ற கல்லூரிகளில் 'நான் முதல்வன்' எனும் திறன் வளர்ப்பு நிகழ்ச்சி வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

**4.9.19.** முத்தமிழறிஞர் கலைஞர் ஆய்வு மையத்திற்குத் தனிக் கட்டடம் கட்டும்பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன. வளாகத்தில் பசுமையை நோக்கிய செயல்பாடுகளின் ஒரு பகுதியாக

மூங்கில்களைக் கொண்ட ஆக்சிஜன் பூங்கா உருவாக்கப்பட்டுள்ளது.

**4.9.20.** பன்னாட்டு மற்றும் தேசிய அளவிலான ஆய்விதழ்களில் பல்கலைக்கழக ஆசிரியர்கள் 6,216 ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளனர், 16 காப்புரிமைகளைப் பெற்றுள்ளனர். பல்கலைக்கழகத்தின் h index 89 ஆகும்.

**4.9.21.** கல்வியில் சிறந்து பொருளாதார அளவில் பின் தங்கிய மாணவர்களுக்கு உதவும் நோக்கில் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டுள்ள திட்டத்தின் கீழ் 23 முதுநிலை மாணாக்கர்கள் கட்டணமில்லாக் கல்வி பெற்றுள்ளனர். பல்கலைக்கழகத்துறைகள் நாட்டின் முன்னணி ஆய்வு நிறுவனங்களுடன் ஐந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

**4.9.22.** பல்கலைக்கழகத்தின் அறிவியல் புலம் II மற்றும் III கட்டடங்களின் மேல்தளத்தில் ரூ.1.70 கோடி

மதிப்பீட்டிலான 300 கிலோவாட் திறன் கொண்ட சூரிய மின் ஆற்றல் கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**4.9.23.** வேலைவாய்ப்பினை உறுதி செய்யும் இளைஞர் திறன் மேம்பாட்டுப்பயிற்சித் திட்டமான ரூ.2.66 கோடி மதிப்பிலான DDU–GKY திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 50 மாணவர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இதே திட்டத்தில் 300–க்கும் மேற்பட்ட மாணாக்கர்கள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களுக்கான வேலைவாய்ப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 4.10. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்

**4.10.1.** தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகம் தமிழ்நாடு அரசால் 2002ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்ட நாள் முதல் சமூகத்தில் இதுவரை கல்வி கிடைக்கப்பெறாத பின்தங்கிய பிரிவினருக்குக் குறைந்த கட்டணத்தில், சமகாலத்திற்குத் தேவையான பாடத்திட்டங்களைத் திறந்தநிலை மற்றும் தொலைநிலைக் கற்றல் முறையில் வழங்கி வருகிறது.

**4.10.2.** இப்பல்கலைக்கழகம் தற்போது பட்டப் படிப்புகள், திறன்மேம்பாட்டு கூடுதல் படிப்புகள் என்ற வகையில் சான்றிதழ், பட்டயம், தொழிற்பட்டயம், முதுநிலைப் பட்டயம், இளநிலைப் பட்டம், முதுநிலைப் பட்டம் தொடங்கி ஆய்வியல் நிறைஞர் மற்றும் முனைவர் பட்ட ஆய்வுப் படிப்புகள் வரை வழங்கி வருகிறது.

**4.10.3.** 2022−23ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட அறிவிப்பின்படி, இப்பல்கலைக்கழகத்தில் இளநிலை, முதுநிலை, சான்றிதழ், பட்டயம், முதுநிலைப் பட்டயம், தொழிற் பட்டயம், ஆகிய படிப்புகளில் பயிலும் சிறைவாழ் கைதிகள், திருநங்கைகள் மற்றும் ஆதரவற்ற விதவைகளுக்குக் கல்விக் கட்டண விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**4.10.4.** இப்பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும் படிப்புகளுக்கான மாணாக்கர் சேர்க்கைப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. அவ்வகையில் **2022−23**ஆம் கல்வியாண்டில் பல்வேறு படிப்புகளில் மொத்தம் 17,286 மாணாக்கர்கள் சேர்க்கைப் பெற்றுள்ளனர்.

**4.10.5.** இப்பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பாடத் திட்டங்களுக்கான 'தானே கற்றல்' (Self Studies) முறையில் பாடநூல்களை உருவாக்குவதற்கான கொள்கை ஆவணம் உருவாக்கப்பட்டுள்ளது.

691 தானே கற்றல் முறை பாடநூல்களுக்கும் ISBN எண் பெறப்பட்டுள்ளது.

4.10.6. இப்பல்கலைக்கழகம் உயர்கல்வி நிறுவனங்களுடன் இணைந்து பாடப்பிரிவுகளை வழங்கிடும் வகையில் முன்னணி உயர்கல்வி நிறுவனங்களுடன் ஒன்பது புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. குறிப்பாக,

i. மைசூரிலுள்ள கர்நாடக மாநிலத் திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தோடு பாடத்திட்டங்களைப் பரிமாறிக்கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ii. கல்விசார் செயல்பாடுகளில் இணைந்து செயல்படும் பொருட்டு சென்னை, சைதாப்பேட்டையில் அமைந்துள்ள கல்வியியல் மேம்பாட்டு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**4.10.7.** இப்பல்கலைக்கழகம் முதன்முதலாக மேலாண்மையியல் பாடத்திட்டத்தைத் தொலைநிலை மற்றும் திறந்தநிலைக் கல்விமுறையில் வழங்குவதற்கான அங்கீகாரத்தினை 30.5.2022 அன்று அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமத்திடமிருந்து பெற்றுள்ளது.

**4.10.8.** இப்பல்கலைக்கழகம் அகவிழியுடையோர், கூரறிவு இயலாமையுடையோர், காதுகேளாதோர் ஆகியோருக்கு சிறப்புக் கல்வியை வழங்கிட ஏதுவாக பி.எட்., சிறப்புக் கல்விப் பாடத்திட்டத்தை வழங்கி வருகிறது. அதன்படி, புதுதில்லியிலுள்ள, இந்திய மறுவாழ்வுக் கழகம் 2022 முதல் 2027 வரை அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு பி.எட்., சிறப்புக் கல்வி பாடத்திட்டத்தை வழங்குவதற்கான அனுமதியை வழங்கியுள்ளது. இதுதொடர்பாக இப்பல்கலைக்கழகம் மற்றும் இந்திய மறுவாழ்வுக் கழகம் ஆகியவற்றிற்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் 13.12.2022 அன்று மேற்கொள்ளப்பட்டது.

**4.10.9.** திருக்குறள் பற்றியும் அதன் பயன்பாடுகள் பற்றியும் திருவள்ளுவரின் பங்களிப்புகள் பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச்சங்கத்துடன் இணைந்து 2022 ஆம் ஆண்டு "திருவள்ளுவர் இருக்கை" தொடங்கப்பட்டுள்ளது.

**4.10.10.** சமூக நீதியை மேம்படுத்தும் வகையில், தந்தைப் பெரியாரின் பெயரில் "பெரியார் இருக்கை" 2022ஆம் ஆண்டு நிறுவப்பட்டுள்ளது. இந்த இருக்கையின் மூலமாகப் பொது மக்கள் பயன்பெறும் வகையில் சமூக நீதி தொடர்பான குறுகிய கால படிப்பு வழங்கப்பட்டு வருகிறது.

## 4.11. திருவள்ளுவர் பல்கலைக்கழகம்

**4.11.1.** திருவள்ளுவர் பல்கலைக்கழகம் 16.10.2002 அன்று தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தில் 2022–23ஆம் கல்வியாண்டில் 10 துறைகள் செயல்பட்டு வருகின்றன.

**4.11.2.** இப்பல்கலைக்கழகத்தின் கீழ் வேலூர், திருவண்ணாமலை, இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் ஆகிய 4 மாவட்டங்களில் 76 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் 6 ஆராய்ச்சி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

**4.11.3.** ரூ.20 கோடி செலவில் கட்டப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதி கட்டிடங்கள் 20.01.2023 அன்று திறந்து வைக்கப்பட்டன.

**4.11.4.** பல்கலைக்கழகத் துறை ஆராய்ச்சி மாணவர்களின் 694 ஆய்வுக் கட்டுரைகளும், பல்கலைக்கழகத் துறை ஆசிரியர்களின் 923 ஆய்வுக் கட்டுரைகளும் அறிவியல் மேற்கோள்

அட்டவணையிடப்பட்ட வலை இதழ்கள் மற்றும் ஸ்கோபஸ் அட்டவணைப்படுத்தப்பட்ட இதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன. இப்பல்கலைக்கழகம் இந்தியப் பல்கலைக்கழகங்களில், அதிக சராசரி 18.72 புள்ளிகள் பெற்று கட்டுரை வெளியீட்டில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.

**4.11.5.** பல்கலைக்கழக மைய நூலகத்தில் அனைத்துத் துறைகளுக்குமான 12,118 புத்தகங்கள் உள்ளன. பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சியின் தரத்தை மேம்படுத்த மின்புத்தகங்கள் மற்றும் மின்இதழ்களைப் பயன்படுத்த திறந்த வலை இணைப்புகள் வழங்கப்படுகின்றன. மாணாக்கர்கள் நூலகத்திற்கு வராமலேயே நூலகத்தின் புத்தகங்களை அவரவர் இடத்தில் இருந்து படிக்கும் வகையில் நூலக வலையமைப்பு (டெல்நெட்–டெவலப்பிங் லைப்ரரி நெட்வொர்க்) உருவாக்கப்பட்டுள்ளது.

**4.11.6.** இப்பல்கலைக்கழகம் ஒன்றிய அரசின் உயர்கல்வித் துறையால் ஒருங்கிணைக்கப்பட்ட ஷோத்கங்காவில் உறுப்பினராக உள்ளது. இது முனைவர் பட்ட ஆய்வறிக்கைகளைப் பதிவேற்றி, அனைத்து மக்களும் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தக் கூடியதாக உள்ளது.

**4.11.7.** இப்பல்கலைக்கழகத்தில் தேர்வுத் தாள்களைக் கணினி முறையில் மதிப்பீடு செய்ய தமிழ்நாடு புதுமை முயற்சியின் கீழ் 2022–23ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் மாநிலத் திட்டக்குழு ரூ.8 கோடி வழங்கியுள்ளது.

**4.11.8.** இப்பல்கலைக்கழகத் தமிழ்த் துறை நடத்திய திருக்குறள் கருத்தரங்கு – 2020–லிருந்து 120 கட்டுரைகளை பல்கலைக்கழகம் நவம்பர் 2022இல் வெளியிட்டது.

**4.11.9.** "திருவள்ளுவர் பல்கலைக்கழக ஆராய்ச்சி உதவித் தொகை" ரூ.8,000/– திருவள்ளுவர்

பல்கலைக்கழக வளாகத் துறைகளில் வேறு உதவித் தொகை இல்லாமல் ஆய்வு செய்து வரும் 20 மாணவர்களுக்கு வழங்கப்பட உள்ளது.

**4.11.10.** 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டம் திருவள்ளுவர் பல்கலைக்கழக வளாகத்தில் இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்டது. இதில் இணைப்புக் கல்லூரிகளைச் சேர்ந்த 700 ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

**4.11.11.** பல்கலைக்கழகத்தின் வேலைவாய்ப்புப் பிரிவால் வளாகத்தில் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டது. சென்னை இந்தியன் ஹெல்த் கேர் பிபிஓ, இணைப்புக் கல்லூரிகளைச் சேர்ந்த 240 மாணவர்களுக்கு நேர்காணல் நடத்தி, அதிலிருந்து 78 மாணவர்களைப் பணியில் சேர்த்துள்ளது. முகாம் நடந்த இடத்திலேயே பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன. ஓசூர் டிஎஸ்கே புதுமை அறிவியல் நிறுவனம் (DSK Innosciences) இணைப் பயிற்சியாளர்

பதவிக்காக எம்எஸ்சி வேதியியல் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு முகாமை (Pooled Campus Placement–2022–23) 22.02.2023 அன்று நடத்தியது.

**4.11.12.** இப்பல்கலைக்கழகத்தின் நிர்வாக அமைப்பு முறையும் மற்றும் மாணாக்கர்கள் தேர்வுத்தாள் மதிப்பீட்டு முறையும் கணினிமயமாக்கப்பட உள்ளன.

## 4.12. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

**4.12.1.** தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் 2008ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. தொடக்க மற்றும் இடைநிலை கல்வி நிறுவனங்களில் தரமான ஆசிரியர்களின் முக்கியத்துவத்தை உயர்கல்வியின் தரத்தினை ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியின் தரம் தீர்மானிக்கிறது.

**4.12.2.** ஆசிரியர் கல்வியில் புதுமையான பாடங்களைக் கண்டறிந்து உயர்தரமான ஆசிரியர் கல்வியை வழங்குவதே இப்பல்கலைக்கழகத்தின் நோக்கமாகும். மேலும், ஆசிரியர் கல்வியைத் தரப்படுத்துதல், ஆசிரியர் கல்வி பற்றிய அறிவை உருவாக்கி அதனை பரப்பி வலுவான சமுதாயத்தை உருவாக்குதல் ஆகியவையும் இதன் முக்கிய இலக்காகும்.

**4.12.3.** இப்பல்கலைக்கழகத்துடன் 7 அரசு, 14 அரசு உதவிபெறும் மற்றும் 621 சுயநிதி கல்வியியல்

கல்லூரிகள் உட்பட மொத்தம் 642 கல்வியியல் கல்லூரிகள் இணைவு பெற்றுள்ளன. இப்பல்கலைக்கழக வளாகத்தில் எம்.எட்., எம்பில்., மற்றும் பிஎச்.டி., பட்டப்படிப்புகள் வழங்கப்பட்டு வருகிறது.

**4.12.4.** இப்பல்கலைக்கழகம் 2022ஆம் ஆண்டு, முதல் சுழற்சியில் தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று குழுவிடமிருந்து (NAAC) 3.17 CGPA உடன் 'A'' தரத்தினைப் பெற்றுள்ளது. பல்கலைக்கழக மானியக்குழு தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்திற்கு 12(பி) அந்தஸ்தை வழங்கியுள்ளது.

**4.12.5.** தமிழக அரசின் பள்ளிக் கல்வித்துறை 2021–22ஆம் கல்வியாண்டு, பி.எட் பட்டப்படிப்பில் மூன்றாம் பருவத்தில் படிக்கும் 53,399 மாணாக்கர்களுக்கு 80 நாட்களுக்கான கற்பித்தல் பயிற்சியை மேற்கொள்வதற்கு அரசு மற்றும்

அரசு உதவி பெறும் பள்ளிகளை ஒதுக்கீடு செய்துள்ளது. பள்ளிக்கல்வித்துறை ஒதுக்கீடு செய்த அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் இம்மாணாக்கர்கள் 80 நாட்கள் கற்பித்தல் பயிற்சியை மேற்கொண்டனர்.

**4.12.6.** இப்பல்கலைக்கழகத்தில் டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன், டாக்டர் A.P.J அப்துல்கலாம், மகாகவி சுப்ரமணிய பாரதியார், மற்றும் திருவள்ளுவர் பெயர்களில் நான்கு இருக்கைகள் நிறுவப்பட்டுள்ளன.

**4.12.7.** தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் 121 சான்றிதழ்களை உலக சாதனை நிகழ்வுகளுக்காகப் பெற்றுள்ளது.

**4.12.8.** 'இது எனக்காக இல்லை உங்களுக்காக' என்ற குறிக்கோளுடன் இப்பல்கலைக்கழகம் பழைய மாணவர் சங்கத்தினை 'TNTEUAA' என்ற பெயரில் பதிவு செய்துள்ளது.

**4.12.9.** இப்பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள் 2000க்கும் மேற்பட்ட தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான கருத்தரங்குகள், மாநாடுகள், ஆசிரிய மேம்பாட்டுத் திட்டங்கள், குறுகிய கால நிகழ்ச்சிகள் மற்றும் பட்டறைகளை நேருக்கு நேராகவும், இணைய வழியாகவும் நடத்தி வருகின்றனர்.

**4.12.10.** இப்பல்கலைக்கழகம் ஆராய்ச்சி மற்றும் ஆய்வு கல்வியினை மேம்படுத்துவதற்காக இந்தியா மற்றும் வெளிநாடு உட்பட 94 பல்கலைக்கழகம் மற்றும் நிறுவனங்களுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது.

**4.12.11.** நமது முன்னோர்கள் பின்பற்றி வந்த பாரம்பரிய பண்பாட்டு நடைமுறைகளை தெரிந்துகொள்வதற்காக இப்பல்கலைக்கழகத்தில் தமிழ்பண்பாட்டு மையம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

**4.12.12.** மாணாக்கர்களின் உடல் மற்றும் மன நலனுக்காக இப்பல்கலைக்கழகத்தில் யோகா மையம்

தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 'இல்லம் தேடிக் கல்வி' திட்டப் பயன்பாட்டிற்கு இப்பல்கலைக்கழக கட்டடங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

**4.12.13.** ஒன்றிய அரசின் உயர்கல்வித் துறையின் கீழ் செயல்படும் மகாத்மா காந்தி தேசிய கிராமக்கல்வி கவுன்சிலிடமிருந்து மாவட்ட பசுமை சாம்பியன் சான்றிதழை இப்பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

## 4.13. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**4.13.1.** அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டம், 1928 (தமிழ்நாடு சட்டம் 1–இன் 1929) இன்படி நிறுவப்பட்டது, மேலும், மேற்கண்ட சட்டம் மாற்றியமைக்கப்பட்டு, அண்ணாமலைப் பல்கலைக்கழக சட்டம், 2013 (தமிழ்நாடு சட்டம் 20/2013)–ன்படி 25.09.2013 அன்று தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது.

**4.13.2.** இப்பல்கலைக்கழகம், எட்டு புலங்கள் மற்றும் 52 துறைகள் மூலம் இளநிலை, முதுநிலை, முனைவர் மற்றும் முதுமுனைவர் பட்டங்களை வழங்கி வருகிறது. 2021ஆம் ஆண்டு தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று குழுவிடமிருந்து (NAAC) 'A+' என்ற தகுதியை பெற்றுள்ளது. இந்தியாவின் மிகப் பெரிய மற்றும் மிகப் பழமையான பொது பல்கலைக்கழகங்களில் ஒன்றான இந்தப்

பல்கலைக்கழகம் உயர்கல்வி நிலையங்களுக்கு எட்டா தொலைவில் இருக்கும் மக்களிடம் கல்வியைக் கொண்டு செல்வதில் அளப்பரிய சேவை செய்து வருகிறது.

**4.13.3.** இப்பல்கலைக்கழகத்தின் டாக்டர் சி.பி. இராமசாமி ஐயர் நூலகம், தானியங்கி மற்றும் தரத்திற்கான ISO 9001 : 2015 சான்றிதழைப் பெற்றுள்ளது.

**4.13.4.** கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு ஒட்டுமொத்த மாணவர் சேர்க்கையில் 10 சதவீதமும், முனைவர் பட்ட சேர்க்கையில் 43 சதவீதமும் மற்றும் திறன் மேம்பாட்டு திட்டங்களுக்கான மாணவர் சேர்க்கையில் 168 சதவீதமும் அதிகரித்துள்ளது.

**4.13.5.** 2021–22ஆம் ஆண்டில் 68 காப்புரிமைகள் பதிவு செய்யப்பட்டன. மூன்று இனங்காப்புரிமை பெறப்பட்டுள்ளது. இயற்கை வேளாண்மை மற்றும் நிலையான வேளாண்மைக்கான மையம் 2022ஆம்

ஆண்டு துவங்கப்பட்டுள்ளது. இந்த மையம் தமிழ்நாட்டில் 4 மாவட்டங்களில் விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளது.

**4.13.6.** பல்கலைக்கழக வளாகத்தை மேலும் பசுமையாக்க ஆக்ஸிஜன் பூங்கா மற்றும் மியாவாக்கி காடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பார்வையற்ற மாணாக்கர்களுக்காக, மத்திய நூலகத்தில் பிரெய்லி மென்பொருள் மற்றும் துணைக்கருவிகளுடன் கூடிய பிரத்யேக கணினி அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

**4.13.7.** கடல்வாழ் உயிரின உயராய்வு மைய நூலகத்தில் RFID தொழில் நுட்ப வசதி செய்யப்பட்டுள்ளது. பல்கலைக்கழகம் தேசிய மற்றும் சர்வதேச கல்வி மற்றும் பிற நிறுவனங்களுடன் 12 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்தியுள்ளது.

**4.13.8.** இப்பல்கலைக்கழகம் 15,674 ஆராய்ச்சி கட்டுரைகளை ஸ்கோபஸிலும், 9,330 ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெப் ஆப் சயின்சிலும் வெளியிட்டு

140 மற்றும் 125 h குறியீடுகளை முறையே பெற்றுள்ளது.

**4.13.9.** அண்ணாமலை ஒருங்கிணைந்த அரிசி, மீன், கோழிவளர்ப்பு பண்ணை முறை புவனகிரி தாலூக்காவில் 50 சிறிய மாதிரி பண்ணை நிலங்களில் நிறுவப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகத்தின் மூலம் கடலூர் மாவட்டத்தில் வெள்ளாறு–கொள்ளிடம் முகத்துவாரம் அருகே சூடியோலிக் அண்ணாமலை என்ற புதிய வகை நண்டு இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**4.13.10.** அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு RUSA 2.0 திட்டத்தின் கீழ் ரூ.50 கோடி நிதி கூறு 10 ன் கீழ் ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள் மற்றும் தர மேம்பாட்டின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீட்டில் ரூ.7.50 கோடி அடைகாக்கும் மையம் மற்றும் தொழில் மையத்திற்கும், ரூ.17.50 கோடி ஆய்வு மற்றும் புதுமைகளுக்கும் விடுவிக்கப்பட்டுள்ளது.

**4.13.11.** சுமார் 151 உள்ளூர் பின்தங்கிய மாணவர்களுக்கு UNNATI திட்டத்தின் கீழ் உறுதியான வேலைவாய்ப்புடன் கூடிய பயிற்சி தரப்பட்டுள்ளது. தொழில் பயிற்சி மூலம் இளைஞர் அதிகாரம் மற்றும் சமூக மாற்றம் பெற பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## 5. தமிழ்நாடு ஆவணக்காப்பகம்

**5.1.** தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தின் முறையான தோற்றம் 1805 ஆம் ஆண்டில் செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உருவாக்கப்பட்ட மத்திய ஆவணக் காப்பறையைக் கொள்ளலாம். ஆவணங்கள் எண்ணிக்கையில் பெருகியதால், அவை 1909 ஆம் ஆண்டில் நன்கு வடிவமைக்கப்பட்ட தற்போதைய எழும்பூரில் உள்ள வளாகத்திற்கு மாற்றப்பட்டு, "மெட்ராஸ் ரெக்கார்ட் ஆபீஸ்" என்ற பெயரில் செயல்பட்டு வந்தது. பின்னர் 1973 இல் தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தமிழ்நாடு ஆவணக்காப்பகம், அரசின் மூல ஆவணங்களை பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. 100 ஆண்டுகளுக்கு மேல் பழமையான இவ்வாவணக்காப்பகம் 40 கோடி ஆவணங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. உலகெங்கிலும் இருந்து வரலாற்று ஆய்வு பணிகளுக்காக வருகை தரும்

ஆராய்ச்சியாளர்களுக்கு இவ்வாவணக்காப்பகம் அறிவுக் களஞ்சியமாக விளங்குகிறது.

5.2. பல்வேறு அரசுத் துறை ஆவணங்களின் முக்கியத்துவம், மாநிலம் முழுவதும் நிர்வாகம் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, கோயம்புத்தூர், கடலூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் ஆகிய ஆறு மாவட்டங்களில் ஆவணக்காப்பகங்கள் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

5.3. தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் உள்ள ஆவணங்களை கணினி மயமாக்கும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை சுமார் 1.60 கோடி ஆவணங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. மேலும், 2022–23 ஆம் ஆண்டில் ஒரு கோடி ஆவணங்கள் கணினி மயமாக்கப்படுவதுடன், பொது மக்கள் எளிதில்

பதிவிறக்கம் செய்து பயன்பெறும் வகையில் அரிய நில ஆவணங்களான பழைய செட்டில்மென்ட் பதிவேடு மற்றும் இனாம் தூய பதிவேடு ஆகியவை இணையத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.

**5.4.** ஆராய்ச்சி மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் 2022–23 ஆம் ஆண்டு தமிழ்நாடு புதுமை புத்தாக்க திட்டத்தின் கீழ் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் மூலம் ரூ.48.62 இலட்சம் செலவில் ஆய்வு முறையில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், பொதுமக்களிடம் ஆவணக்காப்பகம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படுகின்றன.

**5.5.** புராதனக் கட்டிடங்கள் மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு ஆவணக்காப்பக் கட்டிடங்களை ரூ.9.32 கோடி செலவில் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**5.6.** பழைய மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்களை மின்னுருவாக்கம் செய்வதற்கு சிறப்பு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஆவணக் காப்பகத்தில் உள்ள பழைய ஆவணங்களை ஊடுகதிர் (Scanning) செய்து மென்பொருள் மேம்பாடு, தர உள்ளீடு, அட்டவணைப்படுத்துதல் மற்றும் மெட்டா தரவு உருவாக்கம் போன்றவற்றை உள்ளடக்கிய மின்னணு மயமாக்கும் பணிகளுக்காக ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அப்பணிகள் நடைப்பெற்று வருகின்றன. மேலும், ரூ.10.00 கோடி நிதியில் 15 இலட்சம் அரிய ஆவணங்களை ஜப்பான் டிஸ்யூ லேமினேசன் (Japanese Tissue Lamination) முறையில் செப்பனிட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

## 6. தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்

**6.1.** தமிழ்நாடு அரசு மற்றும் பல்கலைக்கழக மானியக் குழுவின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் தோற்றுவிக்கப்பட்டது. இம்மன்றம் தமிழ்நாட்டில் உயர்கல்வியை ஊக்குவிக்கும் வகையில் கல்வி திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

### 6.2. மன்றத்தின் முக்கியச் செயல்பாடுகள்

**6.2.1.** ரூ.25 கோடி ஆராய்ச்சி நிதி, அழகப்பா பல்கலைக்கழகம், அண்ணாமலை பல்கலைக்கழகம், பெரியார் பல்கலைக்கழகம், திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஆகிய 9 மாநிலப்

பல்கலைக்கழகங்களில் இருந்து 89 ஆராய்ச்சித் திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாட்டின் நடைமுறை வாழ்க்கைப் பிரச்சனைகளுக்கு ஆராய்ச்சியின் மூலம் தீர்வு காணும் வகையில் வழங்கப்பட்டன

**6.2.2.** மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் சட்டமன்றத்தில் வெளியிட்ட அறிவிப்பின் அடிப்படையில் மாணவர்களின் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் வகையில் தொழில்துறையினருடன் கலந்தாலோசித்து, கலை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகங்கள் மற்றும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் நடைமுறையில் இருந்து வரும் 69 இளநிலை பாடத்திட்டங்களும், 85 முதுநிலை பாடத்திட்டங்களும் புதுப்பிக்கப்பட்டன.

**6.2.3.** மாணவர்களின் வேலைவாய்ப்பு திறனை மேம்படுத்தும் 'நான் முதல்வன் திட்டம், திறன் மேம்பாடு திட்டங்கள் மாதிரி பாடத்திட்டத்தில்

சேர்க்கப்பட்டுள்ளன. புதிதாக தயாரிக்கப்பட்டுள்ள மாதிரி பாடத்திட்டங்கள் 10 கலை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகங்களின் ஏற்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

**6.2.4.** பொதுப் பணிகளில் வேலை வாய்ப்பிற்காகவும், உயர் படிப்புகளை மேற்கொள்வதற்காகவும் கல்வி நிறுவனங்கள் வழங்கும் படிப்புகளுக்கு இணைத்தன்மை அளிப்பதற்கு ஏதுவாக பல்வேறு பாடத்திட்டக் குழுத் தலைவர்கள் மற்றும் பாட வல்லுநர்களின் கூட்டங்களை நடத்தி பாடங்களுக்கான இணைத்தன்மை குறித்து, பரிந்துரைகளைப் பெற்று அந்த பரிந்துரைகளை இணைத்தன்மைக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பித்து தேவையான அரசாணைகள் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதுவரை நடத்தப்பட்ட 18 இணைத்தன்மைக் குழுவில், பொதுப் பணிகளில் வேலைவாய்ப்பு நோக்கத்திற்காக 690 பட்டங்களும், உயர் கல்வி பயில 127 பட்டங்களும்

(மொத்தம் 817 பட்டங்கள்) இணையானது / இணையற்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளன.

**6.2.5.** கணினி அறிவாற்றல், தகவல் தொடர்புத் திறன், ஆளுமைத் திறன் ஆகியவற்றை ஏற்படுத்த 62 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், மென் திறன் மையங்கள் ஏற்படுத்தப்பட்டு இத்திட்டத்தின் கீழ், ஆண்டுதோறும், ரூ.1.55 கோடி செலவில் 500 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**6.2.6.** மெதுவாக கற்கும் மாணவர்களின் "இடைநிற்றலை தவிர்க்கும் பொருட்டு சிறப்பு கவனம் அளிக்கும் திட்டம்" 24 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஆரம்பிக்கப்பட்டு, இத்திட்டத்தின் மூலம் ஆண்டுதோறும் ரூ.30 இலட்சம் செலவில் பயிற்சி வகுப்புகள் மற்றும் மறுசீரமைப்பு வகுப்புகளை நடத்தி வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டம் மாணவர்களின் கல்லூரி படிப்பின்

இடைநிற்றலை தடுப்பதில் கவனம் செலுத்துகிறது. மெதுவாகக் கற்பவர்களுக்குச் சிறப்புப் பயிற்சியளித்து கற்றல் திறன்களை மேம்படுத்துவதன் மூலம் அவர்களின் பட்டப்படிப்பை முடிக்க உதவுகிறது.

**6.2.7.** 'சிறு ஆராய்ச்சித் திட்டம்' மூலமாக ஆண்டுதோறும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களால் சிறு ஆராய்ச்சி திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு, ஆய்வுக் குழுவால் தேந்தெடுக்கப்பட்ட 25 ஆய்வு திட்டங்களுக்கு, தலா ரூ.1 இலட்சம் வீதம் ஆய்வு நிதி வழங்கப்படுகிறது.

**6.2.8.** 'மாணவர் குறு திட்டத்தின்படி' முதுநிலை இறுதியாண்டு பயிலும் மாணவர்களுக்கு ரூ.15,000/– ஆய்வு நிதி வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் 50 முதுகலை இறுதியாண்டு பயிலும் மாணவர்களுக்கு ஆராய்ச்சி நிதி வழங்கப்படுகிறது. இத்திட்டம் மாணவர்களிடையே ஆராய்ச்சி மனப்பான்மையை மேம்படுத்துவதற்காக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**6.2.9.** பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கு கருத்தரங்குகள், பட்டறைகள் மற்றும் பயிலரங்குகளை நடத்துவதற்காக, பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்குப் பகுதியளவு நிதி உதவி வழங்கப்படுகிறது.

**6.2.10.** சென்னைப் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆகிய ஆறு பல்கலைக்கழகங்களில் 'பல்கலைக்கழக தொழில் கூட்டிணைவு மையங்கள்' நிறுவப்பட்டு, மாணவர்களுக்குத் தொழிற்பயிற்சி, தொழில் சார்ந்த ஆய்வுத்திட்டங்கள், ஆலோசனைப் பணிகள், உயிரி பன்முகத்தன்மையை பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் போன்றவைகளுக்கான வசதிகளை ஏற்படுத்தி தருவதுடன் வேலைவாய்ப்பு பெறுவதற்கும் துணைபுரிகிறது.

**6.2.11.** 10 மாநிலப் பல்கலைக்கழகப் பதிவாளர்கள் மற்றும் 5 பல்கலைக்கழகங்களில் செயல்பட்டு வரும் மனித வள மையங்களின் இயக்குநர்கள், திறன் மேம்பாடு மற்றும் நான் முதல்வன் திட்டப் பிரதிநிதிகள் கலந்து கொண்ட சிறப்பு கூட்டம் நடத்தப்பட்டது. அச்சிறப்புக் கூட்டத்தில் "நான் முதல்வன்" திட்டத்தின் ஆசிரியர் மேம்பாட்டு பயிற்சி திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் பற்றி விவாதிக்கப்பட்டன.

**6.2.12.** தமிழக அரசின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் "நான் முதல்வன்" ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சிகளை, 10 பல்கலைக்கழகங்களில் நான் முதல்வன் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்ட அலுவலர்கள், கல்லூரிக் கல்வி இயக்குநர் ஆகியோர் உதவியுடன் நடத்தியதற்கான ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொண்டது.

## 7. தேசிய உயர்கல்வி திட்டம் (ரூசா)

**7.1.** தேசிய உயர்கல்வி திட்டம் Rashtriya Uchchatar Shiksha Abhiyan (RUSA) என்பது ஒன்றிய அரசின் நிதியுதவியின் கீழ் 60% ஒன்றிய அரசின் பங்கு மற்றும் 40% மாநில அரசின் பங்குடன் இணைந்து 2013 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திட்டமாகும். உயர்கல்வியின் தரத்தினை மேம்படுத்துதல், வெளிப்படைத் தன்மை அதிகரித்தல், சிறப்பான பங்களிப்பு அளித்தல், பொறுப்பேற்றல், பதிலளித்தல் ஆகியவை இதன் அடிப்படை நோக்கமாகும்.

தமிழ்நாட்டில் உள்ள பல உயர்கல்வி நிறுவனங்களுக்கு (HEIs) ரூசா 1.0 மற்றும் ரூசா 2.0 திட்டத்தின் கீழ் பல்வேறு கூறுகளின் அடிப்படையில் நிதியளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் மாநிலப் பல்கலைக்கழங்கள் இத்திட்டத்தின் கீழ்

பயன்பெறுகின்றன. மேலும், இத்திட்டத்தை மேம்படுத்தும் பொருட்டு ரூசா 3.0 திட்டம் விரைவில் அமல்படுத்தப்படவுள்ளது.

**ரூசா 1.0 :**

**7.1.1** ரூசா 1.0 இல், 5 கூறுகளின் கீழ் 76 திட்டங்களுக்கு ரூ.373 கோடி நிதியளிக்கப்பட்டு அதன் மூலம் வகுப்பறைகள், ஆய்வகங்கள், விளையாட்டு வசதிகள், திறன் வகுப்பறைகள் மற்றும் தொழில் நுட்பம் நிறைந்த கற்றல் ஆகியவை சிறப்பாக அமல்படுத்தப்பட்டதன் முயற்சியில் ரூசா 1.0 இன் வெற்றி தெளிவாகத் தெரிகிறது.

**ரூசா 2.0 :**

**7.2.** ரூசா 1.0 வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டதால், திட்டத்தின் திருப்திகரமான விளைவுகளின் காரணமாக, ரூசா திட்டம் 2.0, ஒன்றிய கல்வி அமைச்சகம் (Ministry of Education) மூலம் 2018 ஆம் ஆண்டில் ரூ.615.78 கோடி

அனுமதிக்கப்பட்டது. இதற்கு தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று அங்கீகாரம் கட்டாயத் தகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ரூசா 2.0–ன் கீழ் இரண்டு புதிய கூறுகள் உள்ளடக்கிய பல்வேறு கூறுகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில உயர்கல்வி நிறுவனங்களின் தரம் மற்றும் சிறப்பை மேம்படுத்தும் பொருட்டு ரூ.492 கோடி (ஒன்றிய அரசின் பங்கு ரூ.295 கோடி மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.197 கோடி) ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

### 7.2.1. தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில பல்கலைக்கழகங்களில் தரம் மற்றும் சிறப்பை மேம்படுத்துதல்.

காரைக்குடி, அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு இந்தக் கூறின் கீழ் ரூ.100 கோடி அங்கீகரிக்கப்பட்டு இதில், புதுமை மற்றும் தொழில் முனைவோர் மையத்தை உருவாக்க ரூ.15 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது மற்றும் ரூ.85 கோடி ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு, தரமேம்பாடு மற்றும் சிறப்பான செயல்பாடு

ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தில் உட்கட்டமைப்பு மேம்படுத்துதல், திறன் மேம்பாடு, பல்கலைக்கழகம் சமூக இணைப்பு மற்றும் மாணவர்களை மையப்படுத்திய ஆராய்ச்சித் திட்டங்கள் மூலம் பல்கலைக்கழகத்தின் தரத்தினை மேம்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 7.2.2. ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு மற்றும் தரமேம்பாடு

தேசிய முன்னுரிமையுள்ள பகுதிகளில், புதுமையான கண்டுபிடிப்புகள் மற்றும் தர மேம்பாடுகளை வளர்ப்பதற்கு, அனுபவம் மற்றும் பயன்பாட்டு ரீதியிலான ஆராய்ச்சிகள் (Research & Development) மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த நோக்கத்துடன், ஆறு மாநிலப் பல்கலைக்கழகங்களுக்கு ரூ.300 கோடி அதாவது அண்ணா பல்கலைக்கழகம், அண்ணாமலை பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், மதுரை காமராசர்

பல்கலைக்கழகம் மற்றும் சென்னை பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு தலா ரூ.50 கோடி வீதம் ரூசா 2.0 இல் நிதி அங்கீகாரம் அளிக்கப்பட்டது. இவ்வாறு, அங்கீகரிக்கப்பட்ட மானியத் தொகையில், தொழில் முனைவோர் மையத்தை உருவாக்க ரூ.15 கோடியும், கருப்பொருள் ஆராய்ச்சி திட்டங்களுக்கு (Themed Research Projects) ரூ.35 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் தொழில்முனைவோர் மையங்கள் உருவாக்கப்பட்டு, இதன் கீழ் 130 திறன் மேம்பாடு தொடர்பான படிப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால், இதுவரை 10,012 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர். பல்கலைக்கழகங்கள் பின்வரும் கருப்பொருள்களின் கீழ் ஆராய்ச்சித்திட்டங்களை முன்னோடித் திட்டங்களாக மேற்கொண்டுள்ளன:

| வ எண் | பல்கலைக்கழகங்கள் | ஆராய்ச்சித் திட்டத்தின் கருப்பொருள் |
|---|---|---|
| 1 | அண்ணா பல்கலைக்கழகம் | மின்சார வாகன சார்ஜிங் நிலையம் |
| 2 | அண்ணாமலை பல்கலைக்கழகம் | உடல் நலம் மற்றும் சுற்றுப்புற சுகாதாரம் |
| 3 | பாரதிதாசன் பல்கலைக்கழகம் | சுகாதாரம், ஆற்றல் மற்றும் நிலையான வளர்ச்சி |
| 4 | பாரதியார் பல்கலைக்கழகம் | புற்றுநோய் தெரோனோஸ்டிக்ஸ் ஆராய்ச்சி மையம் |
| 5 | மதுரை காமராசர் பல்கலைக்கழகம் | உயிர் மருத்துவப் அறிவியல் பள்ளி |
| 6 | சென்னை பல்கலைக்கழகம் | உயிர் மருத்துவ பயன்பாடுகள் |

ஆறு பல்கலைக்கழகங்களுக்கான மொத்த ஒதுக்கீட்டுத் தொகையான ரூ.155 கோடியில், தலா ஒவ்வொன்றிற்கும் ரூ.25 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

**7.2.3.** மூன்று பல்கலைக்கழகங்கள் மற்றும் 10 கல்லூரிகளுக்கு, உட்கட்டமைப்பு மேம்படுத்தும்

மானியங்களின் கீழ் ரூ.80 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதன் மூலம், புதிய வசதிகளாக, கல்வியியல் கட்டடத் தொகுதி, உள் விளையாட்டு அரங்கம், உடற்பயிற்சிக் கூடம் போன்ற உட்கட்டமைப்பை மேம்படுத்துதல், பாடத்திட்ட கல்வி கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கான உபகரணங்களை வாங்குவதற்கான வழிமுறைகள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 7.3. ரூசா செயல்பாடுகள்

**7.3.1.** தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) மூலம் 19 அரசு கலை மற்றும் அறிவியல் (தன்னாட்சி) கல்லூரிகளில் 13,159 மாணாக்கர்களுக்குத் தொழிற்பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

**7.3.2.** மாநிலத்தின் உயர் பயிற்சி நிறுவனமான அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் மூலம் தொழிற்கல்வி கூறுகளின் கீழ் வாழ்க்கைத் திறன்கள்

மற்றும் மேம்படுத்தும் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. தலைமைத்துவம், தனிப்பட்ட திறன்கள், வளர்ந்து வரும் தொழில்நுட்பம் போன்றவற்றில் சுமார் 2,800 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**7.3.3.** மாநில அரசு உயர்கல்வி நிறுவனங்களுக்கு, ஒவ்வொரு வாரமும் அவற்றின் கல்விப் பாடத்திட்டத்தைத் தவிர பல்வேறு கருப்பொருள்களை உள்ளடக்கிய இணையதள அமர்வுகளின் வகுப்புகள் வாராந்திர இணையதள கருத்தரங்கம் (Weekly Online Workshop) மூலமாக நடத்தப்படுகிறது. அதிகாரத்துவவாதிகள், நிர்வாகிகள், தொழிலதிபர்கள், பெருநிறுவனங்கள், கல்வித்துறை மற்றும் தொழில்துறையைச் சேர்ந்த பேச்சாளர்கள் முதல் சிறப்புப் பேச்சாளர்கள் தங்கள் நுண்ணறிவுகளை மாணவர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்கள். கிட்டத்தட்ட 500 மாணக்கர்கள் நேரடி நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்றனர். இந்நிகழ்ச்சிகள் காணொளி TNRUSA YouTube ஒளியலை வழியாகக் கிடைக்கின்றன.

இதுவரை 70 அமர்வுகள் நடத்தப்பட்டு 40,000 மாணாக்கர்கள் பயன்பெற்றுள்ளனர்.

**7.3.4.** சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள மாநிலப் பல்கலைக்கழகங்ளுடன் தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று அங்கீகாரமும் இணைந்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று அங்கீகாரம் (NAAC) பெறுவதற்கான தொடர் பயிற்சிப் பட்டறைகள் 300 பங்கேற்பாளர்களுடன், நான்கு தொகுதிகளாக 115 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் நடத்தப்பட்டன.

**7.3.5.** மகளிர் தினக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக "22 ஆம் நூற்றாண்டின் பெண்" என்ற தலைப்பில் படத்தொகுப்பு போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது, இப்போட்டியானது மாணவர்களுக்கு தலைமைத்துவம் மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றை

வெளிப்படுத்தும் நோக்கத்துடன் நடத்தப்பட்டது. இவற்றில், 163 வரவுப்பதிவுகள் பெறப்பட்டன மற்றும் 23 மாவட்டங்களில் உள்ள 39 கல்லூரிகளில் இருந்து மொத்தம் 66 மாணாக்கர்கள் வெற்றி பெற்றனர்.

சுதந்திர தின வினாடி வினா போட்டி–2022 [IQL 2022], நிகர்நிலையில் தமிழ்நாடு முழுவதும் உள்ள 150 அரசு கல்லூரி மாணவர்களுக்கு இந்திய சுதந்திரத்தின் 75 ஆவது ஆண்டினை நினைவு கூறும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டது. வினாடி–வினா போட்டியில் மாநிலம் முழுவதும் சுமார் 3,250 மாணாக்கர்கள் கலந்து கொண்டனர்.

**7.3.6.** மாற்றத்திற்கான தலைமைத்துவப் பயிற்சி (Transformational Leadership Program), தமிழகத்தில் உள்ள அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளின் முதல்வர்களுக்கு ECHO இந்தியா என்ற நிறுவனத்துடன் இணைந்து நடத்தப்பட்டது. 21 ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ள உற்சாகமான

மற்றும் ஆற்றல்மிக்க தலைமை ஆர்வத்தை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இப்பயிற்சி இரண்டு வாரத்திற்கு ஒருமுறை வீதம் பன்னிரண்டு அமர்வுகள் கொண்டு இணைய பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவு, முடிவெடுத்தல், மன அழுத்த மேலாண்மை ஆகிய தலைப்புகளை உள்ளடக்கியது.

**7.3.7.** இணையப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு, ஆலோசனை, கல்வி மற்றும் பயிற்சி, இணைய நுட்பமைதி அறக்கட்டளையுடன் (Cyber Peace Foundation) இணைந்து நடத்தப்பட்டது. இணையப் பாதுகாப்பு விழிப்புணர்வு திட்டம் 10,000க்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்டு 11 அமர்வுகளில் சென்னை, திருப்பத்தூர், மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்டது. இதன் அடுத்தக் கட்டம், சுமார் 12,000 மாணாக்கர்கள் பயன்பெறுமாறு திட்டமிடப்பட்டுள்ளது.

**7.3.8.** தொழில் சார்ந்த செயல் முறை வகுப்பு 39 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைச் சேர்ந்த 4,930 மாணவர்களுக்கு, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் (TNSDC) கீழ் சுகாதாரப் பாதுகாப்புக்கான சிறப்பு நோக்க ஊர்தி (SPV) தமிழ்நாடு உயர் திறன் மேம்பாட்டு மையம் – சுகாதார நலன் (TNASDCH) மூலம் தொழிற்பயிற்சி அளிக்கப்படுகிறது. சுகாதார மேலாண்மை செயலதிகாரி, மருத்துவமனை நிர்வாக செயலதிகாரி, மருத்துவக் குறியீடு செய்தல், மருத்துவப் பட்டியலிடல் உள்ளிட்ட பயிற்சிகள் அடங்கும். மேலும், பயிற்சியை வெற்றிகரமாக முடித்த மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறது.

**7.3.9.** மாணக்கர்களின் நலனுக்காக மதிப்பு கூட்டப்பட்ட பயிற்சிகளை வழங்கும் நோக்கத்துடன், ரூசாவின் தொழிற்கல்வி திட்டங்களின் கீழ் வெளிநாட்டு மொழிப் பயிற்சி பற்றிய திட்டங்கள் வழங்கப்படுகின்றன. பிரஞ்சு, ஜெர்மன், ஜப்பானிய மொழிகள் 9 அரசு கலை மற்றும் அறிவியல்

கல்லூரிகளில் 1,640 மாணவர்களுக்கு மெய்நிகர் பயன்முறையில் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்கள் மூலம் வழங்கப்படுகிறது.

**7.3.10.** அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் முதல்வர்கள் தங்கள் திறன்களை மேம்படுத்த, ஆசிரியர் திறன் செறிவு பயிற்சி (FEP) ஏற்பாடு செய்யப்பட்டது. இத்திட்டமானது, அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் (AASC) 3 நாள் பயிற்சியாக 150 முதல்வர்களுக்கு நடத்தப்பட்டது.

**7.3.11.** "இணையவழி கற்பித்தல், மதிப்பீடு மற்றும் கற்றலில் வளர்ந்து வரும் போக்குகள் (eTOTAL'23) என்ற தலைப்பில் சர்வதேசக் கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டது. இரண்டு நாட்கள் நடைபெற்ற தொழில் நுட்ப அமர்வுகளில் ஆய்வு கட்டுரை விளக்கக்காட்சிகள், குழு விவாதங்கள், சுவர் இதழ் விளக்கக்காட்சிகள் மற்றும் நிகர்நிலை விளக்கக்காட்சிகளுடன் கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

ஆசிரியர்கள் அளித்த ஆய்வுக் கட்டுரைகள் பல்கலைக்கழக மானியக்குழு (UGC–Care) பட்டியலிடப்பட்ட இதழ், எல்டன் பி.ஸ்டிபன்ஸ் கோ (EBSCO) பட்டியலிடப்பட்ட இதழ் மற்றும் கருத்தரங்க நிகழ்வுகள் ஆகியவற்றில் வெளியிடப்பட்டன.

மாநில அரசு தேசிய உயர்கல்வி திட்டத்துடன் (ரூசா) இணைந்து உயர் கல்வியில் கற்பித்தல், கற்றல் மற்றும் ஆராய்ச்சிக்கான உலகளாவிய மையமாக தமிழ்நாட்டை மாற்றுவதற்குத் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

## 8. அறிவியல் நகரம்

**8.1.** அறிவியல் நகரம் 1998 ஆம் ஆண்டில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்டு உருவாக்கப்பட்டது. அறிவியலைப் பிரபலப்படுத்துவதற்குத் தற்சமயம் அமைந்துள்ள நிறுவனங்கள் மற்றும் அமையவிருக்கும் புதிய நிறுவனங்களின் மூலமாக அறிவியல் தொழில்நுட்பங்களை அபிவிருத்தி செய்தல், இந்த தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் மூலதன நிறுவனங்களுக்கிடையே தொழில்நுட்பங்களை பரிமாற்றம் செய்தல், உலக அளவில் தொழில்நுட்பங்களை முன்கூட்டியே அறிவது மற்றும் கண்காணிப்பதற்கு ஏதுவாக அனைத்து வசதிகளையும் கொண்ட ஒரு வளாகத்தை உருவாக்குவது அறிவியல் நகரத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

### 8.2. அறிவியலைப் பிரபலப்படுத்துதல்

கல்லூரி மற்றும் பள்ளி மாணாக்கர்களுக்காக, அறிவியலைப் பிரபலப்படுத்தும் நிகழ்வுகளான பிரபல விரிவுரைகள், கருத்தரங்குகள், பயிற்சிகள் மற்றும் அறிவியல் கண்காட்சிகளை அறிவியல் நகரம் நடத்திவருகிறது. கீழ்க்காணும் நிகழ்ச்சிகள் அறிவியல் நகரத்தால் நடத்தப்பட்டு சுமார் 1200 நபர்கள் பயனடைந்துள்ளனர்:

#### 8.2.1. ஆய்வகத் தொழில்நுட்ப பயிற்சி.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் இளநிலை இறுதியாண்டு பட்டப்படிப்பு மற்றும் உயிரியல், உயிர்தொழில்நுட்பம், இயற்பியல், வேதியியல், பொருள் அறிவியல் (Material Science), அதி நுன்பொருட்கள் தொழில்நுட்பம் (Technique in Nano–materaials) ஆகிய துறைகளில் முதுகலை பட்டப்படிப்பு பயிலும் மாணாக்கர்களை அறிவியலில்

ஊக்குவிப்பதற்காக ஐந்து நாட்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

### 8.2.2. நாட்டுக் கோழி குறித்த தேசிய மாநாடு

இம்மாநாடு தமிழ்நாடு அறிவியல் கால்நடை பல்கலைக்கழகத்துடன் இணைந்து 22.09.2022 மற்றும் 23.09.2022 ஆகிய இரு நாட்களில் நடத்தப்பட்டது. இம்மாநாடு, மரபியல் மற்றும் மரபணு, உடலியல் மற்றும் ஊட்டச்சத்து, விவசாயமுறைகள், சுகாதாரம் மற்றும் உயிர்பாதுகாப்பு, அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்பம், பொருளாதாரம் மற்றும் சந்தைப்படுத்துதல், விவசாயிகள்–விஞ்ஞானிகள் கலந்துரையாடல் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக இருந்தது.

### 8.2.3. கல்லூரி வளாகத்திலிருந்து அடுத்த வளர்ச்சி நிலைக்கு மாறுதல்

இக்கருத்தரங்கில், மாணாக்கர்கள் கல்லூரி வளாகத்திலிருந்து அடுத்த நிலை செல்வதற்குத்

தேவையான, உயர் கல்விக்கான பல்வேறு வகையான திட்டங்கள், வேலைவாய்ப்பை அதிகரிக்கத் தேவையான திறன் தொகுப்புகள், ஆராய்ச்சி மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் போன்ற பல தகவல்கள் வழங்கப்பட்டன.

### 8.2.4. ஜியோ ஸ்பேசியல் தொழில்நுட்பம் மற்றும் இயற்கை பேரிடர் மேலாண்மை குறித்த பயிற்சிப் பட்டறை

இவ்விரண்டு பயிற்சிப் பட்டறைகளும் தலா ஐந்து நாட்களுக்கு நடத்தப்பட்டன. இப்பயிற்சிப் பட்டறையில் பங்கேற்றவர்களுக்கு ஜியோ ஸ்பேசியல் தொழில்நுட்பங்களான தொலை உணர்வு, ஆளில்லா விமானம், Q–புவியியல் தகவல் அமைப்பு, இடஞ்சார்ந்த தரவுகள் மேலாண்மை போன்றவற்றில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. மேலும், பேரிடர் மேலாண்மை பயிற்சிப்பட்டறையில் பல்வேறு பேரிடர்கள் மற்றும் அதன் மேலாண்மை பற்றியும், மேலாண்மைக்குப்

பயன்படுத்தப்படும் பல்வேறு தொழில்நுட்பங்கள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது.

### 8.2.5. நிலையான நீர்வள மேலாண்மைக்கான நவீன கருவிகள் மற்றும் தொழில்நுட்பங்கள் பயிற்சி

இப்பயிற்சி ஐந்து நாட்களுக்கு நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் பங்கேற்றவர்களுக்கு நிலத்தடி நீர்வள மதிப்பீடு, நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் மற்றும் நீர் மேலாண்மை நடவடிக்கைகளுக்கான சமூக செயல்திட்டம் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது.

### 8.3. கோடைக் காலப் பயிற்சி முகாம்:

முதுகலை பயிலும் மாணாக்கர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்காகவும் ஆராய்ச்சி மனப்பாண்மையை தூண்டுவதற்காகவும் கோடைக்கால பயிற்சி முகாம்களில் கணிதம், வேதியியல் மற்றும் உயிரியல் ஆகிய பிரிவுகளில் தலா 30 மாணாக்கர்கள் வீதம் மொத்தம் 90 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சியில் 75% ஊரக பகுதிகளில் பயிலும் மாணாக்கர்களும், 25% நகர்புற பகுதிகளிலுள்ள

மாணாக்கர்களும் தேர்ந்தெடுக்கப்படுவர். இப்பயிற்சி பட்டறைகள் 21 நாட்களுக்கு ஒவ்வொரு துறையிலும் நடத்தப்படும்.

### 8.4. விருதுகள்

#### 8.4.1 சிறந்த அறிவியல் ஆசிரியர்கள் விருது:

இளம் மாணாக்கர்களின் அறிவியல் கல்வி வளர்ச்சியில் ஆசிரியர்கள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றனர். ஆகவே, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களை கௌரவிக்கும் விதமாக அறிவியல் நகரத்தால் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. 10 ஆசிரியர்களுக்கு ரூ.25,000/–க்கான காசோலை மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

#### 8.4.2. ஊரக கண்டுபிடிப்பாளர் விருது

கிராமப்புற மக்களால் சமூகத்தின் நலனுக்காக குறைந்த பொருட் செலவில் பல கண்டுபிடிப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. எனவே அறிவியல் நகரம்

கிராமப்புற கண்டுபிடிப்பாளர்களையும், அவர்களது கண்டுபிடிப்புகளையும் வெளிக்கொணரும் வகையில் இவ்விருதினை 2018 ஆம் ஆண்டில் தோற்றுவித்தது. இரண்டு கண்டுபிடிப்பாளர்களுக்கு தலா ரூ.1,00,000/-க்கான காசோலை மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

### 8.5. பெண் தொழில்முனைவோருக்கான பயிற்சி

2023 சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு 18 முதல் 23 வயதிற்குட்பட்ட 75 பெண்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சிப்பட்டறை நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் சுருள்பாசி வளர்ப்பு, அத்தியாவசிய எண்ணெய் உற்பத்தி செய்தல் மற்றும் தனி சுகாதார தயாரிப்புப் பொருள்களுக்கான தரக்கட்டுபாடு மற்றும் தர உத்திரவாதம் அளவு கோள்கள் குறித்த பயிற்சியளிக்கப்பட்டது.

மேலும், பல்வேறு கல்லூரியை சேர்ந்த 400 மாணவியர்களுக்காக, டிஜிட்டல் மற்றும் உயிரியல்

சகாப்தத்தில் பெண் தொழில் முனைவோருக்கான ஒருங்கிணைந்த அணுகுமுறை குறித்த பயிற்சிப்பட்டறை நடத்தப்பட்டது.

### 8.6. சென்னை அறிவியல் விழா

சென்னை அறிவியல் விழா 2023 இல் மாநில மற்றும் ஒன்றிய அரசு நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள் இணைந்து அறிவியல் கண்காட்சியினை நடத்தியது. மாணாக்கர்கள் மற்றும் கண்காட்சிக்கு வருகை புரிபவர்களை அறிவியலில் ஊக்குவிக்கும் வண்ணம் இவ்விழாவில் ஊடாடும் அறிவியல் காட்சிகள் மற்றும் முன்மாதிரிகள் காட்சிபடுத்தப்பட்டன. அறிவியலில் உள்ள அடிப்படை கருத்துக்கள் எளிதாக புரியும் வண்ணம் அறிவியல் செய்முறைகளும் செய்து காட்டப்பட்டன. இவ்விழாவில் பொதுமக்கள் 10,000 நபர்கள் பங்கேற்று பயனடைந்தனர்.

## 9. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்

**9.1.** தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையமானது 1983 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அறிவியல் கருத்துக்களைக் கற்றுணர்ந்த சமுதாயத்தைக் கட்டமைக்க அறிவியல் மையங்கள் இன்றியமையாதவை. அறிவியல் தொழில்நுட்பக் கோட்பாடுகளையும், அன்றாட வாழ்வில் அவற்றின் செயலாற்றல்களையும் குறித்து விவரிக்க தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் அறிவியல் மையங்களை நிறுவியுள்ளது. தமிழக மக்களுக்கு அறிவியல் கருத்துக்களின்பால் நெருக்கத்தை உண்டாக்க அறிவியல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை இம்மையம் அவ்வப்போது தொடர்ந்து நடத்துகிறது.

சென்னையில், பி.எம்.பிர்லா கோளரங்கத்துடன் பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தையும், திருச்சிராப்பள்ளியில் அண்ணா அறிவியல் மையம் மற்றும் கோளரங்கத்தையும், வேலூரில் மாவட்ட அறிவியல் மையத்தையும், கோயம்புத்தூரில் மண்டல

அறிவியல் மையத்தையும் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் நிறுவியுள்ளது. சென்னையிலும், திருச்சிராப்பள்ளியிலும் உள்ள கோளரங்கங்கள் வானவியல் கற்பிப்பிப்பதில் ஈடுபட்டுள்ளன.

## 9.2. செயல்பாடுகள்

**9.2.1.** பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்திலுள்ள கோளரங்கத்தில் நவீன கால தொழில்நுட்பத்திற்கு ஏற்ப புதிய உயர் தொழில்நுட்பம் கொண்ட ஒன்றிணைந்த எண்ணிலக்க கோளரங்கம் மற்றும் புதிய அரைக் கோள விதானம் ஆகியவை, விண்மீன்களின் நிகழ்நிலை தோற்ற நகர்வு, விண்வெளிப்பயணம், கோள்கள், வாயுத்திரள்கள், அண்டங்கள் மற்றும் பல்வேறு விதமான வானவியல் படங்களை துல்லியமாகக் காண்பிக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

**9.2.2.** "கோளத்தில் அறிவியல்" எனும் கருவி, பார்வையாளர்களுக்கு சிக்கலான சுற்றுச்சூழல்

நிகழ்வுகளை, புதுமையான முறையில் செயல்வகைக் கல்வியாக விளக்குகிறது.

**9.2.3.** 2022−23 ஆம் ஆண்டில் 3,36,000க்கும் மேற்பட்ட பொதுமக்கள், பெரும்பாலும் மாணாக்கர்கள், அறிவியல் மையங்களின் அறிவியல் காட்சிக்கூடங்களுக்கும், அறிவியல் பூங்காக்களுக்கும் மற்றும் கோளரங்கங்களுக்கும் வருகை புரிந்து பயன்பெற்றனர்.

**9.2.4.** நடமாடும் அறிவியல் கண்காட்சி, சொற்பொழிவுகள், அறிவியல் செயல்முறை விளக்கங்கள், பயிற்சி மற்றும் பயிற்சிப்பட்டறைகள், நூல் வெளியீடுகள், அறிவியல் பூங்கா காட்சிப் பொருட்கள் ஆகியவற்றின் வாயிலாக அறிவியல் கருத்துக்களைப் பொதுமக்களுக்குக் கொண்டு செல்லவும், அவர்களுக்குக் கற்பிக்கவும் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் இடைவிடா முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. மேலும், குறுகிய கால பயிற்சிகள், வானவியல் முகாம்கள், வினாடி வினா

போட்டிகள் ஆகியவை அவ்வப்போது நடத்தப்பட்டு ஆண்டுதோறும் பல ஆயிரம் மாணாக்கர்களும் பொதுமக்களும் பயன் பெறுகின்றனர்.

**9.2.5.** தொலைநோக்கிகள் வழியே வானவியலை இரவு நேரத்தில் பொதுமக்களும், மாணாக்கர்களும் காண்பதற்கு ஏதுவாக தொடர் நிகழ்வாகவும், அரிய வானவியல் நேர்வுகளின் போது சிறப்பு நிகழ்வாகவும் வான் கூர் நோக்கு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

## 9.3. மேற்கொள்ளப்பட்டு வரும் செயல்பாடுகள்

### 9.3.1. திருச்சிராப்பள்ளி–அண்ணா அறிவியல் மைய கோளரங்கத்தைப் புதுப்பித்தல்

வானவியல் காட்சிகளை தெளிவாகக் வழங்கவும் மற்றும் விண்மீன்களின் நகர்வு, கோள்கள், வாயுத்திரள்கள், அண்டங்கள் மற்றும் பல வானவியல் இயங்குபடக் காட்சிகளை பார்வையாளர்களுக்கு காண்பிக்கும் வகையிலும் அண்ணா அறிவியல் மைய கோளரங்கமானது ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் எண்ணிலக்க ஒளிப்பட கோளரங்கக் கருவிகள்

கொண்டு புதுப்பிக்கப்பட்டு வருகிறது. 2023 ஆம் ஆண்டு மே மாதத்தில் பணிகள் நிறைவடையும்.

### 9.3.2. பள்ளி மாணவர்களுக்கான தொழில்நுட்பப் பயிற்சி

மாணாக்கர்கள் அறிவியல் தொழில்நுட்பக் கருத்துக்களை கற்க, புரிந்துகொள்ள மற்றும் புத்தாக்கப் படைப்புகளைத் தாமே உருவாக்க தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையமானது ரூ.1.8 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மண்டல அறிவியல் மையத்தில் புத்தாக்க மையத்தையும் மற்றும் ரூ.1.5 கோடி மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளி–அண்ணா அறிவியல் மையத்தில் புத்தாக்க மையத்தையும் நிறுவியுள்ளது. இவ்விரண்டு புத்தாக்க மையங்களும் 28.10.2021 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன. இந்த மையங்களில் வார விடுமுறை நாட்களில் பள்ளி மாணாக்கர்களுக்கு, ரோபோடிக், மின்னணுவியல், ட்ரோன்கள், முப்பரிமாண அச்சிடுதல், கணினி குறியீட்டு முறை உள்ளிட்ட, புதிய தொழில்நுட்பங்களில் பயிற்சி வகுப்புகள்

நடத்தப்படுகின்றன. வார நாட்களிலும் மாணாக்கர்கள் இங்குள்ள வசதிகளைத் தங்கள் கற்றல் செயல்பாடுகளுக்குப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர்.

### 9.3.3. மானக் திட்டத்தின்கீழ் புத்தாக்க அறிவியல் ஆய்வு விருது

அறிவியல் தொழில்நுட்பத் துறை மற்றும் தேசிய புத்தாக்க நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து, 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் இளம்மாணவர்களை அறிவியல் கற்கவும், அறிவியல் ஆய்வுகளைத் தங்கள் எதிர்கால வாழ்க்கை முறையாக அமைத்துக்கொள்ள ஈர்க்கும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த மானக் (MANAK - Million Minds Augmenting National Aspiration and Knowledge) திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்படும் பள்ளி மாணாக்கர்கள் ஒவ்வொருவருக்கும் மாவட்ட அளவிலான கண்காட்சி போட்டிகளில் தங்களது திட்டக்கருத்தை வெளிப்படுத்தும் காட்சிப்பொருளைத் தயாரிக்க

ரூ.10,000/– விருதுத் தொகை வழங்கப்படுகிறது. மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்படும் மாணாக்கர்கள் மாநில அளவிலான கண்காட்சிப் போட்டியில் கலந்து கொள்வர். மாநில அளவில் வெற்றிபெறும் மாணாக்கர்கள் ஒவ்வோராண்டும் புதுடில்லியில் நடைபெறும் தேசிய அளவிலான போட்டிகளில் கலந்துகொள்வர். 2022 ஆம் ஆண்டில் சேலம் வாழப்பாடி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த ஒரு மாணவி தேசிய அளவில் மூன்றாவது பரிசை வென்று வெண்கலப்பதக்கம் பெற்றுள்ளார்.

### 9.3.4. அறிவியல் பலகை திட்டம்

இத்திட்டத்தின்கீழ் 'அறிவியல் பலகை' எனும் இணையவழி மாத இதழ் பல்வேறு அறிவியல் கட்டுரைகளுடன் மாதந்தோறும் வெளியிடப்படுகிறது. தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் பல அறிவியல் பரப்புரை நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. சென்னை, இராமநாதபுரம், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் நடத்தப்பட்ட

தொலைநோக்கி மூலம் வான் கூர்நோக்குதல் நிகழ்வுகளில் 10,000க்கும் மேற்பட்ட பள்ளி, கல்லூரி மாணாக்கர்கள் பங்குபெற்று வானவியல் கருத்துக்களைக் கற்றுப் பயனைடந்தனர்.

### 9.3.5. தூய கடற்கரை, பாதுகாப்பான கடல் நிகழ்ச்சி

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் உணர்வை வளர்க்க, 'தூய கடற்கரை, பாதுகாப்பான கடல்' என்ற நிகழ்ச்சி சென்னை, மயிலாடுதுறை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் நடைபெற்றது. இவற்றில் 15,000க்கும் மேற்பட்ட மாணாக்கர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர். வானவியல் பயிலரங்குகள், பசுமை வால்நட்சத்திர விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், அறிவியல் செயல்முறை உரைகள் மற்றும் இணையவழி அறிவியல் உரைத்தொடர்கள் ஆகிய பிற நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

## 10. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்

**10.1.** தமிழக அரசால் ஒரு தன்னாட்சி பெற்ற தலைமை நிறுவனமாக தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம், 1984 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இம்மன்றம், நமது மாநிலத்தின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியை மேம்படுத்த, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, மற்றும் களப்பணிகள் சார்ந்த பல அறிவியல் தொழில்நுட்பத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

### 10.2. மாநில அரசின் உதவியோடு செயல்படுத்தப்படும் திட்டங்கள்

#### 10.2.1. மாணவர் ஆராய்ச்சித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பில் இறுதியாண்டில் பயின்றுவரும் பொறியியல் மாணவர்களுக்கும் மற்றும் மருத்துவவியல், வேளாண்மையியல், உயிரியல், சுற்றுச்சூழலியல், இயற்பியல் மற்றும் கால்நடை மருத்துவவியல் போன்ற துறைகளில் முதுநிலை

பட்டப்படிப்பில் இறுதியாண்டில் பயின்றுவரும் மாணவர்களுக்கும் ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்கு அதிகபட்சமாக ரூ.10,000/- வரை நிதி உதவி வழங்கப்படுகிறது. 2022-23 ஆம் ஆண்டு 2,376 மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் 1018 மாணவர் ஆராய்ச்சித் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டது.

**10.2.2. அறிவியல் தொழில்நுட்ப ஆய்வுத் திட்டங்கள்**

நமது மாநிலத்திற்கு பொருத்தமான மற்றும் பயனுள்ள ஆய்வுகள் மேற்கொள்ள இத்திட்டத்தின் மூலம் அறிவியலறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சி யாளர்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. 2022-23 ஆம் ஆண்டு 27 ஆய்வுத் திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**10.2.3. இளம் மாணவ அறிவியலறிஞர்கள் செயல் திட்டம்**

மாவட்டந்தோறும் பஞ்சாயத்து மற்றும் அரசு பள்ளிகளில் 9 ஆம் வகுப்பு பயிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட

40 மாணவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் கல்லூரி அல்லது பல்கலைக்கழகத்தில் திறமை வாய்ந்த பேராசிரியர்களால் கோடை விடுமுறையில் 15 நாட்களுக்குப் பல்வேறு அறிவியல் தொழில்நுட்பங்கள் குறித்து சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 2022-23 ஆம் ஆண்டில் 18 மாவட்டங்களிலிருந்து 720 மாணாக்கர்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

## 10.2.4. இளம் அறிவியலறிஞர்களுக்கு ஆதரவு ஊதியம்

40 வயதுக்குட்பட்ட இளம் ஆய்வாளர்கள் மற்றும் அறிவியலறிஞர்களுக்குக் கூடுதலாக ஆதரவு ஊதியம் இரண்டு முதல் ஆறு மாதங்களுக்கு மாதந்தோறும் ரூ.10,000/- வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், 2022-23 ஆம் ஆண்டில் 23 இளம் அறிவியலறிஞர்கள் பயன்பெறும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 10.2.5. கருத்தரங்கு, அறிவியல் மாநாடு மற்றும் பயிற்சிப் பட்டறை நடத்துவதற்குப் பகுதி நிதியுதவி

கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு அறிவியல் ஆய்வு குறித்து பரிமாற்றங்கள் செய்யவும், கலந்துரையாடவும், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் நடத்தவும் பகுதி நிதியுதவி வழங்கப்படுகிறது. 2022-23 ஆம் ஆண்டில் 100 நிகழ்வுகளுக்கு நிதியுதவி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 10.2.6. அறிவியல் தொழில்நுட்பத்தை பரப்புதல்

அறிவியல் கண்காட்சிகள், பயிற்சி முகாம்கள், விரிவுரைகள் போன்ற நிகழ்ச்சிகள் மூலம் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தை பரவலாக்க பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், அரசு சாரா தன்னார்வ அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. 2022-23 ஆம் ஆண்டில் 50 நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

## 10.2.7. இளம் அறிவியலறிஞர்களுக்குப் பயண நிதியுதவி

இளம் அறிவியலறிஞர்கள் தமது ஆராய்ச்சிகளின் முடிவுகளைப் பகிர்ந்து கொள்ள, பன்னாட்டு மாநாடுகளில் கலந்து கொள்வதற்குத் தேவையான விமான பயணத்தொகையில் 50 விழுக்காடு வரை நிதி உதவியும் மற்றும் தேசிய அளவிலான மாநாடுகளில் பங்கு கொள்வதற்கு 100 விழுக்காடு இரயில் பயணக் கட்டணமும் நிதி உதவியாக வழங்கப்படுகிறது. 2022–23 ஆம் ஆண்டில் 6 அறிவியலறிஞர்கள் பயனடையும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 10.2.8. அறிவியல் தொழில்நுட்ப வெளியீடுகளுக்கு நிதியுதவி

மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் தமிழில் அறிவியல் வெளியீடுகளை வெளிக்கொணர நிதியுதவி வழங்கப்படுகிறது. 2022–23 ஆம் ஆண்டில், 10 முதல் 15 அறிவியல் வெளியீடுகளுக்கு நிதியுதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 10.2.9. தமிழக அறிவியலறிஞர்கள் விருது

நமது மாநிலத்தைச் சேர்ந்த அறிவியலறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் பங்களிப்பை ஊக்கப்படுத்துவதற்கும், அவர்களை கௌரவிப்பதற்கும் தமிழக அறிவியலறிஞர் விருது வேளாண்மை, உயிரியல், வேதியியல், சுற்றுப்புறச் சூழலியல், மருத்துவம், கணிதவியல், இயற்பியல், சமூகவியல், கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் போன்ற 10 துறைகளில் வழங்கப்படுகின்றன. 2022–23 ஆம் ஆண்டில் 10 அறிவியலாளர்களைத் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 10.2.10. புதுமையாக்கம் மற்றும் பொருள் உருவாக்கம்

சமுதாயத்தின் அடித்தட்டு மக்களின் புதுமையான யோசனைகள், படைப்புகள் போன்ற வற்றை ஊக்குவிப்பது இத்திட்டத்தின் நோக்க மாகும். தேர்வு செய்யப்பட்ட புதுமைகளுக்கு நிதி அளிப்பதுடன் தேவையான தொழில்நுட்ப மற்றும் கட்டமைப்பு

உதவிகளும் வழங்கப்படும். 2022-23 ஆம் ஆண்டில் 40 புதுமைகளுக்கு ரூ.50,000/- முதல் ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் உதவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 10.2.11. கிராமப்புறப் பள்ளிகளில் அறிவியல் கல்வியின் தரத்தை உயர்த்துதல்

ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை பாடங்களை நடத்தும் அறிவியல் ஆசிரியர்களுக்குத் தற்போதைய பாடதிட்டங்களுக்கேற்ப அவர்களின் கற்பிக்கும் திறனை மேம்படுத்த செய்முறை விளக்கங்களோடு பணியிடைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 2022-23 ஆம் ஆண்டில் 500 ஆசிரியர்கள் பயனடையும் வகையில் 10 மாவட்டங்களில் இத்திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 10.2.12. புதுமைத் தொழில்நுட்பமும் பரவலாக்கமும்

கல்வி மற்றும் ஆய்வு நிறுவனங்களிலுள்ள கல்வியாளர்கள் மற்றும் அறிவியலாளர்களின்

திறன்களைப் பயன்படுத்தி புதிய மற்றும் பயனுள்ள வேலை வாய்ப்புகளை மேம்படுத்தும் தொழில் நுட்பங்களை உரிய பயனாளிகளுக்கு எடுத்துச் செல்ல தேவையான பயிற்சி மற்றும் பட்டறைகள் நடத்தப்பட்டு வருகிறது. 2022-23 ஆம் ஆண்டில் விவசாயிகள், சுய உதவிக்குழு உறுப்பினர்கள், பெண்கள் மற்றும் இதர அமைப்பினரைச் சார்ந்த 900 பயனாளிகள் பயன்பெற 18 பயிற்சிகள் அளிக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.

### 10.2.13. தொழில்துறைக்கான அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் திறன் வளர்த்தல்

இத்திட்டத்தில் தொழிற்சாலைகள் மற்றும் கல்லூரிகளுடன் இணைந்து பொறியியல் கல்லூரிகள் மற்றும் பலவகை தொழில்நுட்ப கல்லூரிகளில் இறுதியாண்டு பயிலும் மாணாக்கர்களின் திறமைகளைத் தொழில்துறைக்கேற்றவாறு மேம்படுத்துவதும், அவர்கள் தாங்களாகவே சுயதொழில் தொடங்குவதற்கு ஊக்குவிப்பதற்காகவும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2022-23 ஆம் ஆண்டில்

4500 மாணாக்கர்கள் பயனடையும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 10.2.14. கல்லூரிகளின் ஆய்வு மாணவர்களுக்கான நிதியுதவி பற்றாக்குறை களையும் திட்டம்

நமது மாநிலத்திற்குப் பயனுள்ள மற்றும் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு உதவும் ஆய்வுத் திட்ட வரைவுகளைப் பல்வேறு கல்லூரி ஆய்வு மாணவர்களிடமிருந்து பெற்று, அவற்றுள் தேர்வு செய்யப்பட்ட ஆய்வுத்திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. 2022–23 ஆம் ஆண்டில் 10 ஆய்வு மாணவர்களுக்கு நிதியுதவி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 10.2.15. அரசு கல்லூரிகளின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வுக் கட்டமைப்பை மேம்படுத்துதல்

அரசு கல்லூரிகளில் அறிவியல் ஆய்வு மற்றும் மேம்பாடுகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்த, அக்கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நிதியுதவி வழங்கப்படுகிறது.

2022–23 ஆம் ஆண்டில் 3 அரசுக் கல்லூரிகள் பயனடைந்துள்ளன.

## 10.3. ஒன்றிய அரசின் உதவியோடு செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 10.3.1. காப்புரிமை தகவல் மையம்

ஒன்றிய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறையின் நிதியுதவியுடன் காப்புரிமை தகவல் மையம், நமது அறிவுசார் சொத்துரிமைகளைப் பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும், அதற்கான வழி வகைகளை செய்யவும் நிறுவப்பட்டுள்ளது. இம்மையம், 2022–23 ஆம் ஆண்டில் 12 அறிவுசார் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், 7 பயிற்சிப் பட்டறைகளை நடத்தியுள்ளது. உடன்குடி பனங்கருப்பட்டிக்குப் புவிசார் குறியீடு பெற விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

### 10.3.2. பட்டியலின மற்றும் பழங்குடி இன மக்களுக்கான அமைப்பு

பட்டியலின மற்றும் பழங்குடி இன மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த, அறிவியல் தொழில்நுட்ப புதுமைகளைப் பரப்புவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் மண்புழு உரம் தயாரித்தல், காளான் வளர்த்தல், தையல் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் தயாரித்தல் போன்றவற்றில் 271 பட்டியலின மற்றும் பழங்குடியின மக்கள் பயனடையும் வகையில் பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

### 10.3.3. பள்ளி மாணவர்களுக்கான அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) செயல்பாடுகள்

தொழில்நுட்பச் செயற்பாடுகள் மற்றும் செய்முறைகளோடு கூடிய அறிவியலை அறிந்து கொள்வதற்காக 6 முதல் 8 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) செயல்பாடுகள் குறித்து 3 நாட்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

### 10.3.4. கணித மற்றும் அறிவியல் ஆசிரியர்களுக்கு குறைந்த விலை கற்பிக்கும் உபகரணங்கள் கொண்டு பயிற்சியளித்தல்

ஒன்றிய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறையின் ரூ.17.00 இலட்சம் நிதியுதவியில்,

திருவண்ணாமலை, மதுரை மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் 150 கணித ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

ஒன்றிய அரசின் அறிவியல் தொழில் நுட்பத்துறையின் ரூ.15.69 இலட்சம் நிதியுதவியுடன் தமிழகத்தின் மூன்று மாவட்டங்களிலுள்ள 150 அறிவியல் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

### 10.3.5. தேசிய கணித மற்றும் அறிவியல் தின கொண்டாட்டங்கள்

ஒன்றிய அரசின் ரூ.25.00 இலட்சம் நிதியுதவியுடன், தேசிய கணித தினம் (22 டிசம்பர்) மற்றும் அறிவியல் தினம் (28 பிப்ரவரி) கொண்டாடப்பட்டன. வினாடி வினா, கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி ஆகியவைகள் நடத்தப்பட்டன. இந்நிகழ்ச்சிகளில் பல்வேறு மாவட்டங்களிலுள்ள 10,000 க்கும் அதிகமான மாணாக்கர்கள் பங்கேற்றனர்.

## 11. தமிழ்நாடு மாநில உருது கழகம்

**11.1.** மாநிலத்தில் உருது மொழியை வளர்ப்பதற்கு தமிழ்நாடு மாநில உருது கழகம் தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டது. மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் இக்கழகத்தின் தலைவர் ஆவார். தற்போது, மாநிலத்தில் உள்ள கல்லூரிகளில் உருது மொழிப் பாடம் நடத்தப்படுகிறது.

**11.2.** தேசிய வணிகர் கூட்டமைப்புடன் இணைந்து கவிதை கருத்தரங்கம் (Mushairas) நடத்துதல் மற்றும் உருது மொழியில் சிறந்து விளங்கும் கவிஞர்களுக்கும் மற்றும் மாநில அளவில் இடம் பிடித்தவர்களுக்கும் விருது மற்றும் பணப் பரிசு வழங்குதல் ஆகியவை இக்கழகத்தின் பணிகள் ஆகும்.

## 12. தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம்

**12.1.** தொழில்நுட்பக் கல்வியின் வளர்ச்சிக்கான மாநில அளவிலான திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றச் சட்டம், 2010 இன்படி தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம் உருவாக்கப்பட்டு, இம்மன்றம் 17.06.2010 முதல் இயங்கி வருகிறது.

### 12.2. முக்கியச் செயல்பாடுகள்

- பலவகை தொழில்நுட்பப் பட்டயக் கல்வியில் குடிமுறை, இயந்திரம், மின் மற்றும் மின்னணு பொறியியல், மின்னணு மற்றும் தகவல் பொறியியல், மற்றும் கணினிப் பொறியியல், ஆகிய பாடத்திட்டங்களை மறுசீரமைக்க இம்மன்றத்தின் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.25.00 இலட்சம் தொழில்நுட்பக் கல்வி ஆணையருக்கு நிதி உதவி வழங்கப்பட்டு, அதன் அமலாக்கம் மேலாய்வு செய்யப்பட்டது.

- "ஆராய்ச்சியில் அண்மையப் போக்குகள்" என்ற தலைப்பில் அரசு பொறியியல் மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஆசிரியர்களுக்கு இணைய தளம் வாயிலாக இரண்டு நாள் பட்டறை ஒன்று நடத்தப்பட்டது.
- தொழில்நுட்பக் கல்வியின் வளர்ச்சிக்கான முன்னோக்குத் திட்டம் உருவாக்குதல்.

## 13. தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம்

**13.1.** தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகமானது (Tamil Nadu Unmanned Aerial Vehicles Corporation) தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளின் ட்ரோன் அடிப்படையிலான தேவைகளை பூர்த்தி செய்வதற்காக அண்ணா பல்கலைக்கழகத்தின் சென்னை தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து நிறுவப்பட்ட கழகமாகும். பல்வேறு துறைகளான சட்ட அமலாக்கம், சுரங்கம், வருவாய் மற்றும் நகராட்சி நிர்வாகம், நகர்ப்புற மேம்பாடு, நீர் மேலாண்மை, விவசாயம் மற்றும் அது சார்ந்த துறைகள், பேரிடர் மேலாண்மை, சுகாதாரம், வனவியல், தொல்லியல், சுற்றுச்சூழல் ஆய்வுகள் போன்றவற்றை இது உள்ளடக்கும். தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம் நூறு சதவீதம் அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக, நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. அனைத்து வகையான ட்ரோன்களை வடிவமைத்தல், உற்பத்தி செய்தல் மற்றும் வர்த்தகம் செய்வதைத் தவிர விவசாய பூச்சிக்கொல்லி தெளித்தல், கண்காணிப்பு, வரைபடம்

உருவாக்குதல், தேடல் மற்றும் மீட்பு, அளவீட்டு பகுப்பாய்வு போன்ற சேவைகளையும் இக்கழகம் பல்வேறு துறைகளுக்கு வழங்கும். பல்வேறு நிறுவனங்களுக்கு இக்கழகத்தால் வழங்கப்படும் தீர்வுகள்/சேவை மற்றும் தயாரிப்புகள் மாநிலத்தில் வேலை வாய்ப்புகளை உருவாக்கும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 25.01.2022 அன்று தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகத்தை தொடங்கி வைத்தார்.

**13.2.** தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம் தற்போது சென்னையின் முக்கிய நீர்நிலைகளில் ட்ரோன்கள் (Drones) மூலம் கொசு உற்பத்தியைத் தடுக்கும் மருந்துகளைத் தெளிக்கும் பணியைச் சென்னை மாநகராட்சிக்காக நிறைவு செய்துள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் "க்ரிஷி விக்யான் கேந்திராவுக்கு" வேளாண் தெளிப்பான் ட்ரோன்களையும், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளுக்கு 50 கண்காணிப்பு ட்ரோன்களையும், கடலோரப் பாதுகாப்புக் குழு மற்றும் தமிழ்நாடு

காவல்துறைக்கு விநியோக ட்ரோன்களையும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்குப் பூச்சிக்கொல்லி தெளிப்பான் ட்ரோன்களும் இக்கழகத்தால் வழங்கப்பட்டுள்ளது. இன்று வரை, தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம் ரூ.2.25 கோடி மதிப்பிலான திட்டத்தை நிறைவு செய்துள்ளது.

**13.3.** தற்போது, இக்கழகம் ரூ.1.81 கோடி மதிப்பிலான திட்டத்தை நகராட்சி நிர்வாக இயக்குநரிடம் இருந்து பெற்றுள்ளது மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ட்ரோன் சேவைக்காக சிவில் ஏவியேஷன் டைரக்டர் ஜெனரலால் (DGCA) சான்றளிக்கப்பட்ட 12 ட்ரோன் பைலட்டுகளை ஒப்பந்த அடிப்படையில் 1 மாதத்திற்கு வழங்குகிறது. தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகத்திடம் இருந்து ஆளில்லா வான்வழி வாகனங்களைக் கொள்முதல் செய்வதற்குத் தமிழ்நாடு காவல் துறை மற்றும் தமிழ்நாடு அரசு வனத்துறைகளால் அரசாணை வெளியிட்டுள்ளது.

**13.4.** தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 50 சதுப்பு நிலங்களை வரைபடமாக்குதல், தமிழ்நாடு

கடலோர பாதுகாப்புக் குழுவிற்கு விநியோக மற்றும் கண்காணிப்பு ட்ரோன்கள் வழங்குதல், தமிழ்நாடு காவல்துறையின் சிறப்பு அதிரடிப்படைக்கு ஆளில்லா வான்வழி வாகனங்களை வழங்கல் போன்றவற்றிக்கு இக்கழகம் முன்மொழிந்துள்ளது. மணிப்பூர் காவல்துறைக்கு ஆளில்லா வான்வழி வாகனங்கள் மற்றும் சிமுலேட்டர் வழங்கல், ஆளில்லா வான்வழி வாகனங்களை பயன்படுத்தி மூன்று கனிம பகுதியை வரைபடமாக்கி, தமிழ்நாடு கனிமத் துறையிடம் ஒப்படைத்தல் போன்ற பல்வேறு திட்டங்கள் இக்கழகத்தால் முன்மொழியப்பட்டுள்ளது.

**முனைவர் க.பொன்முடி**
உயர்கல்வித் துறை அமைச்சர்

# அமைப்பு வரைபடம்

- முதலமைச்சர்
  - அமைச்சர் (உயர்கல்வி)
    - தலைமைச் செயலாளர்
      - முதன்மைச் செயலாளர் (உயர்கல்வி)
        - துறைகள்
          - தொழில்நுட்பக் கல்வி
          - கல்லூரிக் கல்வி இயக்ககம்
          - தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
          - தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்
          - தேசிய உயர்கல்வித் திட்டத்திற்கான மாநில திட்ட இயக்குநரகம் (RUSA)
          - அறிவியல் நகரம்
          - தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்
          - தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்
          - தமிழ்நாடு மாநில உருது கழகம்
          - தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம்
          - தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம்
        - பல்கலைக்கழகங்கள்
          - சென்னைப் பல்கலைக்கழகம்
          - மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
          - அண்ணா பல்கலைக்கழகம்
          - பாரதியார் பல்கலைக்கழகம்
          - பாரதிதாசன் பல்கலைக்கழகம்
          - அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
          - அழகப்பா பல்கலைக்கழகம்
          - மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
          - பெரியார் பல்கலைக்கழகம்
          - தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
          - திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
          - தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
          - அண்ணாமலை பல்கலைக்கழகம்

# தொழில்நுட்பக் கல்வி

## 2022-23 ஆம் ஆண்டில் பொறியியல் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு பி.இ. / பி.டெக். / பி.ஆர்க். மாணாக்கர்கள் சேர்க்கை விவரம்

| கல்லூரிகளின் வகைகள் | கல்லூரிகளின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் | சேர்க்கை விவரம் | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பொது | | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (மற்றவர் ) | | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம் ) | | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர் | | ஆதி திராவிடர் | | ஆதி திராவிடர் (அருந்ததியர் ) | | பழங்குடியினர் | | மொத்தம் | | மொத்த சேர்க்கை |
| | | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| அரசு கல்லூரிகள் | 11 | 4320 | 647 | 583 | 614 | 444 | 78 | 41 | 466 | 310 | 326 | 247 | 67 | 46 | 18 | 8 | 2216 | 1679 | 3895 |
| அரசு நிதியுதவி பெறும் கல்லூரிகள் | 3 | 3039 | 417 | 365 | 689 | 435 | 61 | 27 | 339 | 189 | 230 | 114 | 41 | 25 | 12 | 7 | 1789 | 1162 | 2951 |
| அண்ணா பல்கலைக்கழக துறைகள் / உறுப்புக் கல்லூரிகள் | 20 | 8210 | 1192 | 1012 | 738 | 641 | 131 | 51 | 600 | 424 | 422 | 334 | 65 | 54 | 21 | 7 | 3169 | 2523 | 5692 |
| சுயநிதி கல்லூரிகள் | 476 | 192427 | 25518 | 16034 | 29629 | 15363 | 3534 | 1030 | 17221 | 7963 | 10216 | 6383 | 1322 | 868 | 458 | 288 | 87898 | 47929 | 135827 |
| மொத்தம் | 510 | 207996 | 27774 | 17994 | 31670 | 16883 | 3804 | 1149 | 18626 | 8886 | 11194 | 7078 | 1495 | 993 | 509 | 310 | 95072 | 53293 | 148365 |
| ஆக மொத்தம் | | | 45768 | | 48553 | | 4953 | | 27512 | | 18272 | | 2488 | | 819 | | 148365 | | |
| # 2022-23 ஆம் கல்வியாண்டில் , மொத்தம் 8 மூன்றாம் பாலின மாணாக்கர்கள் சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கை பெற்றுள்ளனர் . | | | | | | | | | | | | | | | | | | | |

# தொழில்நுட்பக் கல்வி

## 2022–23 ஆம் ஆண்டில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு பட்டய வகுப்பு மாணாக்கர்கள் சேர்க்கை விவரம்

| கல்லூரிகளின் வகைகள் | கல்லூரிகளின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் | சேர்க்கை விவரம் | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பொது | | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (மற்றவர் ) | | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம் ) | | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர் | | ஆதி திராவிடர் | | ஆதி திராவிடர் (அருந்ததியர் ) | | பழங்குடியினர் | | மொத்தம் | | மொத்த சேர்க்கை |
| | | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| அரசு கல்லூரிகள் | 54 | 17790 | 98 | 23 | 3682 | 405 | 507 | 51 | 4460 | 336 | 2213 | 280 | 201 | 45 | 87 | 9 | 11248 | 1149 | 12397 |
| அரசு நிதியுதவி பெறும் கல்லூரிகள் | 34 | 13550 | 200 | 12 | 3196 | 271 | 531 | 35 | 2180 | 152 | 873 | 98 | 165 | 17 | 33 | 10 | 7178 | 595 | 7773 |
| இணைப்பு பெற்ற பயிலகங்கள் | 4 | 253 | 10 | 1 | 28 | 0 | 6 | 0 | 24 | 0 | 11 | 0 | 0 | 0 | 1 | 0 | 80 | 1 | 81 |
| சுயநிதி கல்லூரிகள் | 403 | 130718 | 1682 | 215 | 11329 | 887 | 1963 | 101 | 10676 | 661 | 16473 | 2125 | 1673 | 272 | 476 | 90 | 44272 | 4351 | 48623 |
| உணவு மேலாண்மை மற்றும் உணவு வழங்கல் பயிலகங்கள் | 1 | 30 | 0 | 0 | 3 | 0 | 2 | 0 | 1 | 0 | 7 | 1 | 0 | 0 | 0 | 0 | 13 | 1 | 14 |
| மொத்தம் | 496 | 162341 | 1990 | 251 | 18238 | 1563 | 3009 | 187 | 17341 | 1149 | 19577 | 2504 | 2039 | 334 | 597 | 109 | 62791 | 6097 | 68888 |
| ஆக மொத்தம் | | | 2241 | | 19801 | | 3196 | | 18490 | | 22081 | | 2373 | | 706 | | 68888 | | |


# 2022-23 ஆம் கல்வியாண்டில் , மொத்தம் 3 மூன்றாம் பாலின மாணாக்கர்கள் (1–அரசு கல்லூரி, 2–சுயநிதி கல்லூரி ) பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர்க்கை பெற்றுள்ளனர் .

# கல்லூரிக் கல்வி


## 2022 –23 ஆம் ஆண்டில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் மாணாக்கர்கள் சேர்க்கை விவரம்

| கல்லூரிகளின் வகைகள் | கல்லூரிகளின் எண்ணிக்கை | சேர்க்கை விவரம் | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | இளநிலை | | முதுநிலை | | ஆய்வியல் நிறைஞர் (M.Phil.) | | கல்வியியல் | | ஆராய்ச்சி படிப்பு (Ph.D) | | மொத்தம் | | மொத்த சேர்க்கை |
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| அரசு கல்லூரிகள் | 170 | 46768 | 61980 | 6169 | 12714 | 50 | 83 | 390 | 556 | 105 | 305 | 53482 | 75638 | 129120 |
| அரசு உதவிபெறும் கல்லூரிகள் | 162 | 32390 | 42757 | 5024 | 10140 | 28 | 74 | 134 | 1479 | 188 | 414 | 37764 | 54864 | 92628 |
| சுயநிதிக் கல்லூரிகள் | 1262 | 92231 | 120479 | 12463 | 23772 | 78 | 252 | 8913 | 52839 | 250 | 535 | 113935 | 197877 | 311812 |
| மொத்தம் | 1594 | 171389 | 225216 | 23656 | 46626 | 156 | 409 | 9437 | 54874 | 543 | 1254 | 205181 | 328379 | 533560 |
| ஆக மொத்தம் | | 396605 | | 70282 | | 565 | | 64311 | | 1797 | | 533560 | | |

## முனைவர் பட்டத்திற்கான மாணாக்கர்கள் சேர்க்கை விவரம் (2020-21)




## ஆய்வியல் நிறைஞர் பட்டத்திற்கான மாணாக்கர்கள் சேர்க்கை விவரம் (2020-21)



## புதுமை பெண் திட்டத்தின் கீழ் மாணவியரின் சேர்க்கை விவரம் – 14.03.2023 வரை

| வ. எண் | வகுப்பு | 2021- 2022 இல் முதலாம் ஆண்டு மாணவியரின் சேர்க்கை எண்ணிக்கை | 2022- 2023 இல் முதலாம் ஆண்டு மாணவியரின் சேர்க்கை எண்ணிக்கை | மாணவியரின் சேர்க்கை வித்தியாசம் ((2022–23) – (2021–22)) | சேர்க்கை சதவீதம் (%) |
|---|---|---|---|---|---|
| 1 | பிற்படுத்தப்பட்டோர் | 20542 | 25143 | 4601 | 22 |
| 2 | பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்) | 1940 | 2921 | 981 | 51 |
| 3 | சீர்மரபினர் | 3417 | 4520 | 1103 | 32 |
| 4 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் | 22455 | 30243 | 7788 | 35 |
| 5 | பொது | 601 | 680 | 79 | 13 |
| 6 | ஆதி திராவிடர் | 18279 | 21980 | 3701 | 20 |
| 7 | ஆதி திராவிடர் (அருந்ததியர்) | 2792 | 4761 | 1969 | 71 |
| 8 | பழங்குடியினர் | 871 | 1225 | 354 | 41 |
| 9 | மற்றவர்கள் | 111 | 12 | -99 | -89 |
| **மொத்தம்** | | **71008** | **91485** | **20477** | **29** |

# புதிய பொறியியல் கலந்தாய்வு வழிமுறைகள்– 2022






சென்னை பல்கலைக்கழகத்தில் 16.05.2022 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். மாண்புமிகு ஆளுநர் அவர்கள் பட்டங்களை வழங்கினார்.




**சென்னை மாநிலக் கல்லூரியில் 05.07.2022 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பட்டங்களை வழங்கினார்.**




**அண்ணா பல்கலைக்கழகத்தில் 29.07.2022 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பட்டங்களை வழங்கினார்.**



அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் நீண்ட காலமாக காலியாக இருந்த விரிவுரையாளர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 1024 நபர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 28.09.2022 அன்று பணிநியமன ஆணைகளை வழங்கினார்.




சென்னை இராணி மேரி கல்லூரியில் 22.11.2022 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பட்டங்களை வழங்கினார்



சென்னை மாநில கல்லூரி வளாகத்தில் கட்டடப்பட்டு வரும்
முத்தமிழறிஞர் கலைஞர் கலையரங்கம்.
மாதிரி முகப்பு தோற்றம் – மதிப்பீடு ரூ.63.00 கோடி



சென்னை தரமணி சி.பி.டி. வளாகத்தில் அமைந்துள்ள ஐந்து சிறப்பு தொழில் நுட்ப கல்வி நிறுவனங்களில் உள்கட்டமைப்பு கட்டும் பணி.
மாதிரி முகப்பு தோற்றம் – மதிப்பீடு ரூ.49.52 கோடி



சென்னை பாரதி மகளிர் கல்லூரியில் கட்டடப்பட்டு வரும் கூடுதல் வகுப்பறைகள்,
ஆய்வகங்கள், ஆசிரியர் அறைகள் மற்றும் நூலக கட்டடம்.
மாதிரி முகப்பு தோற்றம் – மதிப்பீடு ரூ.25.00 கோடி



தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் கட்டப்பட்டு வரும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டடம் – மதிப்பீடு ரூ.11.33 கோடி



கோயம்புத்தூர் மாவட்டம் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியின் வகுப்பறை கட்டடம். முகப்பு தோற்றம் – மதிப்பீடு ரூ.8.50 கோடி




**சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் கட்டப்பட்டு வரும் அடிப்படை பொறியியல் ஆய்வு நிறுவன விரிவாக்க கட்டடம். மாதிரி முகப்பு தோற்றம் – மதிப்பீடு ரூ.7.28 கோடி**



சென்னை இராணி மேரி கல்லூரியில் கட்டடப்படவுள்ள மாணவிகள் தங்கும் விடுதி.
மாதிரி முகப்பு தோற்றம் – மதிப்பீடு ரூ.42.00 கோடி



சென்னை பல்கலைக்கழக மெரினா வளாகத்தில் ஆராய்ச்சியாளர்கள்
மற்றும் முதுகலை மாணவர்கள் தங்கும் விடுதி.
மாதிரி முகப்பு தோற்றம் – மதிப்பீடு ரூ.28.05 கோடி

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.